

சட்டம் எல்லோருக்கும் சமமா
இருக்கவேண்டும் பாருங்கோ


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 272 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 08, புதன்கிழமை 24.08.2016


## தமிழ் அரசியல் கைதிகளை தடுத்து வைத்திருப்பது ஏன்?

### நாடாளுமன்றத்தில் சம்பந்தன் கேள்வி

கொழும்பு, ஓக. 24

இலங்கையின் சட்டத்தில் இருப்பதற்குத் தகுதியற்ற சட்டம் என்று அரசினாலேயே விமர்சிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகள் எதற்காக இன்னும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்றில் நேற்றுக் கேள்வியெழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சம்பந்தன் நேற்று முற்பகல் பேச்சு நடத்தினார். அதன் பின்னர் நாடாளுமன்றில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றியபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்புவேளைப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தனது உரையில்: தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் அவர்களின் குடும்பத்தினர், >> 29ஆம் பக்கம்

# அச்சத்தில்

## பேராதனைப் பல்கலை. மாணவர்கள்

### துணைவேந்தர் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கியும் விடுதிகளில் இருந்து வெளியேற மாணவர் தயக்கம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24

சிங்கள மாணவர்களின் தாக்குதலைத் தொடர்ந்து, பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் நேற்றைய தினம் விடுதிக்குள் முடங்கினர். 'வெளியே நடமாடுவதற்கே அச்சமாக இருக்கின்றது. பல்கலைக்கழக துணை வேந்தர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கினாலும், இங்கே தங்கியிருப்பதற்குப் பயமாக இருக்கின்றது' என்று பேராதனைப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்தின் தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் சிலர் மீது சிங்கள மாணவர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, நேற்றுக் >> 04ஆம் பக்கம்

## இனவாத சாயம் பூச வேண்டாம்

### மாணவர்களிடம் தெரிவித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஓக. 24

இது சிறிய விடயம். இனவாத சாயம் பூச வேண்டாம். நாம் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இணைந்து விசாரணை நடத்துகின்றோம்.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான தமிழ் - முஸ்லிம் மாணவர்களிடம் கேட்டனர் பெரதெனிய பொலிஸ் அதிகாரிகள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின், முதலாம் வருட இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்தின் தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு அதே பீடத்தின் இரண்டாம் வருட >> 29ஆம் பக்கம்

## யாழ். பல்கலை. சம்பவத்தின் மீதான அதே அளவு கரிசனை பேராதனைச் சம்பவத்தின் மீதும்வேண்டும்

### இவ்வாறு வலியுறுத்துகிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் சிங்கள - தமிழ் மாணவர்களிடையே மோதல் நடைபெற்று முடிவடைந்த நிலையில், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் அதேபோன்ற சம்பவம் நடைபெற்றுள்ளமை கவலையளிக்கின்றது. இந்த விடயத்தில் அரசு, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணும் பொலிஸார் அதிக அக்கறை எடுத்துத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இது ஒரு சிறு சம்பவம் எனப் புறம் ஒதுக்கிவிடுவது சிறந்தது அல்ல.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நேற்றுமுன்தினம் தமிழ் - முஸ்லிம் >> 27ஆம் பக்கம்

## நிதி நிறுவன நெருக்கீட்டால் விபரீத முடிவுக்கு முயன்றார் பெண்

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக. 24

தவணை அடிப்படையில் மக்களுக்கு நிதி வழங்கும், நிதி நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த பணியாளர்கள் தொந்தரவு செய்கின்றார்கள் என்று தெரிவித்த பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் விபரீதமான முடிவை எடுத்துள்ளார். இருப்பினும் அயலவர்களால் காப்பாற்றப்பட்டுக் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் நேற்று இடம் பெற்றது. >> 04ஆம் பக்கம்

## ரணில் – விக்கி சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்று >> 27ஆம் பக்கம்

### பான் கீ மூன் வருகைக்கு முன்

## நலன்புரி முகாம்களை மூடுவதற்கு அரசு திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 24

அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இவ்வாறானதொரு நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை இந்த மாத இறுதிக்குள் மீள்குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணியில்லாதவர்களுக்கு உடனடியாக அரச காணி வழங்குமாறும், விடுவிக்கப்படக் கூடிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு வீட்டுத் திட்டங்களை அவர்களது சொந்த இடங்களில் வழங்கிக் குடியேற்றுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதியின் மேலதிக செயலர், மீள்குடியேற்ற அமைச்சின் செயலர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர், ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண ஆளுநருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டச் செயலர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் >> 06ஆம் பக்கம்

## காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டத்துக்கு சபாநாயகர் அங்கீகாரம்

கொழும்பு, ஓக. 24

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டத்தில் சபாநாயகர் கருஜயசூரிய நேற்றுக் கையொப்பமிட்டார்.

சட்டவரைவு கடந்த மே மாதம் 22ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. கடந்த 12ஆம் திகதி சட்டவரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை, அதைக் குழப்பியடிக்கும் முயற்சியில் மகிந்த அணி இறங்கியது. எனினும் நீண்ட சர்ச்சைக்கு மத்தியில் சட்டவரைவு வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

இதற்கு மகிந்த அணி கடும் எதிர்ப்பை வெளியிட்டது. அரசமைப்புக்கு முரணாகவே சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது என்றும், அதில் சபாநாயகர் கையொப்பமிடக்கூடாது என்றும் மகிந்த அணி வலியுறுத்தியது. சபாநாயகர் கையெழுத்திட்டால், அவருக்கு >> 06ஆம் பக்கம்

### படைப் புலனாய்வுப் பிரிவுக்கு

## வடக்கு – கிழக்கில் மீண்டும் அதிகாரம்

கொழும்பு, ஓக.24

வடக்கு - கிழக்கில் செயற்பட்டு வரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு புதிய உத்தரவுகள் வழங்கப்பட்டு, அது பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டுவந்த இலங்கையின் இராணுவப் புலானாய்வுப் பிரிவை வடக்கு, கிழக்குக்கான >> 04ஆம் பக்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயச் சூழலில் பாதணியுடன் நடந்தமை; வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24
நல்லூர் ஆலயச் சூழலில் பாதணியுடன் சென்றதாகக் கூறப்படும் இருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய வீதியில் செருப்புடன் நடந்ததாகக் கூறப்படும் இருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர் பொலிஸார். பிணை விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிமன்று இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சொந்தப்பிணையில் விடுவித்தது.

நேற்றுமுன்தினமிரவு இரு இளைஞர்களும் ஆலயச் சூழலில் செருப்புடன் நடந்து சென்றுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. குறித்த இருவரும் ஆலய வீதியில் செருப்புடன் சென்றதாகவும், அவர்களிடம் ஆள் அடையாள அட்டையைக் காண்பிக்கக் கேட்டபோது அதனை அவர்கள் காண பிக்கவில்லை எனவும் பொலிஸார் குற்றசாட்டை முன் வைத்தனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் , யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்கள் மீது முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுப் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரவிசங்கர், ஆலய நிர்வாகத்தால் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதியைச் சட்டமாக்கி கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டா ? என மன்றில் கேள்வி எழுப்பினார். அது பற்றிய விசாரணைக்காக இந்த வழக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நல்லூர் ஆலயத் திருவிழா கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. அதனை முன்னிட்டு ஆலயச் சூழலில் காலணிகளுடன் நடமாடவேண்டாம் என ஆலய நிர்வாகத்தினரும், சமய அமைப்புக்களும் வலியுறுத்தியுள்ளன. (த-4)

### யாழ்ப்பாணம், வவுனியாவில்

# 410 பேரின் உடலில் குண்டுத் துகள்கள்

## நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தது கூட்டமைப்பு

கொழும்பு, ஓக.24
யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 410 பேர் தமது உடல்களில் எறிகணை மற்றும் குண்டுகளின் துகள்களுடன் ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதில் 132 பேர் பாடசாலை மாணவர்களாக உள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

நாடாளுமன்றத்தில் நேற்று விலங்குத்தீன் (திருத்த) சட்ட வரைவு மீதான விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஜூலை மாதம் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமரிடத்திலான நேரடிக் கேள்வி நேரத்தின்போது வடக்கு கிழக்கில் போர் காலத்தில் குண்டு மற்றும் ஷெல் வீச்சுக்களால் பாதிக்கப்பட்டு அவற்றின் துகள்களுடன் ஆபத்தான நிலையில் பாடசாலை மாணவர்கள் இளையோர்கள் உள்ளிட்ட பலதரப்பட்டவர்கள் காணப்படுகின்றார்கள். அவர்களுக்கு அறுவைச்சிகிச்சைவழங்குவதற்கு உரிய நடவடிக்கை உடன் எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தேன். அதற்கு விவரங்களை வழங்குமாறு பிரதமர் கூறியிருந்ததோடு, மீள்குடியேற்ற அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோருடன் கலந்தாலோசித்து உள்நாட்டில் காணப்படும் அவசர வைத்தியசாலைகளில் சிகிச்சையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பிரதமர் கூறியிருந்தார். அத்தோடு தேவை ஏற்படின் வெளிநாட்டு மருத்துவ சிகிச்சைகளையும் வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதற்காக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டச் செயலாளர்களிடம் விவரங்களை வழங்குமாறு கடிதம் மூலம் நான் கோரியிருந்தேன். இந்தக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டு 65 நாள்களாகிவிட்டன. வெறுமனே இரண்டு மாவட்டச் செயலர்கள் தகவல்களை வழங்கியுள்ளனர். அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 410 பேர் இவ்வாறு குண்டுகளுடன் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர். 132 பேர் பாடசாலை மாணவர்கள். இவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அவசியம்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவுஆகியமாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டச் செயலர்கள் இந்தத் தகவல்களை வழங்குவதற்குப் பின்னடிக்கின்றனர். நல்லாட்சி அரசில் மக்களுக்குச் சேவையாற்ற நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகள் இவ்வாறு பின்னடிக்கின்றனர். 65 நாள்களாகியும் அவர்கள் கடிதம் கிடைத்தது என்றுகூடப் பதிலளிக்காமை கவலையளிக்கிறது - என்றார். (வ-5)

## நல்லூரானுக்கு இன்று இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 24
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் இன்று நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவில் சண்முகப் பெருமானுக்கு 8 திக்குகளிலும் இசை அர்ச்சனை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (வ)

## இளம் பெண் மீது படைச் சிப்பாய் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 24
இளம் பெண் ஒருவரைத் தாக்கியதாக இராணுவச் சிப்பாய் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. தாக்குதலுக்குள்ளான இளம் பெண் முழங்காவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

முழங்காவிலில் நேற்று அதிகாலை.இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் அதேயிடத்தைச் சேர்ந்த 21 வயது இளம் பெண்ணே காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்களின் தரப்பினர் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணின் தந்தை கோபத்தின் காரணமாக குறித்த இராணுவச் சிப்பாய் மீது தாக்கிதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த இராணுவச் சிப்பாய் முழங்காவில் பகுதியிலேயே வசிப்பதோடு, இதற்கு முன்னரும் பலருடன் தகராறில் ஈடுபட்டமை தொடர்பில் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. எனினும் எந்த முறைப்பாடு தொடர்பிலும் அவருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (வ-4,101)

## மோதிவிட்டுத் தப்பியது வாகனம்; ஒருவர் காயம்

தென்மராட்சி, ஓக. 24
மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றது வாகனம். ஆள் நடமாட்டம் குறைந்திருந்தமையால் இதனை எவரும் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் கோப்பாய் - கைதடிப் பாலத்தில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளால் வீழ்ந்து காயமடைந்தவர் சுயநினைவு வந்த பின்னர் தனக்குத் தெரிந்த ஓட்டோச் சாரதிக்குத் தகவல் தெரிவித்துள்ளார். அங்கு சென்ற ஓட்டோச் சாரதி காயங்களுக்கு இலக்கான நிலையில் காணப்பட்டவரை ஏற்றிச் சென்றார். காயமடைந்தவர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார். (த-9)

## போதையில் அநாகரிகம்

யாழ்ப்பாணம், ஓக. 24
போதையில் அநாகரிகமாக நடந்த கொண்ட ஒருவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது மல்லாகம் நீதிமன்று.

அவரை 30 மணித்தியாலங்கள் சமுதாயச் சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்துமாறும் மன்று உத்தரவிட்டது. சுன்னாகம் பொலிஸார் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர். (த-107)

## யாழ். நகர வர்த்தகர்கள் 10 பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.24
அத்தியாவசிய உணவுப் பொருள்களை நிர்ணயித்த விலைக்கு அதிகமான விலையில் விற்பனை செய்த யாழ். நகர வர்த்தகர்களுக்கு தண்டம் விதித்தது யாழ். நீதிவான் மன்றம்.

பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை நிர்ணயிக்கப்பட்டவிலையிலும் பார்க்க அதிக விலைக்கு விற்பனை செய்தமை, காலாவதியான - பழுதடைந்த பொருள்களை விற்பனை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து யாழ். நகரைச் சேர்ந்த 10 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரிகள்.

கடந்த வாரம் யாழ்ப்பாண நகரப் பகுதியில் அமைந்துள்ள கடைகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களினால் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது கட்டுப்பாட்டு விலையான 169 ரூபாவிற்கும் அதிக விலைக்கு பருப்பை விற்பனை செய்த 5 வர்த்தகர்களுக்கும், காலாவதித் திகதி முடிவடைந்த பிஸ்கற் மற்றும் உணவுப் பொருள்களை விற்பனை செய்ய முயற்சித்த 5 வர்த்தகர்களுக்கும் எதிராக யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று வழக்குத் தொடரப்பட்டது. 10 வர்த்தகர்களும் தமக்கெதிரான குற்றச்சாட்டை மன்றில் ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் பதில் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன். (வ-4,103)

## ஆமணக்கம் விதை உட்கொண்ட 6 சிறார்கள் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஓக. 24
பருத்தித்துறைப் பகுதியில் ஆமணக்கம் விதையை உட்கொண்ட 6 சிறார்கள் சிகிச்சைக்காக நேற்று மாலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று மாலை வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 5 வயது தொடக்கம் 8 வயதுக்கு உட்பட்ட உறவினர்களான 6 சிறார்கள் ஆமணக்கம் விதையை உட்கொண்டமையினால் உபாதைக்கு உள்ளாகினர். அதனால் அவர்கள் உடனடியாக பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (வ-101)



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் குருநாகலில் ஜனாதிபதி தலைமையில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த நிலையில், யாழ். நகரப் பகுதிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நீல வர்ணக் கொடிகள் பரவலாகக் கட்டிப் பறக்கவிடப்பட்டுள்ளன. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் கடித்து 3 மாதமாகியும் தடுப்பூசி போடத் தவறியதால் குடும்பத்தலைவர் நேற்றுச் சாவு

விசர் நாய்க் கடிக்கு உள்ளானவர் உரிய தடுப்பூசி போடத் தவறியதனால் 3 மாதங்களின் பின்னர் நேற்று திடீர் வயிற்று வலியால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராயப்பர் அன்ரனி (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். இளவாலைக்கு வந்திருந்த போது நேற்றுமுன்தினம் அவருக்குத் திடீரென வயிற்று வலி ஏற்பட்டது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு தண்ணீரைப் பார்த்ததும் பதற்றமடைந்தார். அதுமட்டுமன்றி விசர் நாய்க் கடிக்கு இலக்கானோரின் நோய் அறி குறிகளும் தென்பட்டன. அதனால் அவர் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காது நேற்று மாலை 6 மணிளயவில் அவர் உயிரிழந்தார். சடலம் விசா ரணை மற்றும் பரிசோதனைக்காக வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-4,36)

## 1 லட்சத்து 45ஆயிரம் ரூபா; 14 சாரதிகளுக்குத் தண்டம்

### *விதிமுறை மீறிச் சாரத்தியம்*

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 14 சாரதிகளுக்கு ஒரு இலட்சத்து 45ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது மல்லாகம் நீதிமன்று.

மானிப்பாய் போக்குவரத்துப் பொலிஸார் தாக்கல் செய்த நான்கு வழக்குகளுக்கு 39 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸார் தாக்கல் செய்த 6 வழக்குகளில் ஒருவருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாவும், மற்றொருவருக்கு 15 ஆயிரத்து 500 ரூபாவும், 4 பேருக்குத் தலா 9 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. போதையில் வாகனம் ஓட்டியவருக்கு எதிராக இளவாலைப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் காங்கேசன்துறை பொலிஸாரினால் கைதான இரு சாரதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபாவும், மற்றொருவருக்கு 16 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. தண்டம் விதிக்கப்பட்ட அனைத்துச் சாரதிகளையும் 30 மணித்தியால சமுதாய சீர்திருத்தத்துக்கு உட்படுத்துமாறும் நீதிமன்று சமுதாய சீர்திருத்த அதிகாரிக்குக் கட்டளை பிறப்பித்தது. (த-4-107)

**பெயர்மாற்றம்**

தாவடி கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த **சோம்சுந்தரம் பாஸ்கரன்** ஆகியநான் எனது பெயரை இன்றிலிருந்து **சோமசுந்தரம் ராஜு** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்ப மிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சோமசுந்தரம் ராஜு

**பணியாளர் வெற்றிடம்**

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
**சந்தைப் படுத்தல் உத்தியோகத்தர்**
மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு உரியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்
காலம்: 05.09.2016 முன்பதாக சுய விவரக் கோவை அனுப்பும் முகவரி
**முகாமையாளர்,**
**மனிதவளப்பிரிவு, இல. 32, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.**

**காணி விற்பனைக்கு**

அரசகேணி பளையில் (A9 வீதியில் இருந்து 1/2 Km தூரத்தில்) உள்ள 46 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6783725

**வேலையாள்கள் தேவை**

* அளவெட்டியிலுள்ள Beauty Parler ஒன்றுக்கு பெண் தேவை.
* பான்சி கடை ஒன்றுக்கும் பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: 077 491 1974

கோடீபதி ஶனிදා
039
2016.08.23
அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 91,926,060/=
2016.08.26 வெள்ளிக்கிழமை செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
T 11 25 34 75
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 011 4 824 824

நியத்த ஜய
வெற்றி வாரம்: 490
திகதி: 23.08.2016
வர்ணம்: மஞ்சள்
08 17 20 37 I
ரூ 12,060,960/=
2016.08.26

லக்ன
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 23.08.2016
வெற்றி வாரம் 2021
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
01 36 43 45
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,000,000 /-

**பாதுகாப்பு ஊழியர் தேவை**

அங்கர் செக்குரிட்டிஸ் சேவிஸ் ஊடக அரச நிறுவனங்களில் வேலை செய்ய விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு சமர்ப்பிக்க முடியும் .
யாழ்ப்பாணத்தில் வேலை செய்ய விரும்புவோர்.
Mr.s. பாலதாஸ் -077 539 6350
வவுனியாவில் வேலை செய்ய விரும்புவோர்.
077 239 2850 / 077 320 6484

நிர்வாகம்.(A.S.S)

**"நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம்"**
**செயல் திறன் அரங்க இயக்கத்தின்**

**நல்லூர் நாடகத் திருவிழா – 2016**

பலவகையான நாடகங்களுடன்
தென்னிந்திய நாட்டார் கலைகளின் சிறப்பு ஆற்றுகைகளும் நடைபெறுகின்றன.

**24.08.2016 - 25.08.2016 மாலை 7.00மணி**
**மாநகரசபை முன்பாக நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பஞ்சபூத அரங்கு**

**24.08.2014 (புதன்கிழமை)**
பிரதம விருந்தினர்
கௌரவ றெஜினோல்ட் கூரே
ஆளுநர் - வடக்கு மாகாணம்

நிகழ்ச்சிகள்
- கரகாட்டம்
- ஒயிலாட்டம்
- பறையிசை
- பாரம்பரிய சிங்கள நடனம்
- கண்டிய நடனம்
- குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "முயல்ரர் முயல்கிறார்" (சிறுவர் நாடகம்)
- தே. தேவானந்தின் "புதையுண்ட சடங்குகள்" (நாடகம்)
- தே.தேவானந்தின் "தூவானம்" (நாடகம்)
- தே.தேவானந்தின் "இரகசியப் படுகொலை" (நாடகம்)

**25.08.2016 (வியாழக்கிழமை)**
பிரதம விருந்தினர்
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நிகழ்ச்சிகள்
- நெடுங்குச்சியாட்டம்
- சுளகாட்டம்
- பறையிசை
- பாரம்பரிய சிங்கள நடனம்
- குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "ஆரோடு நோகேன்" (நாடகம்)
- தே. தேவானந்தின் "இரகசியப்படுகொலை" (நாடகம்)
- குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "கூடி விளையாடு பாப்பா" (சிறுவர் நாடகம்)

ஆதரவாளர்
USAID SPICE - நிகழ்ச்சித்திட்டம்

ACTIVE THEATRE MOVEMENT

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விபரீத...

'கிளிநொச்சியைச் சேர்ந்த நிதி நிறுவனம் ஒன்றின் பணியாளர் கள் மூவர் நிதி நிறுவனத்தால் தவணை அடிப்படையில் (லோன்) மக்களுக்கு வழங்கப்பட்ட நிதியை வசூலிப்பதற்காக நேற்றைய தினம் காலை 6 மணியளவில் பொன்நகர் பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். தவணைப் பணத்தை செலுத்துமாறு கேட்டுள்ளனர். அந்தப் பெண் விடியற்காலையில் பணத்தைத் தன்னால் கொடுக்க முடியாது என்றும், சிறிது நேரத்தின் பின்னர் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நிறுவனத்தைர் சேர்ந்த பணியாளர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த அந்தப் பெண்ணைத் தகாத வார்த்தைகளால் பேசி, அவர்கள் அணிந்திருந்த தலைக் கவசத்தால் அடிக்க முற்பட்டுள்ளனர். இதைத் தாங்கிக் கொள்ள முடியாத பெண் வீட்டினுள் சென்று கதவை அடைத்து விபரீதமான முடிவுக்கு முயற்சித்தார்' என்று சம்பவத்தை நேரில் கண்ட அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதை அவதானித்து கொண்டிருந்த அயலவர்கள் உடனடியாக பெண்ணின் வீட்டினுள் சென்று அவரை மீட்டுள்ளனர். சம்பவத்தை பார்த்த மற்றுமொரு பெண் மயக்கமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

"நிதி நிறுவனத்தினரிடம் இருந்து 75 ஆயிரம் ரூபா பணத்தைத் தவணை அடிப்படையில் பெற்றுக் கொண்டேன். அதில் பெருமளவு பணத்தை செலுத்தியுள்ளேன். இன்னும் 7 தவணைகள் பணம் செலுத்த வேண்டி உள்ளது. ஒரு தவணைக்கு உரிய பணத்தைக்கட்டவில்லை என்று தெரிவித்தே அவர்கள் காலை 6 மணிக்கு (நேற்று) வீட்டுக்கு வந்தார்கள். என்னைத் தகாத வார்த்தைகளால் பேசினார்கள். தலைக் கவசத்தால் அடிக்க முற்பட்டார்கள். எனவேதான் நான் அந்த முடிவுக்கு வந்தேன்' என்று பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள பெண் தெரிவித்தார்.

மாலை 5 மணிக்கு பின்னர் எந்த ஒரு நிதி நிறுவனமும் வீடுகளுக்கு சென்று பணம் வசூலிப்பில் ஈடுபடக்கூடாது என்று கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் உத்தரவிட்டிருந்தார். இதேபோன்றொரு தீர்மானத்தை வடக்கு மாகாண சபையும் நிறைவேற்றியிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே, அதிகாலை வேளையில் சென்று பண வசூலிப்பை நிதி நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளன.(த-5-21-ரி3)

## அச்சத்தில்...

காலை பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் தமக்கு இங்கே பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து எழுத்து மூலமாக பல்கலைக் கழக நிர்வாகத்திடம் அறிவித்துவிட்டு வெளியேற முற்பட்டனர். இருப்பினும், அதற்கு முன்னதாகவே பல்கலைக்கழக நிர்வாகம் விடயத்தை அறிந்து தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் அனைவரையும் கலந்துரையாடலுக்கு அழைத்தது. பேராதனைப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் 4 வருடங்களையும் சேர்ந்த தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மாத்திரம் அழைக்கப்பட்டனர். பாதுகாப்புக்கான உத்தரவாதம் உங்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம். நீங்கள் இங்கிருந்து வெளியேறும் முடிவைக் கைவிடுங்கள். தேவையான இடங்களில் பாதுகாப்பு ஊழியர்களை நிறுத்துகின்றோம்.

இது சிறிய பிரச்சினை. உரிய நடவடிக்கையை நாம் எடுக்கின்றோம். இனவாதப் பிரச்சினையாக இதனை மாற்ற வேண்டாம். ஏதாவது பிரச்சினை நடந்தால் நீங்கள் நேரடியாக எங்களுடைய அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விடயத்தை தெரிவியுங்கள். அச்சமின்றி உங்கள் கற்றலைத் தொடரலாம் என்று மாணவர்களிடம் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

மாலை (நேற்று) வரையில் எந்தவித பாதுகாப்பும் ஏற்படுத்தித் தரப்படவில்லை. நாம் அச்சத்தின் காரணமாக விடுதிகளை விட்டு வெளியேறாமல் உள்ளே முடங்கிக் கிடக்கின்றோம்' என்று மாணவர்கள் குறிப்பிட்டனர். தாக்குதலில் காயமடைந்து பேராதனை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் நேற்று நண்பகலுடன் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்று வெளியேறினர். (வ-5)

## வடக்கு...

பிரதான புலனாய்வு அமைப்பாக செயற்படுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் பௌத்தமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிரான உணர்வலைகள் அதிகரித்துள்ள நிலையிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையிலுமே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு பதவியேற்ற பின்னர் வடக்கு, கிழக்கின் புலானாய்வு நடவடிக்கைகளுக்குப் பொலிஸாரே பொறுப்பாகவுள்ளனர் என பன்னாட்டு சமூகத்துக்கு காண்பிப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டு வடக்கு, கிழக்கின் புலனாய்வு நடவடிக்கைகளுக்கான பொறுப்பு இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராக 2006ஆம் ஆண்டில் கோத்தபாய ராஜபக்ச பொறுப்பேற்ற பின்னரே, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. பன்னாட்டளவில் பயன்படுத்தப்படும் பயங்கரவாத எதிர்ப்புத் தந்திரோபாயங்களை மையமாக வைத்து இதனை அவர் மாற்றியமைத்தார்.

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் 12 டிவிசன்களில் 11 டிவிசன்கள் வடக்கு, கிழக்கில் பணிக்கு அமர்த்தப்பட்டன.

கோத்தபாய ராஜபக்சவால் பலப்படுத்தப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவை புதிய அரசு எவ்வித மாற்றங்களுமின்றி வடக்கு, கிழக்கில் அனுமதித்திருந்தது. இந்த நிலையில், தற்போது அதன் செயற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ-4)

**Personal Class**

தரம் 03 - A/L வரையான A/L எடுத்த மாணவர்களுக்கும் English, Spoken with Grammar, சிங்களம், பேச்சுசிங்களம் என்பன வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: 077 836 1521

**வீடு விற்பனைக்கு**

சித்தன்கேணி , டச்சு வீதியில் 100 மீற்றர் தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

076 615 1492

**வீடு வாடகைக்கு உண்டு**

இல.751A. பழையபூங்கா வீதி(பிள்ளத்தாச்சி றோட்சந்தி) யாழ்ப்பாணத்தில் 5அறைகள். சமையலறை - 01. இணைந்த குளியலறை - 02 வீட்டைச்சுற்றி வாகனத் தரிப்பிடவசதி. முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், மருத்துவ வசதிகளுக்கும் கொடுக்கப்படும்.

077 949 1146/ 077 666 8947/ 077 479 9480

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**வேலையாள்கள் தேவை**

- கனரக சாரதி
- கணக்கு வேலை தெரிந்தவர். (கணினி அறிவுடையவர்கள்)
- அலுவலக உதவியாளர்

போன்ற வேலைகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை.

தொடர்பு பெயின்ட் கொம்பனி. பருத்தித்துறை வீதி, நீர்வேலி, வில்லு மதவடி. 077 769 0398

**வேலையாள்கள் தேவை**

கைதடி மற்றும் நுணாவில் பகுதியிலுள்ள இருபலசரக்குக் கடைகளுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

077 359 4280, 077 530 5883

**காணி விற்பனைக்கு**

நீர்வேலியில் 4 பரப்புத் தோட்டக் காணியும் (கமுகுகளுடன்), சரசாலை மத்தியில் 10 பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.

077 592 6028, 077 232 5140

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு

01. Electrician - Rs.18000/=
02. Showroom Marketing Sales & Executives (Girls)- Rs.18000/=
03. Showroom boys -Rs.18000/=
04 Heavy Vehicle Drivers - Rs 25000/=
   - 25 Days Work for Month
   - Time 9.00 AM 8.00 PM

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

திங்ஸ் எலக்ரோனிக்ஸ், வேம்படி சந்தி அருகில் 12 , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 454 6699

**IMMEDIAT VACANCY**

Special Vacancy in MNC Srilanka (Northern Province)

வடக்கில் வியாபித்துள்ள எமது நிறுவனத்தில் சிறந்த வேலைவாய்ப்பு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிக்கலாம்.

- உயர் சம்பளம்
- நிரந்தர வேலைவாய்ப்பு
- தகைமை :-(O/L,A/L)இம்முறை A/L எழுதியவர்களுக்கு முக்கியத்துவம்
- அனுபவம் அவசியமில்லை.

077 664 4442, 077 556 6224

**சாயி சங்கீதா**




சகல விதமான இசைக்கருவிகள், உதிரிப்பாகங்கள் உண்டு.

U.G. 53, பீப்பல்ஸ் பார்க். கேஸ் வேர்க் வீதி. கொழும்பு 11.

தொலைபேசி. 0112 384222 / 0727 834 834

உங்கள் மனங்கவரும் சங்கீதக் கருவிகளை யாழ் நகரிலும் பெறலாம்.

**கேள்வி கோரல்**

பூநகரி வாடியடியில் அமைக்கப்படும் புதிய எரிபொருள் நிலையத்திற்கான கட்டட, தளவேலைக்குரிய கீழ் காண் வேலைத்திட்டங்களுக்கான கேள்வி கோரல்

1. மேசன் கூலி - 1 நாள் கூலி எவ்வளவு. உணவு அடங்கலாக
2. கூலியாள் - 1 நாள் கூலி எவ்வளவு. உணவு அடங்கலாக
3. சுவர் பூச்சு ஸ்குவயருக்காகிய கூலி எவ்வளவு
4. J.C.P வேலை ஒரு மணித்தியாலத்திற்காகிய கூலி எவ்வளவு
5. தள வேலைக்கான கிரவல் 3 கியூப் கொண்ட 1 டிப்பர் லோட் எவ்வளவு
6. கட்டட பாவனைக்கான தண்ணீர் பவுசர் மூலம் வழங்கல் 1 லீற்றருக்கு எவ்வளவு

- கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளும் நடைமுறை 24.08.2016 தொடக்கம் 31.08.2016 வரை பொறுப்பேற்றுக்கொள்ளப்படும்.
- விண்ணப்பங்கள் யாவும் மூடி ஒட்டப்பட்ட தபால் உறையில் என்ன வேலைக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு கேள்வி கோரல் என மேற்பக்கத்தில் குறிப்பிட்டு **தலைவர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்னும்** முகவரிக்கு 31.08.2016 இற்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
- மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

து. இரத்தினசிங்கம்
தலைவர்,
077 246 3027

ம.ஜெயகுமார்
பொது முகாமையாளர்
077 816 3029

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி

**ஓர் அரிய சந்தர்ப்பம்**
**உங்கள் கனவுகளை இன்றே அடைந்திட!**

இலங்கையில் 54 வருடங்கள் மக்களுக்கு சேவையினை வழங்கி வரும் சிறிலங்கா இன்சூரன்ஸ் கிளிநொச்சிக் கிளையில் காப்புறுதித் துறையில் பணியாற்றிட ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள், ஓய்வு பெற்ற அரச மற்றும் தனியார் நிறுவன உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

A/L பரீட்சையின் பின்னர்???

விண்ணப்பதாரிகள்:-

1) 18 வயதுக்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
2) கல்வி பொது சாதாரண தர பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறுபாடங்கள் சித்தி
3) கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட வதிவிட விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 31.08.2016

விண்ணப்ப முகவரி:
முகாமையாளர் - சிறிலங்கா இன்சூரன்ஸ்
இல.31, A9 வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்து ஆறாண்டாகியும் வீட்டு வசதிகள் கிடைக்கவில்லை

## துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஓக. 24

மக்கள் மீள்குடியமர அனுமதிக் கப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந் துள்ளன. இன்னமும் 816 குடும் பங்களுக்கு வீட்டு வசதிகள் வழங் கப்படவில்லை. பிரதேசத்தின் வீதிகளும் மோசமாகச் சேதம டைந்துள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட் டத்தைச் சேர்ந்த துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு மக்கள் குற்றஞ்சாட்டினார்.

அவர்கள் தெரிவித்ததாவது– எமது பிரதேசம் போரால் கடுமை யாகப் பாதிக்கப்பட்டது. மக்கள் மீள் குடியமர்வு முடிந்துள்ளது. மக் களுக்கான அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக்கப் படவில்லை. பிரதேசத்தின் வீட் டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அதேவேளை கல்வி, சுகாதாரம், தொழில் மேம்பாடு அனைத்துக் கும் முக்கியமாக விளங்கும் வீதி களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். உயிலங்குளம், கோட்டை கட்டியூடான அம்பலப்பெருமாள் குளம் வீதி மற்றும் ஆலங்குளம் கொக்காவில் வீதிகள் மிகவும் மோசமடைந்துள்ளன. இந்த வீதி கள் தொடர்பாக உடன் கவனம் எடுக்க வேண்டும் – என்றனர்.

துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்ததாவது:


3 ஆயிரத்து 786 குடும்பங் களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 855 மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் வீட்டுத் தேவைக் காக இந்திய வீட்டுத்திட்டம் உள் ளிட்ட அனைத்து வீட்டுத் திட்டங் களின் ஊடாகவும் 2 ஆயிரத்து 43 வீடுகள் அமைத்து கொடுக் கப்பட்டன. பகுதித் திருத்தத்தின் கீழ் 470 வீடுகள் சீரமைத்துக் கொடுக்கப்பட்டன. மீள் குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தில் 59 வீடுகள் கிடைத்தன. மொத்த மாக 2 ஆயிரத்து 572 குடும்பங்களுக்கான வீட்டு வசதி கள் ஏற்படுத்தப்பட்டன.

3 ஆயிரத்து 786 குடும்பங்களில் 2 ஆயிரத்து 572 குடும்பங் களுக்கான வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்துள்ளோம். எஞ்சிய குடும்பங்களின் வீட்டுத் தேவை யைப் பூர்த்தி செய்வதற்கு இன் னமும் 816 வீடுகள் தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளோம்.

மக்கள் சுட்டிக்காட்டிய இரு வீதி களும் மிகவும் சேதமடைந் துள்ளமை தொடர்பில் வீதிகளை ஆளுகை செய்யும் வீதி அபி விருத்தித் திணைக்களத்துக்கு பரிந்துரைத்துள்ளோம். அவற் றைப் புனரமைக்க வேண்டிய அவசியம் தொடர்பில் சம்பந் தப்பட்ட அனைத்துத் தரப்பினரது கவனத்துக்கும் கொண்டு செல் லப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் அவை சீரமை க்கப்படும் வாய்ப்புக்கள் உள் ளன.– என்றார். (ற–5–10)

# வளர்த்தவரைக் காப்பாற்ற தன்னுயிரைத் துறந்த நாய்

## கல்வியங்காட்டில் துயரச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக. 24

ராஜ நாகத்துடன் போராடி உரிமையா ளரின் உயிரைக் காப் பாறி தனது உயிரைப் பறிகொடுத்தது சீபா என்று அழைக்கப்படும் அல்சேசன் இனத்தைச் சேர்ந்த நாய். நாயின் உயிரைப் பலியெடுத்த ராஜ நாகத்தை வீட்டு உரிமை யாளர் மடக்கிப் பிடித்து அடைத்த போதும், அது யாருக்கும் தெரி யாமல் தப்பியோடியது.

இந்தச் சம்பவம் நடந்தது வெளி நாட்டில் அல்ல. யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுப் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கல்வியங்காடு விளையாட் டராங்க வீதியில் உள்ளது செல்வ ரட்ணம் பிரசாந்தின் வீடு. அவர் 8 ஆண்டுகளாக வளர்த்த அல்சேசன் இன நாயின் பெயர் சீபா. நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் சீபா வீட்டின் பின்புறம் ஓரிடத்தைப் பார்த்து அசாதாரணமாகக் குரைத்தது. அதை அவதானித்த பிரசாந்த் அங்கு சென்று பார்த்தார். 8 அடி நீளமான ராஜநாகம் ஒன்று சீறிய வண்ணமிருந்தது. அவர் நாகத்தை அங்கிருந்து தடி மூலம் அகற்ற முயன்றார். ராஜநாகம் பிரசாந்தின் பக்கம் சீறி தீண்ட முற்பட்டது. அருகில் இருந்த சீபா நாகத்தின் மீது பாய்ந்தது. நாகத்தை வாயால் கௌவி அப்பால் கொண்டு சென்றது. நாகத்துக்கும் சீபா வுக்கும் இடையே மோதல் ஏற் பட்டது. அதில் சீபாவின் காலில் நாகம் தீண்டியது.

நாயை ஒருவாறு நாகத்திடம் இருந்து மீட்டனர். உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். நாகத்தைப் பிடித்துக் கூட்டில் அடைத்தனர். வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட சீபா சிகிச்சை பயனளிக்காது உயிரி ழந்து விட்டது.

நேற்றுமுன்தினம் அடைத்து வைத்த ராஜநாகத்தை நேற் றுக்காலை பார்த்தபோது அது காணாமல் போயிருந்தது.

சீபாவின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன. அதில் அதிக எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

சீபாவை 8 ஆண்டுகளாகவளர்த்து வருகின்றேன். என்னுடனும் எனது குடும்பத்தினருடனும் நன்றாகப் பழகியது. சீபாவின் இறப்பு எமக்கு பெரும் இழப்பு. இந்தத் துயரத் தில் இருந்து மீள சிறிது காலம் செல்லும். சீபாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம் – என்று பிரசாந்த் கூறினார். (ற–5)

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர் நாளை

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு 108 கலச அபிசேகம், விசேட பூசை, கொடித்தம்ப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம் பெறும். தொடர்ந்து ஸ்ரீதேவி, பூமாதேவி சமேத வர தராஜப் பெருமாள் உள்வீதி வலம் வந்து நண்பகல் 12 மணிக்கு தேர் உற்சவம் நடைபெறும்.

இரதோற்சவத்துக்கு உள்நாடு மற்றும் வெளி நாடு களில் இருந்து வருகை தரும் ஏராளமான பக் தர்கள் ஒன்றுகூடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படு வதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பக்தர்களின் வசதி கருதி யாழ். காரைநகர் சேவை யில் ஈடுடும் 782,785,786 வழி இலக்க அரசு, தனியார் பஸ்கள் ஆலயம் வரை சேவையில் ஈடுபடவுள்ளன.

ஆலயத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்த் துக்கொள்வதற்காக பக்தர்கள் தமது அனைத்து வாகனங்களையும் வாகன பாதுகாப்பு நிலை யங்களில் நிறுத்த வேண்டும் எனக் கோரப் பட்டுள் ளது. (ற–ரி)

# சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

## வாழ்த்துச் செய்தி



யா/யூனியன் கல்லூரியின் அதிபர் திரு.க. இரத்தினகுமார் அவர்கள் அகவை அறுபதினை அடைவதையிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

1979 ஆம் ஆண்டிலே தனது இருபத்துமூன்றாவது வயதிலே ஆசிரியப் பணியில் பதவியேற்று கல்விப் புலத்திலே காலடி எடுத்துவைத்த திரு. க. இரத்தினகுமார் அவர்கள் தனது முப்பத்தேழு வருட கல்விச் சேவையிலே ஆசிரியராக, பதில் அதிபராக, அதிபராக, பதில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக எனப் பல பதவிகளை வகித்து அனுபவம் பொருந்திய இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 அதிபராக சிறப்பான பணியினை ஆற்றி இன்று ஓய்வு பெறுகின்றார்.

இவர் ஏறத்தாழ ஆறு பாடசாலைகளில் அதிபராகவும், நான்கு பாடசாலைகளில் பதில் அதிபராகவும் கடமையாற்றிருப்பதால் அதிபர் சேவையில் சிறப்புத் தேர்ச்சியினைப் பெற்றவர். தனது சேவைக்காலத்தின் பெரும் பகுதியினை வெளிமாவட்டங்களிலே பல இன்னல்களுக்கு மத்தியில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். கடந்த 2011 ஆம் ஆண்டிலேயே எமது வலயத்தின் 1AB பாடசாலையும், இரு நூற்றாண்டுகள் பழமைவாய்ந்ததுமான யா/யூனியன் கல்லூரியில் கடமையேற்று ஐந்தாண்டுகளாக எமது வலயத்தில் கடமையாற்றி யுள்ளார். கல்விப் புலத்திலே ஏறத்தாழ நான்கு தசாப்த கால அனுபவத்தில் பல கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பல்வேறு துறைசார்ந்தவர்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. தனது சேவைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய திரு. க. இரத்தினகுமார் அவர்கள் தனது ஓய்வு காலத்திலே தனது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வளமான வாழ்வுவாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

செல்வரட்ணம் சந்திரராஜா
SLEAS : 1
கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்.



**திரு.வே.க. இரத்தினகுமார்**
**[அதிபர்]**
B.A,PGD.Ed,M. Ed,SLPS-I

## வாழ்த்துச் செய்தி



இருநூறு ஆண்டுகாலப் பழமை வாய்ந்த கல்லூரியாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளங்குகின்றது. பழமை வாய்ந்த கல்லூரியாகக் காணப்படுகின்ற போதிலும் அது என்றும் புதுமையோடு இளமை மாறாமல் விளங்குகின்றது. கல்லூரியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயின்று பல்வேறு சிறப்புக்களைப் பெற்றிருக்கிறார்கள். பல்வேறு பணிகளில் சிறந்து விளங்குகிறார்கள். கல்லூரியில் பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பை நல்கியிருக்கிறார்கள், நல்கிக் கொண்டிருக்கிறார்கள் ' அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி ' என்கின்ற அடிப்படையில் நிறுவனத்தின் தலைவர் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தூணாக விளங்குவார். கல்லூரியின் வளர்ச்சியில் அதிபர்களின் பணியும் இவ்வகையினதாகவே அமைந்து விடுகின்றது. இந்த வகையில் எமது கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வு பெறுகின்ற திரு.க. இரத்தினகுமார் அவர்களின் பணியும் சிறந்ததொன்றாகக் காணப்படுகின்றது. கல்வித்துறை, விளையாட்டுத்துறை, இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்ற பல்வேறு துறைகளில் வலய, மாகாண, தேசிய ரீதியான பல வெற்றிகளை இவரது காலப்பகுதியில் கல்லூரி பெற்றிருக்கிறது. இன்று அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்ற திரு.க.இரத்தினகுமார் அவர்கள் தனது அறுபதாவது பிறந்தநாளையும் கொண்டாடுகிறார். அவரை அவர் செய்த பணிகளுக்காக அவரது சேவையைப் பாராட்டுவதோடு அவருக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம். தனது ஓய்வு காலத்தில் பல்வேறு சிறப்புக்களையும் பெற்று சிறப்பான ஒரு வாழ்வை வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனின் அருள் இவருக்கு கிடைப்பதாக என்றும் வாழ்த்தி நிற்கின்றோம்.

பூ.நகுலன்
தலைவர் - ஆசிரியர் கழகம்

## சேவைவிவரம்

| பாடசாலை | பதவி | காலம் |
|---|---|---|
| 01.வ. கன்னாட்டி றோ.க.பாடசாலை | ஆசிரியர் | 1979.10.12 - 1981.03.18 |
| 02.வ. பாவற்குளம் இல2 றோ.க பாடசாலை | பதில் அதிபர் | 1981.03.19 - 1984.02.16 |
| 03.ஆசிரியர் கலாசாலை, மன்னார் | - | 1984.02.17 - 1985.12.31 |
| 04.கி/கிளாலி றோ.க.த.க.பா. | பதில் அதிபர் | 1986.01.01 - 1988.07.14 |
| 05.கி/வட்டக்கச்சி மகாவித்தி. | பதில் அதிபர் | 1988.07.15 - 1988.09.30 |
| 06.கி/இயக்கச்சி அ.த.க.பா. | பதில் அதிபர் | 1988.10.01 - 1989.01.08 |
| 07.கி/தர்மங்கேணி அ.த.க. | அதிபர் | 1989.01.09 - 1996.04.25 |
| 08.கி/இராமநாதபுரம் ம.வி. | அதிபர் | 1996.04.26 - 1997.01.05 |
| 09.கி/நாகேஸ்வரா வித்தி. | அதிபர் | 1997.01.06 - 1997.08.31 |
| 10.கி/இராமநாதபுரம் ம.வி. | அதிபர் | 1997.09.01 - 2005.01.09 |
| 11.கிளி/கிளி மத்தியகல்லூரி | அதிபர் | 2005.01.10 - 2010.08.08 |
| 12.வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி | பதில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் | 2010.08.09 - 2011.11.20 |
| 13.யா/யூனியன் கல்லூரி | அதிபர் | 2011.11.21 - 2016.08.23 |

## வாழ்த்துப் பாடல்

இருபத்து மூன்றாம் வயதினில்
இணைந்தார் சேவையில் வாழ்த்துவோம்
இருநூறு ஆண்டுப் பள்ளியில்
புரிந்த சேவையைப் போற்றுவோம்
அருமைத் தமிழின் உணர்வால்
ஆற்றிய பணிகளை மதித்திடுவோம்
பெருமை நிறைந்து வாழ்வதற்கே
பெருமான் அருளை வேண்டிடுவோம்

பள்ளியின் பெருமை உணர்ந்தே
பற்பல பணிகள் புரிந்திடுவர்
உள்ளம் நல்லது கொண்டவர்
உணர்வில் தமிழை நிறைத்தவர்
[illegible] மனத்தினர்
கணக்கில் வல்லமை கொண்டவர்
உள்ளத்தில் அவர் பணி நினைத்தே
உவகை கொண்டே வாழ்த்துவோம்

நீண்ட கல்விப் பணியில்
நிலைத்த சேவையைப் புரிந்தே
ஆண்டுகள் அறுபதை அடைந்தார்
அதிபர் சேவையில் நிறைந்தார்
வேண்டும் வரங்களைப் பெற்றிடவும்
விரும்பும் வாழ்வை அடைந்திடவும்
ஆண்டவன் அருளை வேண்டுகின்றோம்
அவனியில் சிறந்து விளங்கிடவே.

**ஆசிரியர் கழகம்**
**யா/யூனியன் கல்லூரி**
**தெல்லிப்பழை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

11.07.2016 திங்கட்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது
செல்வப்புதல்வன்

அமரர் செல்வன்
**செல்வரத்தினம்**
**பிரதாப் [சங்கர்]**



தோற்றம்
28.11.1994

மறைவு
11.07.2016

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 20.08.2016 சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.08.2016) புதன் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார்கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.
077 317 7821

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவுடன்

"கனவாகிப் போன அம்மாவே நினைவோடு எமைக் காரும்"

திருமதி
**திரேசம்மா (ராசாத்தி)**
**பொன்னுத்துரை**



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1938 | 2016 |
| 10 | 07 |
| 25 | 25 |

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (24.08.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும் அன்றைய தினம் அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியவிருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.12, கண்ணாபுரம்,
நாவாந்துறை.

குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**கந்தையா**
**தேவராஜா**

(முன்னாள் உரிமையாளர் - ராஜ்வரன் ஹாட்வெயர்- யாழ்ப்பாணம், முன்னாள் செயலாளர் - கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் ஈச்சமோட்டை)



தோற்றம்
18.01.1961

மறைவு
25.07.2016

25.07.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எம் குடும்பத் தலைவர் அமரர் கந்தையா தேவராஜா அவர்களின் பிரிவு கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் பிரசுரித்தவர்களுக்கும், மலர் வளையங்களை அனுப்பி வைத்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.08.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இல.10, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(சே/4004)(11,18,)
021 222 6820

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் **திரு. சந்திரசேகரம் அருள் நேரு**
அவர்களின் அன்புத் தந்தையார்

***அருணாசலம் சந்திரசேகரம்***

அவர்கள் 15.08.2016 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**
(J 2993)(12.18)

## கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீ பரமானந்தா சிறுவர்,
முதியோர் இல்ல செயலாளரும்
இளைப்பாறிய கிளிநொச்சி
மாவட்ட மேலதிக அரசாங்க
அதிபருமான
**திரு.செல்லமுத்து**
**ஸ்ரீநிவாஸன்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கற்பகம் செல்லமுத்து**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ பரமானந்தா சிறுவர்,**
**முதியோர் இல்லம்**
**வதிரி, கரவெட்டி.**
(சி.25025)
(13)

## ஈரவிழிகளுடன் 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**குகானந்தவல்லி**
**(குகம் அக்கா)**
**கனகலிங்கம்**

திதி: ஸப்தமி (24.08.2016)

மண்ணில்
18.04.1944

விண்ணில்
07.09.2012

ஆண்டுகள் நான்கு சென்றாலும் அம்மா
ஆறவில்லை எம் துயர் அம்மா
உங்கள் நினைவுகள் தினம் தினம் எமை வாட்டுது அம்மா
என்றும் பிரியமுடன் வாழ்ந்த நாளை
நினைத்து நினைத்து ஏங்குகின்றோம் அம்மா
எம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் அம்மா

"குகம் வாசம்"
விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 26.07.2016
இறைபதமடைந்த எமது
தெய்வம்

**திருமதி**
**பூலோகசுந்தரி அம்மா**
**பாலச்சந்திரமூர்த்தி**



பிறப்பு
16.05.1940

இறப்பு
26.07.2016

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (25.08.2016) வியாழக்கிழமை வல்வெட்டித்துறையில் காட்டுவளவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.


## காணாமற்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்றும் மகிந்த அணியினர் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே, எதிர்ப்பலைகளையும் மீறி காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவதற்கான சட்டத்தில் சபாநாயகர் நேற்றுக் கையொப்பமிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகரின் அறிவிப்புவேளையின்போது, அரசமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம், தான் மேற்படி சட்டத்தை அங்கீகரித்துவிட்டதாக சபாநாயகர் அறிவித்தார். (வ-5)

## நலன்புரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்கள் மற்றும் வவுனியா மாவட்டத்திலுள்ள பூந்தோட்டம் நலன்புரி நிலையம் தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 936 குடும்பங்கள் 31 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் 97 குடும்பங்கள் தங்கியுள்ளனர். வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலைய மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையே இந்த மாத இறுதிக்குள் குடியேற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. இவர்களில் நூறு பேருக்கு காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனக் காணியில், காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய குடும்பங்களில், காணிகள் இல்லாத மக்களை உடனடியாக அரச காணியில் குடியேற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேலும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக அடையாளப்படுத்தப்பட்ட காணிகளைச் சேர்ந்த மக்களுக்கு உடனடியாக வீட்டுத் திட்டம் வழங்கி, அவர்களையும் குடியேற்றுமாறு தெரிவிக்கப்பட்டது. எஞ்சியுள்ள மக்களுக்கு மாற்றுக் காணி வழங்குவதா, இழப்பீடு வழங்குவதா என்பது தொடர்பில் எந்தவொரு இறுதி முடிவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி செயலகத்தினால் கடந்த மாதம் மாவட்டச் செயலகத்துக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்வை முழுமையாக முடிவுறுத்த வேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான தொரு நிலையிலேயே, இந்த மாத இறுதிக்குள் இதனை முழுமைப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (வ-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையினருக்கான காணி அளவீடு மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது



மன்னார், ஓக. 24
மன்னார் பள்ளிமுனையில் கடற்படையினருக்குக் காணி சுவீகரிக்க நேற்று முன்னெடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து கைவிடப்பட்டது. சில மாதங்களுக்கு முன்னரும் இதே காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பொதுமக்களின் எதிர்பைத்தொடர்ந்துகைவிடப்பட்டது.
மன்னார் பள்ளிமுனை 25 வீட்டுத்திட்டக் காணியில் 1956 ஆம் ஆண்டு முதல் மக்கள் வாழ்கின்றனர். 1990 ஆம் ஆண்டு போர் காரணமாக அவர்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து சென்றனர். அதன் பின்னர் காணியை பொலிஸார் கைப் பற்றினர். பொலிஸார் காணியில் இருந்துவெளியேறிய போது கடற்படையினர் அபகரித்து முகாமிட்டனர். 26 வருடங்களாக மக்கள் குடியேற முடியாத நிலை காணப்பட்டது.
காணி தொடர்பாக 2013ஆம் ஆண்டுமன்னார் நீதிமன்றத்தில் காணியின் உரிமையாளர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதுவரை 21 தவணை வழக்கு இடம் பெற்றுள்ளது. 22 ஆவது வழக்கு விசாரனை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் இடம் பெறவுள்ளது.

> காணி தொடர்பாக 2013 ஆம் ஆண்டு மன்னார் நீதிமன்றத்தில் காணியின் உரிமையாளர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதுவரை 21 தவணை வழக்கு இடம்பெற்றுள்ளது

நேற்று காணி அளவீட்டுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்வதற்கு முயற்சித்தபோது, பொதுமக்கள் அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். அளவீடு செய்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்பதில் விடாப்பிடியாக நின்றனர்.
பொதுமக்களுடன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பிறிமுஸ் சிராய்வா, ஜீ.குணசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோர் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.
மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் அங்கு வந்து இரு தரப்பினருடனும் கலந்துரையாடினர்.
பொதுமக்கள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததைத் தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தினர் காணி அளவீட்டைக் கைவிட்டுத் திரும்பினர். (ற-5-21-56)

## விதிகளை மீறிய சாரதிகளுக்கு தண்டம்

**போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 51 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.**
மதுபோதையில் தலைக்கவசம், சாரத்திய அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத் தியவருக்கு 15 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் சாரத்திய அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரத்திக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், காப்புறுதி மற்றும் வாகன வரிப் பத்திரங்கள் இல்லாது வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், முன்னால் சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டவேளையில் பொலிஸாரிடம் அகப்பட்ட வாகனச் சாரதிக்கு 6 ஆயிரம் ரூபாவும், ஆசனப்பட்டி அணியாத வாகனச் சாரதி வாகன வரிப்பத்திரமில்லாத வாகனச் சாரதி ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வாகனத்தைச் செலுத்திய சாரதி ஆகியோருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது.
மதுபோதையில் பொது இடங்களில் குழப்பம் விளைவித்த மூவரை தலா 80 மணி நேரம் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ற-9)

## இரணைமடுக் குள சீரமைப்பு மண் வழங்க ஆவன செய்க

### கிளி. விவசாயிகள் சம்மேளனம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 24
இரணைமடுக் குளச் சீரமைப்புப் பணிக்கான மண்ணைத் தடையின்றி வழங்குவதற்கு அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குளச் சீரமைப்புப் பணிகள் உரிய காலத்தில் நிறைவடைவதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும். இது எமது வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விடயம். அதிகாரிகள் இதில் கவனம்எடுக்கவேண்டும்.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்தது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்படி விடயத்தை, கிளிநொச்சி மாவட்ட விவ சாயிகள் சம்மேளனம் சுட்டிக் காட்டியது. அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
இரணைமடுக் குளத்தைச் சீரமைப்புச் செய்வதற்கான மண்ணைப்பெறுவதில்இடர்கள் காணப்படுகின்றன. இதனால் குளச் சீரமைப்பு நடவடிக்கைகள் தாமதம் அடையக் கூடிய நிலை காணப்படுகின்றது.
இந்தக் குளத்தின் கீழ், 21 ஆயிரத்து 985 ஏக்கரில் விவசாயம் செய்யும் 9 ஆயிரம் விவசாயிகளின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகும் நிலை உள்ளது.
1971 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சீரமைப்பைக் காணாத இந்தக் குளத்தை அபிவிருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாகச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தப் பணிக்காக குளத்து நீர் வெளியேற்றப்பட்டு 2016 ஆம் ஆண்டிற்கான சிறுபோக நெற்செய்கை முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அபிவிருத்திப் பணிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.
சீரமைப்புக்குரிய மண் கிடைக்காமல் போனால், சீரமைப்புப் பணிகள் தாமதமடையும். இதனால் 2017 ஆம் ஆண்டின் சிறுபோக விவசாயமும் தடைப்படக் கூடிய அபாயம் ஏற்படும். இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், பணிக்கான மண்ணைத் தடையின்றிப்பெற்றுக்கொள்ள உரிய உத்தரவுகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.
-என்றுள்ளது. (ற-5-101)

## வெள்ள வாய்க்கால்களை துப்புரவாக்க நடவடிக்கை

மாரி காலத்துக்கு முன்னர் யாழ்.மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படும் என்று யாழ். மாநாகர ஆணையாளர் தெரிவித்தார்.
மக்களின் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பொது இடங்களை அண்டிச் செல்லும் வெள்ள வாய்க்கால்கள் ஊடாக மழை வெள்ளம் வழிந்தோட வசதியாக வாய்க்கால்கள் யாவும் துப்புரவாக்கப்படவுள்ளன. யாழ்.நகர்பகுதியில் உள்ள வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டும் வருகின்றன. வாய்க்கால்களில் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றப்படுகின்றன. மாரி காலத்தில் மழை வெள்ளம் குடியிருப்பு மற்றும் பொது இடங்களில் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்துக்குச் சேரவேண்டிய செய்திகளை இலகுவாகச் சேர்ப்பிக்கின்றன நாடகங்கள்

## நல்லூர் நாடகத் திருவிழாவில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24
சமூகத்துக்குச் சென்றடைய வேண்டிய செய்திகளை இலகுவாக கொண்டு செல்லும் ஊடகமாக நாடகங்கள் விளங்குகின்றன என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

செயல்திறன் அரங்க இயக்கத்தின் நல்லூர் நாடகத் திருவிழா ஏழாவது நாளாகவும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஓகஸ்ட் 20ஆம் நாள் அதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார் நாடாளுமன்ற உறுப்பினர்.

செயல்திறன் அரங்க இயக்கத்தினரால் வருடா வருடம் நடத்தப்படும் நல்லூர் நாடகத்திருவிழா இந்த ஆண்டு ஓகஸ்ட் 14 முதல் 25 வரை தொடர்ச்சியாகப் பன்னிரெண்டு நாள்கள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து பன்னிரெண்டு நாள்களாக நடைபெற்றுவரும் இந்த நாடக விழாவில் தென்னிந்திய நாட்டார் கலைகளின் விற்பன்னர் ஆடலரசுவேணுவின் நாட்டார் கலை நிகழ்வுகளும் அவரது சிறப்பு நெறிப்படுத்தலில் பறையிசை, சுளகாட்டம், குச்சியாட்டம், கரகாட்டம், நாட்டார் பாடல்கள் என்பனவும் ரசிகர்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.



சிறுவர் நாடகங்கள், நவீன நாடகங்கள், சமூக நாடகங்கள், பாரம்பரிய இசை நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் என்பன நாடகத் திருவிழாவில் மேடையேறி வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தனது உரையில் தெரிவித்ததாவது:

சமூகத்துக்குச் சென்றடைய வேண்டிய செய்திகளை இலகுவாகக் கொண்டு செல்லும் ஊடகமாக நாடகங்கள் விளங்குகின்றன.

நாடகம் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை மையமாகக்கொண்டு மக்கள் மத்தியில் மேடையேற்றுகின்ற பொழுது பெரும் வரவேற்பையும் ஆதரவையும் பெறுகின்றது.

பாரம்பரிய நாடகங்கள், நவீன நாடகங்கள் என வகைப்படுத்தல்களுடன் பல யுக்திகளும் தந்திரோபாயங்களும் அவற்றுடன் சேரும்பொழுது அந்த நாடகங்கள் மேலும் ஜனரஞ்சகமாக மாறுகின்றன. சிறுவர் நாடகங்கள்கூட நவீனத்துவம் புகுத்தப்பட்டு இன்றைய சிறுவர்களின் உளப்பாங்குக்கு ஏற்ற வகையில் உருவாக்கப் படுகின்றன.

இந்தப் பணியைச் செயல்திறன் அரங்க இயக்கம் சிறப்பாகச் செய்து வருகின்றமையினால் அவர்களின் நாடகத்திருவிழா 12 நாள்களாக இந்த வருடமும் கொண்டாடப்படுகிறது.

நுவரெலியா, முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து வந்த கலைஞர்களின் நாடகங்களும் இங்கு மேடையேறியிருப்பது இதன் சிறப்பு. மகிழ்வூட்டலுடன் மட்டும் நின்றுவிடாமல் பிரதேசங்களின் சமூகப் பிரச்சினைகள், அரசியல் பின்புலம் என்பவற்றையும் எடுத்தியம்புகின்றன. இத்தகைய முயற்சிகள் பிரதேசங்கள், மாவட்டங்கள், மாகாணங்களுக்கு இடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துகின்றது - என்றார்.

அரங்கு நிறைந்த கூட்டத்திற்கு மத்தியில் சிறப்பாக நடைபெற்று வரும் நாடகத் திருவிழாவில் இன்று 24ஆம் திகதி பறையிசை, ஒயிலாட்டம், பாரம்பரிய சிங்கள நடனம், கண்டிய நடனம், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முயலார் முயல்கிறார்' (சிறுவர் நாடகம்), தே.தேவானந்தின் புதையுண்ட சடங்குகள்' (சிறுவர் நாடகம்), தே.தேவானந்தின் தூவானம்', நாடகங்களும் இறுதிநாளான 25ஆம் திகதி நெடுங்குச்சியாட்டம், சுளகாட்டம், பறையிசை, பாரம்பரிய சிங்கள நடனம், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ஆரொடு நோகேன்' (நாடகம்), தே.தேவானந்தின் இரகசியப் படுகொலை' (நாடகம்) ஆகிய நாடகங்கள் மேடையேறவுள்ளன என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.24
நல்லூர் மகோற்சவகாலத்தில் யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணிக்கு சொற்பொழிவு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இன்று சற்குரு தரிசனம் எனும் தலைப்பில் திருமதி தர்மபூபதியின் சொற்பொழிவும், நாளை திருப்புகழின் பெருமை எனும் தலைப்பில் பேராசிரியர் நவரத்தினத்தின் சொற்பொழிவும், நாளை மறுதினம் தென்னிந்திய ஆன்மிக பேச்சாளர் என். பாலசுப்பிரமணியத்தின் கந்த சஷ்டி கவச விளக்க உரையும், 27 ஆம் திகதி செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனின் நாமேல் நடவீர் என்னும் சொற்பொழிவும், 28 ஆம் திகதி அழகுக் கலையும் ஆன்மிகமும் என்னும் தலைப்பில் பேராசிரியர் நா.சண்முகலிங்கனின் சொற்பொழிவும், 29 ஆம் திகதி கன்மமும் வாழ்வும் என்னும் தலைப்பில் சைவப்புலவர் சந்திரவேலின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-ரி3)

## மீள்குடியமர்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 24
யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடன் நடத்தப்பட்ட பல சுற்றுப்பேச்சின் முடிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் அவசர கூட்டம் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு, மல்லாகத்தில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

அதில் அங்கத்தவர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் கேட்டுள்ளார். (ற-5)

## சர்வ மத பேரவையின் மாநாடு

யாழ். மாவட்ட சர்வ மத பேரவையின் கருத்தரங்கு வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறவுள்ளது. இளைஞர்கள் மத்தியில் சமூக பங்களிப்பும் எதிர்கால நோக்கும் என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. அதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட சர்வமத பேரவை அழைத்துள்ளது. (ற-ரி3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கில் முன்பள்ளிகள் அடிப்படை வசதிகளற்ற நிலையில்

## கற்றலுக்கான சூழலை ஏற்படுத்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

வவுனியா, ஓக. 24
வவுனியா வடக்குக் கல்வி வல யத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 4 முன்பள்ளிகள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி இயங்குகின்றன. கல்வி கற்கும் சிறுவர்களும், கற்பிக்கும் ஆசிரி யர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். உரிய நடவடிக் கைகளை மேற்கொண்டு முன் பள்ளிக் கற்றலுக்குரிய சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும். இவ்வாறு அந்தப்பகுதிபொதுமக் கள் கோரிக்கை விடுத்தனர்.



போரின் பின்னர் நாம் கன கராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் காணிகளில் கொட் டில்கள் அமைத்து மீள்குடிய மர்ந்தோம். அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படாத நிலையிலேயே நாம் மீள்குடிய மர்ந்தோம். மீள்குடியமர்ந்த ஊரிருவருடங்களுக்கு அபிவிருத் திகளை ஏற்படுத்தித் தர முடியாது என்பதை ஏற்றுக் கொள்கின் றோம். ஆனால் இப்போது 7 ஆண்டுகளாகிவிட்டன.

எமது குழந்தைகள் ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கான வசதி கள் கூட இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. ஆரம் பப் பிரிவு மாணவர்கள் போதிய வசதிகளின்றியே கற்றலில் ஈடுபடுகின்றனர். ஆலங்குளம், வேப்பங்குளம், கொந்தற்குளம், பழையவாடி போன்ற இடங் களில் உள்ள முன்பள்ளிகள் அடிப்படை வசதிகள் எதுவுமே இன்றி இயங்குகின்றன. தகரக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு மணலின் மேல் ஓரிரண்டு கதிரை கள் போடப்பட்டுத்தரையில் கற்றல் செயற்பாடு நடைபெறுகின்றது. அதிகாரிகள், அரசியல்வாதி களுக்கு எமது சிறார்கள்கள் மீது இரக்கம் வரவில்லை. தெற்கில் இவ்வாறானதொரு முன்பள்ளி களை யாராவது காட்டுவார் களா? அங்கு அனைத்து முன் பள்ளிகளும் சிமெந்தால் கட்டப் பட்டு, நவீன வசதிகளுடன் உள் ளன. இங்கு ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள்அமர்வதற்குக் கூட நாற்காலிகள் இல்லை. எமது மாணவர்கள் கற்றலில் முன் னேறக் கூடாது என்றே இவ்வாறு செயற்படுகின்றனரா என நாம் நினைக்க வேண்டியுள்ளது.

மத்திய அரசை விட்டுவிடுவோம். இங்கே உள்ள மாகாண அரசும் எம்மைக் கவனிக்கவில்லை. கல்விக்கு என்று ஓர் அமைச்சர் இருக்கின்றார். இது குறித்து எந்த நடவடிக் கையும் எடுக் கப்படவில்லை. வெறுமனே வாழ்வாதார உதவிகள் என்கின்றனர். அடுத்த சந்ததி யின் கல்வி நிலை குறித்து எவரும் சிந்திப் பதாகத் தெரி யவில்லை. விழா, கண் காட்சி என எவ் வளவோ செய்கின்றனர். சிறு அளவு பணத்தை ஒதுக்கி மாண வர்களுக்கு அடிப்படை வசதி களை ஏற்படுத்திக் கொடுக்க முடியாதுள்ளது. மாணவர்களின் அவல நிலை குறித்துப் பல அதி காரிகளுடன் தொடர்பு கொண் டோம். இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

யாரையும் நம்பிப் பயன்கிட்ட வில்லை. இராணுவத்தால் நடத் தப்படும் (சீ.எஸ்.டி) முன்பள்ளி களில் பிள்ளைகளைச் சேர்த்து விடலாமோ என்று தோனறு கின்றது.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து மாணவர்களின் அடிப் படைத் தேவைகளை நிறைவு செய்ய அதிகாரிகள் முன்வர வேண்டும் - என்று அந்தப் பகுதி மக்கள் ஆதங்கத்துடன் தெரி வித்தனர்.

வவுனியா வடக்குக் கல்வி வலயத் துக்கு உட்பட்ட நான்கு ஆரம்பமுன் பள்ளிகளில் மாணவர்கள் அடிப் படை வசதிகள் ஏதுமற்ற நிலை யில் கல்வி கற்கின்றனர் என்பது உண்மை - என்று தெரிவித்தார் வவுனியா வடக்குக் கல்வி வலயத் தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் இராஜேஸ்வரன்.

ஆலங்குளம், வேப்பங்குளம், கொந்தற்குளம், பழையவாடி ஆகிய பகுதிகளில் முன்பள்ளி கள் அடிப்படை வசதிகளற்றுக் காணப்படுகின்றன. எமது திணைக்களத்திடம் நிதிப் பற் றாக்குறை காணப்படுகின்றது. புதிய கட்டடங்களை எம்மால் அமைக்க முடியாதுள்ளது. பல நிறுவனங்களிடம் முன் மொழிந்தோம். சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளையே எம்மால் வழங்க முடிகின்றது - என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5-21)

### மாடுகளை கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.24
அச்சுவேலியில் இருந்து புத் தளத்துக்கு மாடுகளைக் கடத்த முயன்றனர் என்ற சந்தேகத் தில் அச்சுவேலிப் பொலிஸா ரால் இருவர் கைது செய்யப் பட்டனர். கடத்தலுக்குப் பயன் படுத்தப்பட்ட வாகனமும் கைப் பற்றப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது.
நீர்வேலியில் சந்தேகத்துக்கு இடமாகப் பயணித்த வாகனம் ஒன்றைப் பொலிஸார் சோதனை யிட்டனர். முறையான ஆவணங் கள் இல்லாது 4 மாடுகள் அதில் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. மாடு களைக் கடந்த முயன்றனர் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். வாகன மும் கைப்பற்றப்பட்டது. (ற-5,10)

### இடியன் துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் காயம்

இடியன் துப்பாக்கி வெடித்ததில் குடும்பத் தலைவர் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பாண்டியன்குளம் பிர தேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட பூவரசங்குளத்தில் நடந்தது.
இரு பிள்ளைகளின் தந் தையான கனகசபாபதி விஜய ராசா (வயது-32) என்பவரே படுகாயமடைந்தார். அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டார்.
இடியன் துப்பாக்கி தவறுதாக வெடித்தது. காயமடைந்த விஜயராசா உடனடியாக மல் லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். துப்பாக்கிச் சன்னம் அவரின் வயிற்றுப் பகுதியைத் தாக்கியது. குடல் வெளிவந்த நிலையில் கிளி நொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.
கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் அவசர சத்திர சிகிச் சைப் பிரிவில் சிகிச்சையளிக் கப்பட்டது. சத்திரசிகிச்சையின் பின்னர் தொடர்ந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெறு கின்றார். (ற-5,10)

### மட்டு. - காங்கேசன்துறை பஸ் சேவை ஆரம்பம்



மட்டக்களப்பு, ஓக. 24
மட்டக்களப்பில் இருந்து காங்கேசன் துறைக்கான இரவு நேர பஸ் சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை 26 வருடங்களின்பின்னர் ஆரம்பிக்கப்பட்டது.
முதலாவது பேருந்துப் பயணம் நேற்று முன்தினம் இரவு 8.20 மணிக்கு மட்டக்களப்பு பஸ் தரிப்பு நிலையத்திலி ருந்து ஆரம்பமாகியது.
412 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த பஸ் சேவையை மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் ஆரம்பித்து வைத்தார்.
மட்டு-யாழ் மக்களினதும், மட்டக் களப்பிலுள்ள கிழக்குப் பல்கலைக் கழகம், இசை நடனக் கல்லூரி, கல்வி யியல் கல்லூரி மாணவர்களின் நலன் கருதி இந்த இரவு நேர பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பில் இருந்து காங்கேசன் துறை நோக்கி இரவு 8.20 மணிக்கும் காங்கேசன்துறை பஸ் தரிப்பு நிலை யத்தில் இருந்து மட்டக்களப்புக்கு இரவு 9.30 மணிக்கும் பஸ் சேவை இடம்பெற வுள்ளது. (ற-5)

### குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஓக.24
இலங்கைச் செஞ்சிலு வைச் சங்கத்துடன் இணைந்து சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை நடத்தும் குருதிக் கொடை முகாம் இன்று நடைபெறும்.
காலை 8.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரை சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் முகாம் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-ரி3)




## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
23 . 08 . 1955



மறைவு
25 . 07 . 2016

### திருமதி இராசசௌந்தரி பவாநாதன்

25.07.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி இராசசௌந்தரி பவாநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (24.08.2016) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.
உடுவில் தெற்கு,
பாலாவோடை,மானிப்பாய்.
077 068 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படைகளின் அங்கத்தவர்கள் பாதுகாப்புக்காக முன்னிற்பேன்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, ஓக.24
பாதுகாப்புத் தரப்பைத் தண்டிக்கப் போகின்றேன் என்று அரசியல் மேடைகளிலும், ஊடகங்களிலும் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பொய்யானவை. முப்படைகளின் உயர் மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரை உள்ள அங்கத்தவர்களின் பாதுகாப்புக்காக நான் செயற்படுவேன்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பனாகொடை இராணுவ உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் சேவை விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது. அதில் முதன்மை அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால கலந்து கொண்டார்.
அவர் அங்கு தெரிவித்ததாவது:
முப்படைகளின் அனைத்து அங்கத்தவர்களின் பாதுகாப்புக்காகவும், அபிமானத்துக்காகவும் நான் முன்னிற்பேன். முப்படைகளின் பிரதானி என்ற ரீதியிலும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் எனக்குப் பொறுப்பு உள்ளது. எனது பொறுப்புகள் தொடர்பாக எந்தச் சந்தர்ப்பத்திலும் குறைத்து மதிப்பிட்டு நடவடிக்கை எடுப்பதில்லை.
பாதுகாப்புப் படையின் கௌரவத்தையும், அபிமானத்தையும் பாதுகாத்து, அவர்களை உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த முப்படையாக மாற்றுவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது.
அரசியல் மேடைகளிலும், ஒரு சில ஊடகங்களிலும் படையினரைத் தண்டித்தல் என்று கூறப்படும் கூற்றை வன்மையாக நிராகரிக்கின்றேன். குறுகிய அரசியல் நோக்கங்களை விட்டுத் தாய் நாட்டின் அபிமானத்துக்காகப் பணியாற்றுமாறு அவர்களை அழைக்கின்றேன் - என்றார். (ந-5)

## இலங்கை – பெலாரஸ் நாடுகள் இடையே கலந்துரையாடல்

கொழும்பு, ஓ.24
இரு தரப்பு உறவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டக் கட்டமைப்புக் குறித்து இலங்கையும், பெலாரஸ்சும் கலந்துரையாடுகின்றன.
இது தொடர்பான மூன்றாம் சுற்றுக் கலந்துரையாடல் பெலாரஸ்சில் நடைபெற்றது என்று அந்நாட்டின் வெளிவிவகாரத் துறை அமைச்சு தெரிவித்தது.
பெலாரஸ் நாட்டுக் குழுவுக்கு அந்த நாட்டின் துணை வெளிவிவகார அமைச்சரும், இலங்கைக் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஜி. ஆசீர்வாதமும் தலைமை வகித்தனர்.
பிராந்திய ஒத்துழைப்பு, கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், கலாசார ஒத்துழைப்புப் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.
இரு தரப்பு ஒத்துழைப்பு சட்டக் கட்டமைப்புகள், பன்னாட்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்புக் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது. (ந-5)



## 16 குதிரைகள் நுவரெலியாவில் 3 கோடி ரூபாவுக்கு விற்பனை!

கொழும்பு, ஓக.24
இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 16 குதிரைகள் நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலில் 3 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டன.
குதிரைப் பந்தயப் போட்டிகளில் ஈடுபடும் உரிமையாளர்களே அவற்றை ஏலத்தில் எடுத்துள்ளனர்.
இனிவரும் பந்தயத்தில் குறிப்பிட்ட 16 குதிரைகளும் பங்கெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நுவரெலியாவின் குதிரைப் பந்தயப் போட்டிகளை உள்ளூர் மற்றும் பன்னாட்டு ரீதியாக எடுத்துச் செல்லும் நோக்கத்துடனேயே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் குதிரைப் பந்தயத் திடலானது மிகவும் மோசமாகப் பாழடைந்த நிலையில் காணப்பட்டது. தற்பொழுது முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஒவ்வொரு மாதமும் போட்டிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக அதிக உள்ளூர் வெளியூர் உல்லாசப் பிரயாணிகளை ஈர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-5)

# பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தியே காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஓக.24
பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியே காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் அமைக்கப்படவேண்டும்.
இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியது.
ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடுகம இது தொடர்பில் விடுத்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிப்பட்டது.
அவர் தெரிவித்ததாவது:
இந்தச் சட்டம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். சட்டம் தொடர்பான வதந்திகள், தவறான வழி நடத்தல்கள், தவறான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுக்க வேண்டும் - என்றார்.
இந்த அறிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை அமைக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. (ந-5)

# மகிந்தவுடன் பேசிய பின்னே மாநாடு குறித்துத் தீர்மானம்

## பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்

கொழும்பு, ஓக.24
சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடுவதற்கு கூட்டு எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.
கலந்துரையாடலின் பின்னரே மாநாட்டில் பங்கேற்பதா? இல்லையா? என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்று முன்னாள் மேல் மாகாண முதலமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. திருப்தி தரும் வழியில் கட்சி செல்லாததால் மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து.
சகோதரியின் மகளை துர்நடத்தைக்கு உள்ளாக்கிய ஒருவர் தற்போது மாத்தறை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கொலைக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஒருவரே தற்போது கம்பகா மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொறுப்பு வாய்ந்தவர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை - என்றார். (ந-5)

## பசில் கவலை

கொழும்பு, ஓக.24
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு விழாவுக்கு இதுவரை எனக்கு அழைப்புக் கிடைக்கவில்லை.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைப்பாளரும், முன்னாள் பொருளாதார அமைச்சருமான பசில் ராஜபக்ச கவலை வெளியிட்டார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கே அவர் இவ்வாறு கூறினார்.
சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்தால் விழாவில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தேன். அவர்கள் எனக்கு அழைப்பு விடுக்கவில்லை. கூட்டு எதிர்க்கட்சியினர் ஆண்டு விழாவில் பங்கேற்பதா என்பது குறித்து நேற்று (நேற்றுமுன்தினம்) கூட்டம் நடத்தியபோதும் அதில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.
தீர்மானம் எடுப்பதற்கு கட்சியின் ஏனைய மற்றும் கிராம, மாகாண மட்டங்களில் உள்ள உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்படும். இந்த வார இறுதிக்குள் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் - என்று பசில் ராஜபக்ச தெரிவித்தார். (ந-5)

# கைத்தொழில் வலய ஆய்வுக்கு சீனா பயணமானார் அமுனுகம

கொழும்பு, ஓக.24
சீனாவின் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் அமையவுள்ள மிகப் பெரும் கைத்தொழில் வலயம் குறித்த ஆய்வுக்காக அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சீனா பயணமானார்.
சீனாவில் கட்டப்பட்டுள்ள கைத்தொழில் பூங்காக்கள் தொடர்பில் ஆய்வு செய்யவே அமுனுகம சென்றுள்ளார்.
அவருடன் அம்பாந்தோட்டை, மாத்தளை, மொனராகல மாவட்ட செயலாளர்கள் உட்படப் பல அதிகாரிகள் சீனா சென்றனர்.
அம்பாந்தோட்டையில் அமையவுள்ள கைத்தொழில் வலயம் தொடர்பாகப் பிரதமர் தலைமையில் கள ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட சீனத் தூதுவர் விடுத்த அழைப்பின் அடிப்படையில் இந்தப் பயணம் அமைந்துள்ளது.
சீனா சென்றுள்ள குழு சீனாவில் சோங்கின், தாய்லாந்தில் ராயோங் கைத்தொழில் பூங்காக்களுக்குச் சென்று கள ஆய்வுகளை மேற்கொள்ளும்.
கட்டுமானம், முகாமைத்துவம், விரிவான அபிவிருத்தி தொடர்பான சீனாவின் அனுபவங்களை இந்தக் குழு கேட்டறிந்துகொள்ளும். எதிர்வரும் 28ஆம் திகதி வரை இந்தக் குழு ஆய்வுகளை மேற்கொள்ளும். (ந-5)

அந்தியேட்டிக் கிரியை அழைப்பு
மண் மகிழ
01.12.1991
விண் உலகேற்றது
02.03.2016

கடந்த 02.03.2016 சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு
அமரர் இலகவகுமார் பூசிதன் (சதன்)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.08.2016) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தத் தலத்தில் இடம் பெறும். 26.08.2016 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்

## பன்னாட்டு பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கருத்து

கொழும்பு, ஓக. 24

பன்னாட்டுப் பயங்கரவாத அச்சுறுத்தல் இலங்கைக்கு உள்ள போதும் இலங்கை முஸ்லிம்கள் மீது நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

வடக்கு – கிழக்கில் தேவையற்ற இராணுவ முகாம்களை அரசு அகற்றியது. வடக்கில் பொது மக்களின் காணிகளில் இருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மீளவும் காணிகள் ஒப்படைக்கப்பட்டன. அதே போல் கிழக்கிலும் அநாவசியமான முகாம்களை அகற்றியுள்ளோம். தேசிய பாதுகாப்பு விடயங்களை கருத்தில் கொண்டே நாம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

வடக்கிலும், கிழக்கிலும் ஜனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதற்காக அங்குள்ள முகாம்களை முழுமையாக அகற்ற முடியாது. வடக்கும், கிழக்கும் இலங்கையின் மாகாணங்களேயாகும். அவற்றைத் தனித்துச் செயற்படுத்த அனுமதிக்க முடியாது. கிழக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான இராணுவப் படை முகாம்கள் அகற்றப்படமாட்டாது. வடக்கிலும் முகாம்கள் முழுமையாக அகற்ற முடியாது.

பன்னாட்டுப் பயங்கரவாத அச்சுறுத்தல்செயற்பாடுகள் இலங்கைக்கும் பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. இஸ்லாமிய பயங்கரவாதச் செயற்பாடுகளில் இலங்கையும் சிக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் காரணத்துக்காக இலங்கை முஸ்லிம்கள் மீது சந்தேகப் பார்வையில் செயற்பட முடியாது. எமது மக்கள் மீது அரசு நம்பிக்கை வைத்துள்ளது. அந்த நம்பிக்கையை மக்கள் காப்பற்றுவார்கள் – என்றார். (ற-5)

## 250 மில்லியன் ரூபா நட்டஈடு கோருகிறார் ஆனந்த சமரசேகர

கொழும்பு, ஓக. 24

கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர தற்போதைய சட்டவைத்திய அதிகாரியான மருத்துவர் அஜித் தென்னக்கோனிடம் 250 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி நேற்று கடிதம் அனுப்பினார்.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலை வழக்கில் கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர வழங்கிய அறிக்கை உண்மைக்குப் புறம்பானது என்று மருத்துவர் அஜித் தென்னக்கோன் அண்மையில் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கூறினார்.

கொழும்பு முன்னாள் சட்டவைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர இந்த விவகாரத்தில் பொய்யான அறிக்கையையே வழங்கியுள்ளார் என்று பகிரங்கக் குற்றஞ் சாட்டினார்.

மருத்துவர் அஜித் தென்னக்கோனின் கூற்று தனக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ள கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர உடனடியாக இந்த செவ்வியை அவர் மீளப்பெற்று பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## மாணவரை சங்கடப்படுத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை

### கல்வி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 24

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நடவடிக்கைகளின் போது மாணவர்களை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கிய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களை விட இந்த முறை அதிகாரிகள் தொடர்பில் குறைந்தளவு முறைபாடுகளே கிடைத்துள்ளன. முறைப்பாடுகள் கிடைத்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த வருடம் நடைபெறும் அனைத்துப் பரீட்சைகளுக்கும் பரீட்சை மத்திய நிலையங்களின் மேற்பார்வையாளர்களாகப் புதிதாக இணைக்கப்பட்டுள்ள அதிபர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் – என்றார்.

அதேவேளை, பரீட்சை மண்டபங்களில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் அதிகாரிகள் மீது குற்றம் சுமத்திவிட்டுக் கல்வி அமைச்சர் உள்ளிட்டவர்கள் அமைதியாக இருக்கின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தினார். (ற-5)

### தாஜுதீன் உடற்கூற்று அறிக்கை விவகாரம்

## ஆனந்த சமரசேகரவின் மனுவை விசாரணைக்கு எடுத்தது மன்று

கொழும்பு, ஓக.24

கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எடுத்துவரும் நடவடிக்கையைத் தடுக்குமாறு கோரி கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர தாக்கல் செய்த மனுவை கொழும்பு மேலதிக நீதிவான் மன்றம் விசாரணைக்கு எடுக்க அனுமதித்தது.

எதிர்வரும் 30ஆம் திகதி மனு மீதான விசாரணை நடைபெறவுள்ளது. அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளை மன்றின் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கவும் நீதிமன்றும் அனுமதித்தது.

பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் இறப்புத் தொடர்பில் சட்டவைத்திய அதிகாரியான மருத்துவர் ஆனந்த சமரசேகரவே முதலில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டார். அவர் வழங்கிய சட்ட வைத்திய அறிக்கை தற்போது சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதனால் தன்னைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று தெரிவித்து முன்பிணை கோரி மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான விசாரணை கொழும்பு மேலதிக நீதிவான் மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. (ற-5)

## நிதி மோசடி விசாரணை பிரிவு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 24

நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு தொகுதி அரச அதிகாரிகள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்து அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் கடமையாற்றி வரும் 287 அதிகாரிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

நிதி மோசடிப் பிரிவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு பதவியிலிருந்து விலக உள்ளோம் என்று நிதி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

திறைசேரியின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல் நடத்தினர். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் சுற்றுலா சபையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு விசாரணை நடத்தி [illegible] விசார்ணைகளுக்காக [illegible] விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு சில அரச அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் ஹேமா தர்மவர்தன, அரச வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர். சேமசிங்க உள்ளிட்டவர்களும் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். விசாரணைக்கு அழைக்கப்பட்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டால் பணிப்[illegible] [illegible] பதவி விலகுவோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ற-5)



பதினாறாம் நாள் உள்வீதியுலா

### பதினேழாம் திருவிழா

## வெற்றிக்கொரு வேலவன்

வெற்றிக்கு வழி வகுப்பான் வேலவனே–புகழ்
வேரூன்ற அருள் அளிப்பான் தினம்தினமே!
கற்றோர்க்கு மட்டுமல்ல அவன் கருணை–கந்தன்
காலடியில் சரணடைந்தால் போகும் தொல்லை.
(வெற்றிக்கு...)

வேலாயுதம் கொண்டு வினையறுப்பான் –துன்பம்
விலகிட அவன் என்றும் துணையிருப்பான்!
ஆலாகலம் உண்ட சிவனின் பிள்ளை– முருகன்
அவன்போல் ஒருபிள்ளை இவ்வுலகில் இல்லை.
(வெற்றிக்கு...)

வண்ணமயில் வாகனத்தில் வலம் வருவான்–வாழும்
வாழ்க்கைக்கு உகந்த பல வரம் அருள்வான்!
எண்ணமெலாம் அவன்பால் கொள்கையிலே–நிதம்
எழுதிசை வெளிக்குமுந்தன் வாழ்க்கையிலே.
(வெற்றிக்கு...)

முன்வினை யகலுமவன் முகம்பார்த்தால்–அசுரர்
மூச்சடங்கிப் போகிடுவார் அவன் பெயர் கேட்டால்
பண்இசை பலபாடி அவன் இடம்நாடில்–ஊர்
பார்த்திருக்க அவன் தருவான் சுகம் கோடி!
(வெற்றிக்கு...)

– அலெக்ஸ்பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

## நல்லூரைக் கும்பிடு

பல்லவி

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

அநுபல்லவி

சொல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்தநாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு (நல்லூ)

சரணம்

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும் – குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் – செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்டஇடம் கலங்கிநீ திரியாதே (நல்லூ)

– சிவத்திரு யோகர் சுவாமிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அந்தோ! என்னதான் செய்வர் நமது ஈழத்தமிழ் மக்கள்!

அடிக்குமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும் என்ற அர்த்தம் உள்ள பழமொழியொன்று தமிழில் உண்டு. ஆனால் அது இப்போதைய நல்லாட்சி அரசுக்கு மண்டையில் ஏறாது என்பது மிக வெளிச்சமாகத் தெரிகிறது.

- விடுதலை கோரினால் விச ஊசியா? நல்லிணக்கத்தின் அடையாளம் அத்துமீறிய புத்தர் சிலையா?
- எங்கள் நிலம் எமக்கு வேண்டும். காணாமற் போகச் செய்யப்பட்டவர்களுக்கு நீதி வழங்கு.
- இரணைதீவு எங்களது இதயம்.
- கொக்கிளாயைக் கொள்ளை அடிக்காதே அரசே
- புதிதாக முளைக்கும் புத்தர்சிலைகள் அகற்றப்பட வேண்டும்.
- மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட நீதிக்கான நடைப் பயணத்தில் பங்கு கொண்ட தமிழ் மக்கள்அரசை விளித்து எழுப்பிய கோங்களில் சிலவே மேற் போந்தவை.

அரசின் காதில் அவையெல்லாம் ஏறுமா என் பதே, முதலாவது வினாவாக உயர்ந்து எழுந்து நிற்கிறது. இந்த நிலை நேற்று, இன்று தமிழ் மக்களிடம் இருந்து பொங்கி எழவில்லை. மூன்று தசாப்த காலத்துக்கும் கூடுதலாக அவர்களின் ஆன்மாவை அரித்து எடுத்துவரும் முக்கிய பிரச்சினைகள் இவை.

ஆனால்--

இந்த நாட்டின் பெரும்பான்மை இன அரசுகள் தமிழ் மக்களுக்கு உரிய, அவர்களுக்குச் சேர வேண்டிய தட்டிக் கழிக்கக் கூடாத உரிமைகளைத் தமக்கு உள்ள பெரும்பான்மை அதிகாரங்களைக் கையில் எடுத்து சிலம்படி விளையாடி வருகின்றன.

அதன் பெறுபேறு, தமிழ் மக்கள் அல்லும் பகலும் தெருவில், வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலையை நிரந்தரமாக்கி வருகிறது.

அதனால்--

இந்த நாட்டின் உரிமையாளர்களில் ஒரு சாரார் என்று, தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளப்படாத மக்கள் கூட்டமாக, அங்கீகரிக்கப்படாத மனிதப்பிறவிகளாகப் போராட வேண்டிய நிலைக்கு அடுத்துத் தொடுத்து வரும் அரசுகளால் உந்தித் தள்ளப்படுகிறார்கள்.

ஐ.நா.மனித உரிமைகள் சபை தான் என்ன, அமெரிக்கா உட்பட்ட வல்லரசுகள் தான் என்ன, எந்த விண்ணாதி விண்ணத்துவ அனைத் துலக அரசுகள் தான் என்ன கூறினாலும்

சிறுபான்மை இனங்களுக்கு ஏனைய நாடுகளில் வழங்கப்படும் மனித உரிமைகள், வாழ் வியல் உரிமைகள், சம அந்தஸ்துக்களை அனுபவிப்பதற்கு, இலங்கை வாழ் தமிழ் மக் கள் தகுதியற்றவர்கள் என்பதனை--

சிங்கள அரசியல் தலைமைகள் தமது இரத்தத்துக்குள் செலுத்தி வைத்துக் கொண்டு--

அனைத்துலக நாடுகளுக்கு புனுகு பூசி ஏமாற்றும் தன்மையே தொடரப் போகிறதா என்று வினவுவதை விட, வேறு என்ன தான் தமிழ் மக்களால் செய்ய இயலும்..?



சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

ராஜபக்சவுக்கு ஆதரவாக இருந்துவரும் ஒருசில முன்னாள் அமைச்சர்கள் மீது, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மேலிடம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்காமல் போனமைக்கு அந்த முன்னாள் அமைச்சர்கள், தொடர்ந்தும் சிறிசேன ஆதரவாளர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதுதான் காரணம் என்று கூறப்படுகின்றது. ஆனால், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதும், ஏனையவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுவதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டதும், இப்பொழுது வெளிப்படையாகியுள்ளது.

கட்சித்தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைவர்களுடன் ஒரு கருத்து ஒற்றுமை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர், கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திசாநாயக்க, தமது கையெழுத்திட்ட கடிதங்களை விநியோகித்ததன் மூலம் கட்சி பிளவுபடுவதற்கான முதல் அடியை எடுத்துவைத்தார் என்று கருதப்படுகின்றது. மகிந்த ஆதரவாளர்களான பலரின் தேர்தல் மாவட்ட மற்றும் மாவட்ட அமைப்பாளர் பதவிகள் இதன் மூலம் பறிக்கப்பட்டுவிட்டன. முன்னர் அமைப்பாளர்களாக இருந்துள்ள முன்னாள் அமைச் சர்களான காமினி லொக்குகே (கொழும்பு), ரோகித்த அபய குணவர்தன / களுத்துறை) சி.பி.ரத்நாயக்க (நுவரெலியா) மகிந்த யாப்பா அபேகுணவர்த் தன(மாத்தறை) மற்றும் பவித்ரா வன்னியாரச்சி (இரத்தினபுரி) ஆகியவர்களே பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களாவர்.

**புதுக்கட்சி பற்றி ஆலோசனை**

மகிந்த ஆதரவாளர்கள் ஏற்கனவே தமது புதுக்கட்சி தொடர்பான ஆலோசனைகளை ஆரம்பித்துவிட்டார்கள். கடந்த புதனன்று கட்சியின் தொழில்சார் பிரமுகர்களின் கூட்டம் ஒன்று, பசில் ராஜபக்ஷவின் தலைமையில் பத்தரமுல்லையில் உள்ள அவர்களின் காரியாலயத்தில் இடம் பெற்றிருந்தது. அடுத்தநாள் மிரிகானாவிலுள்ள மகிந்தவின் இல்லத்திலும் ஒரு கூட்டம் நடைபெற்றது. வெளியேற்றப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களையும், பிரச்சினைகளையும் ஆராய்ந்து உடனடியாகத் தமக்கு அறிக்கை வழங்குவதற்காக ராஜபக்ச குழுவொன்றை நியமித்தார். அன்றைய தினமே அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தது. அவர்களின் பிரதான பரிந்துரையாகவிருந்தது புதிதாக அரச அமைப்பொன்றை நிறுவ வேண்டும் என்பதாகும். ஆனால், அது தற்போதைக்கு ஒருகட்சியாக இருக்க வேண்டுமென்பதில்லையென்றும் அவர்கள் கருதினார்கள். மாத்தறையில் அரசின் ஒரு வருடப் பூர்த்தியை ஒட்டி நடந்த கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியிருந்த கடும் வார்த்தைகளின் தாக்கத்திலிருந்து விடுபடுவதாக இவர்கள் செயற்பாடு இருந்தது.

ராஜபக்ச தரப்பினர் புதியகட்சி ஆரம்பித்தால் அவர்கள் தொடர்பாகமேலும்பல இரகசியங்களைத் தாம் வெளியிடுவார் என்று ஜனாதிபதி கடும் தொனியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடுக்கப்பட்டதொரு அறிக்கையில் ஊழல் மோசடி, வீண்விரயம், திருட்டு முதலியவற்றால் முடிசூடிக் கொண்டு இருந்தவர்களுக்குத் தாம் மீண்டும் ஒருபோதும் இந்த நாட்டை ஆள்வதற்கு இடந்தரப் போவதில்லையென்று சிறிசேன சூளுரைத்திருந்தார். புதிய கட்சி உருவாக்கப்படுமானால், சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்டுவிடும் என்பது குறித்து ஜனாதிபதி பெரிதும் கவலை கொண்டிருக்கிறார் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. மகிந்த தரப்பினர் புதிய கட்சி ஆரம்பிக்கும் முயற்சியைக் கைவிடுவார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே மைத்திரி இப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் என்றுநம்பப்படுகின்றது.

அரசியல் இயக்கமொன்றை உருவாக்குவது என்ற நகர்வை ராஜபக்ச தரப்பினர் எடுப்பதற்குக் காரணமாக அமைந்தது என்னவென்றால், அடுத்த ஆண்டில் ஏராளமான அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலமை இருப்பதை அவர்களில் பலரும் சுட்டிக்காட்டியமையாகும். அதில் ஒன்று, அடுத்த ஆண்டின் ஜனவரியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்கவிருப்பது. புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டதும் பொதுஜன வாக்கெடுப்பு ஒன்று நடைபெறக் கூடும். எனவே இவை அனைத்திலும் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அரசியல் முன்னணி ஒன்று உருவாக்கப்படுவது அவசியம் என்று கருதப்பட்டது.

> உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் வரவிருப்பதால் அதற்கு முன்பதாக கட்சியை ராஜபக்ச பிரிவினரின் பிடியில் இருந்து மீட்டுக் கொள்ள சிறிசேன விரும்புகிறார். அவ்வாறான நிலைமையில் கட்சி பிளவுபட்டாலும் கூட அதன் கடிவாளத்தை அவர் தம் கையில் பலப்படுத்திக் கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்ள விரும்புகிறார்.

**நீதிமன்றம் செல்லும் நோக்கம்**

கூட்டு எதிர்க்கட்சியின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான மாத்தறை மாவட்ட எம்.பி.டலஸ் அழகப்பெரும கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவியிலிருந்து கடந்த வெள்ளியன்று விலகிக்கொண்டார். அமைப்பாளர் பதவிகளை வகித்து வரும் ஏனைய அனைவரும் ஒருவர் பின் ஒருவராக விலகிக்கொள்ள இருக்கின்றனர். அடுத்தாற்போல் முன்னாள் போக்குவரத்து அமைச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் நகர்வால் கட்சி பிளவுபடும் அபாயம்

## புதிய முன்னணி அமைக்க ராஜபக்ச தரப்பு மும்முரம்

சுரும் ராஜபக்சவின் ஆதரவாளருமான களுத்துறை மாவட்ட அமைப்பாளர் குமாரவெல்கம பதவி விலகவிருப்பதாகத் தெரிகின்றது. இந்த நடவடிக்கையின் பின்னணி என்னவென்றால், தங்களைக் கட்சியிலிருந்து விலக்குவதன் மூலம் தாங்கள் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கச் செய்வதாகும். அவ்வாறு நிகழுமாயின், தாங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடிச்செல்ல முடியும் என்று அவர்களில் ஒருவர் கூறினார். அவர்கள் தொடர்ந்து பதவியிலிருப்பதை நீதிமன்றம் உறுதிசெய்யும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலைகளில் வேறு உறுப்பினர்கள் நீதிமன்றத் தீர்ப்பைத் தமக்குச் சாதகமாகப் பெற்றிருப்பதை அவர்கள் அறிவார்கள். மேலும் அவ்வாறு தாங்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுமிடத்து, அனைவரும் ஒன்றாக இணைந்து இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பி டமுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரியிருக்கமுடியும் என்று இன்னொரு உறுப்பினர் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் வரவிருப்பதால், அதற்கு முன்பதாக கட்சியை ராஜபக்ச பிரிவினரின் பிடியில் இருந்து மீட்டுக்கொள்ள சிறிசேன விரும்புகிறார். அவ்வாறான நிலைமையில் கட்சி பிளவுபட்டாலும்கூட, அதன் கடிவாளத்தை அவர் தமது கையில் பலப்படுத்திக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள விரும்புகிறார்.

முன்னதாக மகிந்த ராஜபக்ச விடுத்த ஓர் அறிக்கையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் மதிப்புப் பெற்ற உறுப்பினர்களை அமைப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கிவிட்டு, மக்கள் செல்வாக்கில்லாதவர்கள் அந்தப் பதவிகளில் நியமிக்கப்படுகிறார்கள். இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தி ஐ.தே.கட்சிக்கு அதிக வாய்ப்பைக் கொடுக்கும் முயற்சியாகும் என்று குறிப்பிட்டிருந்தார். மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தவர்களை அமைப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கிவிட்டு, செல்வாக்கற்றவர்களை நியமித்ததன் மூலம் கட்சியின் தலைவர் என்ற முறையில் கட்சி பிளவுபடுவதன் பொறுப்பை ஜனாதிபதி சிறிசேனவே இறுதியில் ஏற்றுக் கொள்ள வேண்டியவராய் இருப்பார் என்று ராஜபக்ச குற்றஞ் சாட்டியிருந்தார். அடுத்த மாதம் 4 மற்றும் 5ஆம் திகதிகளில் குருநாகலில் நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில், கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்களும், ராஜபக்ச விசுவாசிகளும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தெரிகின்றது. இருந்தாலும் செயற்பாடுகளை அவதானிக்கையில், பெரும் எண்ணிக்கையில் ஆதரவாளர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை கட்சிமாநாடு நடைபெறவிருக்கும் தருணத்தில் மகிந்த ராஜபக்ச இத்தாலி நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. அண்மைக் காலத்தில் தாய்லாந்து, தென்கொரியா ஆகியநாடுகளுக்கும் அவர் தம் பரிவாரங்களுடன் சென்றுவந்தார் என்பது தெரிந்த விடயமே..



> **“அரசியல் இயக்கமொன்றை உருவாக்குவது என்ற நகர்வினை ராஜபக்ச பிரிவினர் எடுப்பதற்குக் காரணமாக அமைந்தது என்ன வென்றால் அடுத்த ஆண்டின் ஏராளமான அரசியல் பிரச்சினை களுக்கு முகம் கொடுக்கும் நிலைமை இருப்பதை அவர்களில் பலரும் சுட்டிக்காட்டியமையாகும்.”**

## எம்மவர்களிடம் மனிதாபிமானமே அற்றுப்போய் விட்டதா?

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு அடுத்தநாளைய அவசரவேலைக்காக கொழும்பு செல்வதற்காக பண்ணையிலிருந்து புறப்படும் அரைச்சொகுசு பேருந்து ஒன்றுக்கு முதல்நாள் சனிக்கிழமை மதியமளவில் தொலைபேசியூடாக ஆசனம் ஒன்றைப் பதிவு செய்தேன். தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது ஒரேயொரு இருக்கையுண்டு. அது உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 7.45 மணிக்கு பண்ணை பஸ் தரிப்பிடத்தில் நில்லுங்கள் 8 மணிக்கு பஸ் புறப்படும் என்று எனது பயணப்பதிவை உறுதி செய்தார். நானும் குறித்த நேரத்திற்கு பஸ்தரிப்பிடத்திற்குச் சென்று குறிப்பிட்ட வண்டியில் எனது ஆசனத்திற்குச் செல்ல முற்பட்டபோது அங்கு நின்ற நடத்துநர் எனக்கு அவ்வாறு இருக்கை ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றார். நான் முதலில் பதிவு செய்த தொலைபேசி இலக்கத்துடன் பல தடவை தொடர்பு கொண்டபோது தொடர்பு துண்டிக்கப்பட்டது. பின்னர் ஒருவாறு தொடர்பை ஏற்படுத்தி குறித்த நபரிடம் நான் விடயத்தைக் கூறியபோது உமக்கு சீட் இல்லை என்றார். நான் அவரிடம் பவ்வியமாக அவசர அலுவலாகச் செல்கின்றேன் உங்களிடம் முற்கூட்டியே பதிவு செய்திருந்தேன் என விளக்கத்தைக் கூறிய போதும் அவர் அதனை ஏற்கவில்லை. எப்படியாவது எனக்கு ஓர் இடம் தர வேண்டும் என நான் மீண்டும் வலியுறுத்திய போது, அவர் மிகமோசமான இழிவான வார்த்தையைப் பயன்படுத்தி என்னை அவமதித்தார். நானும் எனது அவசரம் காரணமாக பொறுமையோடு மீண்டும் இருக்கை கேட்டேன் நேரில் நின்றால் உன்னைக் கத்தியால் குத்துவேன் என்று வேறு கூறினார்.

அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதாலும் தற்போது பெருமளவானவர்கள் யாழ் வந்து செல்வதனாலும் , பாடசாலை விடுமுறைக்காலம் என்பதனாலும், புலமைப்பரிசில் பரீட்சை நிறைவடைந்த நிலையில் பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லும் பயணிகளாலும் பண்ணைப் பகுதி நிரம்பி வழிந்தது.

எனக்கேற்பட்ட இந்த அநீதியை முறையீடு செய்வதற்கு இருக்கையைப் பதிவுசெய்யும் ஆசனப்பதிவுச்சீட்டுக் கூட எனக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் என்னுடைய நிலைமையை உணர்ந்த வேறொரு பேருந்து நடத்துநர், தன்வசமிருந்த ஒரேயொரு இருக்கையை எனக்கு வழங்கி பயணத்திற்கு உதவினார்.

தனியார் பேருந்து நடத்துநர்கள் பற்றி பல்வேறுவிதமாகப் பலரும் கூறக் கேட்டிருக்கின்றேன். அன்றுதான் அவர்களது பொறுப்பற்ற, தான்தோன்றித்தனமான, திமிரான நடத்தையை நேரில் அனுபவித்தேன். இவ்வாறான அனுபவங்கள் எவருக்கும் ஏற்படக்கூடாது என்பதால்தான் உதயனின் வாசகர் திருமுகம் ஊடாக இந்தச் சம்பவம் தொடர்பாக அறியத் தருகின்றேன். இத்தகைய மனிதாபிமானமற்ற சுத்தல்காரர்கள் மத்தியில் எனக்கு இருக்கை வசதி ஏற்படுத்தித்தந்த நடத்துநர் போன்ற மனிதாபிமானம் உள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்

சி.கேசவநாதன்
மானிப்பாய் வீதி
உடுவில்

## தனியார் நிறுவன ஊழியர்களாகிய எமக்கு நியாயம் கிட்டுமா?

நான் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் ஊழியராக பணி புரிகின்றேன்.

எனக்கு மாதாந்தக்கொடுப்பனவாக ரூபா 19000/= வழங்கப்படுகிறது. அரசின் கடந்த வரவு செலவுத்திட்ட யோசனையின் பிரகாரம் தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் சம்பளத்தில் மாதாந்தம் ரூபா 2500/= அதிகரிப்பு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்தகைய சம்பள அதிகரிப்பு எதுவும் எமது நிறுவனத்தால் எனக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கென வழங்கிய சம்பள அதிகரிப்பான ரூபா 2500/= எமது நிறுவனம் எமக்கு வழங்க வேண்டியது தானே நியாயம். அவ்விதம் வழங்காது நாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவோமானால் நாம் இது குறித்துச் சட்ட நடவாடிக்கை மேற்கொள்வதைத் தவிர மாற்று வழியேதும் எமக்குக் கிடையாதா?


ஆர்.துஸ்யந்தன்
ஒட்டுசுட்டான்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2016 ஒலிம்பிக் துளிகள்






1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின் பின்னர் ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமான காலப்பகுதியாக புறக்கணிக்கப்பட்டு வந்த கோல்ப் இம்முறை முதன்முறையாக சேர்க்கப்பட்டது.




ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு ஜூடோப் போட்டியில் கொசோவாவின் மஜ்லிந்தா கெல்மன்டி தங்கம் வென்றார். சேர்பியாவில் இருந்து கடந்த 2008 ஆம் ஆண்டு பிரிந்து தனிநாடாக உருவானதுதான் கொசொவோ. உலகிலுள்ள பல நாடுகள் இன்னும் கொசொவோவை ஒரு தனிநாடாக அங்கீகரிக்கவில்லை. இந்த நிலையில் கெல்மன்டியின் தங்கப் பதக்கம் அந்த நாட்டின் பன்னாட்டு அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது.





ரியோ ஒலிம்பிக் தொடரில் செய்திசேகரிப்புப் பணியில் ஈடுபட்ட பத்திரிகையாளர் சென்ற பஸ் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. எவரும் சாவடையவில்லையாயினும் சிலர் காயமடைந்தனர். இதனையடுத்து ரியோ ஒலிம்பிக்கின் கறுப்பு நாளாக அது பிரகடனப்படுத்தப்பட்டது.




ரியோ ஒலிம்பிக் தொடரில் வடகொரிய, தென்கொரிய வீராங்கனைகள் இருவர் செல்பி எடுத்தமை பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது. இருநாட்டு அரசியல் உறவுகளும் போரின் விளிம்பில் உள்ள நிலையில் வீராங்கனைகள் இருவரும் தமக்குள் ஒற்றுமை பாராட்டியமையே இதற்குக் காரணம்.




ஒலிம்பிக் வரலாற்றில் படகோட்டப் போட்டியில் ஆசியாவுக்குப் பதக்கங்கள் கிடைத்ததில்லை. ரியோ ஒலிம்பிக் தொடரில் இந்த வரலாறு மாறியுள்ளது. ரக்குவா ஹனேடா என்ற வீரர் இந்தமுறை வெண்கலம் வென்றார்.




ரியோ ஒலிம்பிக் தொடரில் குர்கீரட் சிங் என்ற நேபாள வீராங்கனை கலந்து கொண்டார். இவருக்கு வயது 13 மட்டுமே. ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட இளம்வயதுப் போட்டியாளர் என்ற பதிவை அவர் ஏற்படுத்தினார்.




ரியோ ஒலிம்பிக் தொடரில் ஈழத்துத் தமிழர் ஒருவர் களமிறங்கினார். பருத்தித்துறையைப் பூர்வீகமாகக் கொண்ட துளசி தர்மலிங்கம் என்ற வீரரே இவ்வாறு களமிறங்கியவராவார். ஆனால் அவர் இலங்கைக்காக அல்லாமல் கட்டாரைப் பிரதிநிதித்துவம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்க நீச்சல் வீரரான மைக்கல் பெல்ப்ஸ் தான் களமிறங்கிய ஒலிம்பிக் தொடர்களில் 23 தங்கப் பதக்கம், 3 வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப் பதக்கம் என ஒட்டுமொத்தமாக 28 பதக்கங்களை அள்ளியுள்ளார். நவீன ஒலிம்பிக், கிரேக்க கால ஒலிம்பிக் என ஒட்டுமொத்த ஒலிம்பிக் வரலாறுகளையும் எடுத்துக் கொண்டால் ஒரு தனிநபரின் ஆகச்சிறந்த அடைவு மட்டமாக இதுவே உள்ளது.




பீஜிங், லண்டன் ஒலிம்பிக் தொடர்களில் 100 மீற்றர், 200 மீற்றர், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் தங்கம் வென்ற போல்ட், ரியோ ஒலிம்பிக்கிலும் இந்த மூன்று போட்டிகளிலும் தங்கம் வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் ஹற்றிக்கில் ஹற்றிக் படைத்த முதல் குறுந்தூர ஓட்டப்பந்தய வீரர் என்ற சாதனையை அவர் நிலை நாட்டினார்.




பகாமாஸைச் சேர்ந்த சவுனே மில்லர் என்ற வீராங்கனை மிக நுட்பமான முறையில் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்றார். இரண்டாவது இடத்தில் வந்து கொண்டிருந்த சவுனே மில்லர் இலக்கை நெருங்கியவுடன் இறுதிக் கணத்தில் பாய்ந்து இலக்கைத் தொட்டார். இதனால் 0.7 செக்கன்கள் வித்தியாசத்தில் சவுனே மில்லர் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.




ரியோ ஒலிம்பிக்கில் நடைபெற்ற பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை கீழே வீழ்ந்து காயமடைய நியூசிலாந்து வீராங்கனை தனது போட்டியைக் கைவிட்டு உடனடியாக உதவினார். இது உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது மட்டுமல்லாமல் நியூசிலாந்து வீராங்கனைக்கு பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் விருது வழங்கிக் கௌரவித்தது.




ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த படகோட்டும் வீரர் சான்ரியாகோ என்பவர் புற்றுநோயிலிருந்து விடுபட்டுவந்து தங்கம் வென்றார். கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க அவர் தன் பதக்கத்தைப் பெற்றார். ரியோவில் இது ஓர் உருக்கமான சம்பவமாகப் பதிவானது.



அயர்லாந்து குத்துச்சண்டை வீரரான மைக்கல் ஓ ரெய்லி என்ற வீரர் ஊக்கமருந்து பயன்படுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டார். ரியோ ஒலிம்பிக் தொடரில் ஊக்க மருந்தை எடுத்துக்கொண்ட ஒரே வீரர் இதுவரைள இவர்தான்.



கிட்டத்தட்ட 90 ஆயிரம் பொலிஸார், படை வீரர்கள், ஒரு லட்சம் கண்காணிப்புக் கமராக்கள், ஆளில்லா விமானங்கள் என அதியுயர் பாதுகாப்புக்கு மத்தியில் ரியோ ஒலிம்பிக் தொடர் நடத்தி முடிக்கப்பட்டது. இதன் மூலம் ஒலிம்பிக் தொட[illegible] வழங்கிய நாடாக பிரேஸில் பதிவானது.



ரியோ ஒலிம்பிக் தொடர் நிறைவடைந்த நிலையில் அடுத்ததாக ஒலிம்பிக் தொடரை நடத்தவுள்ள நாடான ஜப்பானிடம் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தால் ஒலிம்பிக் கொடி கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப் பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## தனுசு

### மூலம், பூராடம், உத்ராடம், 1ஆம் பாதம் வரை

இலட்சியத்தோடு செயற்படுபவர்கள் நீங்கள். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் முக்கியத்துவம் வகிப்பவராக விளங்குவீர்கள். தேசப்பற்றும், தெய்வ பக்தியும் மிகுந்த உங்களுக்கு ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும்.

இப்பொழுது பத்துக்கு வரப்போகும் குரு, பதவி மாற்றத்தை ஏற்படுத்துமோ என்று பயப்படவேண்டாம். உங்கள் சுய ஜாதகத்தைப் புரட்டிப் பாருங்கள். அதில் குரு இருக்கும் நிலை, பாதசாரப் பலம், பார்க்கும் கிரகம் இவற்றைப் பொறுத்து.

உங்கள் ராசிக்கு சப்தமாதிபதி புதன். அவருடைய அமைப்பைப் பொறுத்தே வாழ்க்கைத் துணை அமையும். வாரிசுகளும் உருவாகும். புத்திர ஸ்தானாதிபதியாக விளங்கும் செவ்வாய் விரயாதிபதியாகவும் இருப்பதால், பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். அதன் விளைவாக மன நிம்மதி குறைவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இனி குருவால் உங்கள் ராசி அடையப்போகும் நிலையைப் பற்றிப் பார்க்கலாம்.

#### குருவால் ஏற்படும் பலன்கள்

ஆடி 18ஆம் திகதி (2.8.2016) அன்று உங்கள் வாழ்க்கைக்கு அத்திபாரம் அமைத்துக்கொடுக்கும் நாள். அன்றைய தினம் குரு உங்கள் ராசிக்கு பத்தில் வருகிறார்.

10இல் குரு சஞ்சரிக்கும் பொழுது, பதவி மாறும் என்பார்கள். ஒரு சிலர் பதவி பறிபோகும் என்பார்கள். ஒரு சிலர் பதவி இல்லாதவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும் என்பார்கள். ஆனால், நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், 4ஆம் இடத்துக்கு அதிபதியாகவும் விளங்கும் குருவினால் மக்கள் செல்வங்களால் ஏற்பட்ட மனக் கவலை மாறும். அருளாளர்களின் தொடர்பும், ஆன்மிகவாதிகளின் அரவணைப்பும் உங்களுக்குப் பெருவாரியான நற்பயன்களை வழங்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடி தொழில் மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் வந்து சேரும். தொழில் புரிபவர்களுக்குக் கிளைத்தொழில்கள் தொடங்கும் யோகம் கூடிவரும். தொழில் நிலையங்களை இடம் மாற்றுவது அல்லது அதனுடைய அமைப்பை மாற்றுவது நல்லது. கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் போன்றவற்றை இல்லத்திலும், தொழில் நிலையத்திலும் வைத்துச் செய்யலாம். ஆரோக்கியம் சீராகும். நல்ல காரியங்களை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள். பயணங்கள் அதிகரித்தாலும், அதன் மூலம் பயன் கிடைக்கும்.

#### குரு பார்வை கொடுக்கும் பலன்கள்

நவக்கிரகங்களில் சுப கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குருபகவான். அவரது பார்வைதான் விருப்பங்களை நிறைவேற்றும் பார்வை. நற்பயன்களைப் பலமடங்கு தரும் குருவின் பார்வை, உங்கள் ராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. வாக்கு, தனம், குடும்பம், சுகம், வாகனம், தாய், மதிப்பு, மரியாதை, வியாதி, கடன், உத்தியோகம், தொழில் ஆகிய அனைத்து வழிகளிலும் நீங்கள் எதிர்பார்த்த நற்பயன்கள் கிடைத்து, உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தப்போகிறது. நல்வாக்கு சொல்பவர்களின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்துக்கு வித்திடும்.

(தொடரும்)

# ஆவணத் திரைப்பட வெளியீடு














மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை வெளிக்கொணரும் 'வாழ்வைத்தேடி' ஆவணத்திரைப்பட வெளியீட்டு விழா கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திருகோணமலை உட்துறைமுக வீதியி லுள்ள சட்ட உதவி மையத்தின் கேட்போர் கூடத்தில் அருட்தந்தை வண. யோகேஸ்வரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. அவர் தலைமையுரை ஆற்றுவதையும், படத் தயாரிப்பாளர் சிவபாஸ்கரன் உரையாற்றுவதையும், போரினால் பாதிக்கப்பட்டு அவயங்களை இழந்த ஒருவருக்கு அதற்கான உபகரணங்கள் வழங்கப்படுவதையும், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மணிவண்ணனிடம் வண. யோகேஸ்வரன் அடிகளார் ஆவணப்படத்தின் முதல் பிரதியை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காண முடிகின்றது. (40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைப் பொருள்களிலிருந்து விடுதலை பெறுவோம்

அருள்பணி. செ.அன்புராசா,

(நேற்றைய தினம் வெளியான "போதையால் சீரழிகின்றது நாட்டின் இளைய சமுதாயம் என்ற தலைப்பிலான கட்டுரையின் தொடர்ச்சி....)

**வே**தனைக்கும் பரிதாபத்திற்கும் உரிய விடயம் என்னவென்றால் இப்போதைப் பொருள் பற்றி அறிந்திராத அப்பாவி மக்களில் பலர் மிகக் குறுகிய காலத்திற்குள் போதைப் பொருள் பாவனையாளர்களாகி போதைக்கு அடிமையாகிப் போகும் நிலையில் உள்ளனர். தனிப்பட்ட நபர்கள் மட்டுமல்ல சில பிரதேசங்களும் கிராமங்களும் இதற்கு இரையாகிப் போகும் மிக மோசமான துர்ப்பாக்கிய - பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது மிகவும் வேதனைக்குரியது.

## இளையோர் குறிவைப்பு

வடபுலத்தில் இளையோரைக் குறிவைத்து போதைப் பொருள் விற்பனை செய்யப்படுகின்றது என்பது பலராலும் சுட்டிக்காட்டப்பட்ட விடயமாகும். இளையோரை-மாணவரைக் குறிவைப்பதன் வழியாக அவர்களை இலகுவில் இதற்குள் விழச்செய்து விடலாம் என்பதும், கல்வி, கலாசார பண்பாட்டு விழுமியங்களில் இருந்து அவர்களை விலக்கிவிடலாம் என்பதும், நாளடைவில் இவ்விளையோர்களே நீண்டநாள் வாடிக்கையாளர்களாக மாறிவிடுவார்கள் என்பதும் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கும் சதி என்பது இங்கு தெளிவாகிறது. எனவேதான் இச்சதி முயற்சியில் சிக்கிக்கொள்ளாமல் இளையவர்கள் - மாணவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளவேண்டி இருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மட்டில் விழிப்பாக இருந்து கரிசனையோடு அவர்களைக் கண்காணிப்பது மிகமிக அவசியமாகிறது.

## எப்படி அடிமையாகிறார்கள்?

1. பொதுவாக, சகபாடிகள்/ நண்பர்கள் ஊடாக ஒரிரு தடவைகள் போதைப்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இதனைத் தாங்களாகவே நாடிச் செல்லும் உந்துதலை கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப் பொருள்கள் அளிப்பதாக பாவனையாளர்கள் சொல்லுகிறார்கள்.
2. பின்னர் நண்பர்கள் பரிமாறாவிட்டாலும் தாமாகவே தேடிச்சென்று பெற்றுக் கொள்ளுகின்ற வழக்கத்தை பழக்கமாக்கிக் கொள்கிறார்கள் இப்பாவனையாளர்கள்.
3. நாளடைவில் இது இன்றியமையாத ஒன்றாக பாவனையாளர்களுக்கு மாறிவிடுகிறது. அதாவது 'இது இல்லாமல் இயங்கவும் முடியாது. இருக்கவும் முடியாது' என்ற நிலைக்கு உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தள்ளப்படுகிறார்கள். சாதாரண உடலியல் செயற்பாட்டுக்குக்கூட அவர்களுக்கு அது அத்தியாவசியமாகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு பாவனையாளர்கள் தள்ளப்படுகிறார்கள். அசாதாரண ஒரு நிலையாக அது இருந்தாலும், அதனையே சாதாரண நிலையாக மாற்றி பாவனையாளர்களை தன் பிடிக்குள் வைத்திருக்கும் தன்மை கொண்டதாக போதைப்பொருள் மாறிவிடுகிறது.
4. இப்போதைப் பொருள்களைப் பெற பொருளாதார வசதிகளோ, உழைப்போ இல்லாவிட்டாலும் களவு எடுத்து, பொய் சொல்லி, பிறரை ஏமாற்றி, பணம் பறித்து, கொள்ளை அடித்து தமக்குத் தேவையான அன்றைய போதைப்பொருளைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், போதைப்பொருள் பாவனையாளர்களால் போதைப்பொருள் இல்லாமல் இருக்கவோ, இயங்கவோ முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.
5. இந்த நிலை தொடருமாயின் மிகப் பயங்கரமான அடிமை நிலையை (Addiction) அடைந்து விடுவார்கள். அதனால் போதைப்பொருள் தன் பிடியிலேயே பாவனையாளர்களைவைத்திருக்கும். அதுவேஅவனை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தி, ஆண்டு நடத்தும்.

## தண்டனைகளுக்கு முன்

போதைப்பொருள் வைத்திருப்பது, விற்பது, பாவிப்பது பெரும் குற்றங்களாகக் கருதப்பட்டு சரியான தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து இல்லை. போதைப்பொருள் சம்பந்தமான விழிப்பூட்டல்கள் எந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறது என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகிறது. அந்தவகையில்,

1.போதைப்பொருள் பற்றிய தொடர் விழிப்புணர்வு கொடுத்தல், 2.பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல், 3.புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின் உழைப்பதற்கான தெரிவுகள் - வாய்ப்புக்கள் சாத்தியமாக்கப்படல், 4.எச்சரிக்கைகளை மீறி போதைப்பொருளை வைத்திருப்பவர்கள், விற்பனை செய்பவர்களுக்குக் கடும் தண்டனை நிறைவேற்றப்படல் போன்றவை பின்பற்றப்படுவது போதைப் பொருள் பேராபத்தில் இருந்து சமூகம் மீண்டெழ உதவும் என எதிர்பார்க்கலாம்.

> போதைப்பொருள் வைத்திருப்பது, விற்பது, பாவிப்பது பெரும் குற்றங்களாகக் கருதப்பட்டு சரியான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து இல்லை. போதைப் பொருள் சம்பந்தமான விழிப்பூட்டல்கள் எந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகிறது.

## விழிப்புணர்வு, புனர்வாழ்வு, தொழில்வாய்ப்பு, தண்டனை

1. **விழிப்புணர்வு:** போதைப்பொருளால் ஏற்படும் தனிமனித சமூகத் தீமைகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அனைத்து மக்கள் மட்டங்களிலும் சிறப்பாக மாணவர்கள் - இளையோர் மட்டத்தில் தொடர்ந்து செய்யப்படல் வேண்டும். இச்செயற்பாடானது, போதைப்பொருள் விடயத்தில் ஆங்கிலப் பழமொழி ஒன்று சொல்வதுபோல (Prevention is better than Cure) குணப்படுத்தலைவிட நோய்த்தடுப்பு சிறந்ததாகும்.
2. **புனர்வாழ்வு:** போதைப்பொருள் வைத்திருப்பவர்கள், விற்பவர்கள், பாவிப்பவர்கள் அனைவரும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவதன் வழியாக அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கும் செயற்பாட்டைச் செய்வது ஆரோக்கியமான ஒரு சமூகத்தின் கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கிறது. வட புலத்தில் போதைப் பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு இல்லம் 'திருப்புமுனை', பொன்னையன் குடியிருப்பு, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற விலாசத்தில் அமைந்திருக்கிறது. வின்சன் பற்றிக் அ.ம.தி. அடிகளாரினால் உருவாக்கப்பட்டு அமலமரித்தியாகிகளால் நிர்வகிக்கப்படும் இந்தநிறுவனத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் புனர்வாழ்வு பெற்று புது வாழ்வு பெறுகின்றார்கள். வடகிழக்கில் போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வளிக்கக் கூடிய ஒரே நிறுவனமாக இந்த நிறுவனமே திகழ்கிறது. அரச திணைக்களங்களாலும் அரச சார்பற்ற நிறுவனாங் களாலும் மேலும் பலப்படுத்தப்படுவதன் வழியாக போதைப்பொருள் பாவனையாளர்கள் - விற்பனையாளர்கள் போன்றவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களை இந்த நிறுவனம் தொடர்ந்து ஆற்றக்கூடியதாக இருக்கும்.
3. **தொழில் வாய்ப்பு:** புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு ஏற்ற தொழில்களைச் செய்வதற்கும் உழைத்து முன்னேறுவதற்கும் உரிய வாய்ப்பு கொடுக்கப்படல் வேண்டும். போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகிறவர்கள் வேறு தொழில்கள் இல்லாத படியினால் இதனைச் செய்வதாகப் பொதுவாகக்கூறுவார்கள். எனவே, புனர்வாழ்வின் பின் அவர்களுக்கேற்ற தொழில் வாய்ப்புக்கள் அளிக்கப்படல் வேண்டும்.
4. **கடும் தண்டனை :** கடும் எச்சரிக்கைகளைமீறிபோதைப் பொருள்களை வைத்திருப்பவர்கள் - போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் - போதைப்பொருள்களை பாவிப்பவர்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்பது இவற்றோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும்.

ஆக, இத்தகைய ஓர் அணுகு முறை போதைப்பொருள் ஆபத்தில் இருந்து சமூகத்தை விடுவிக்கவும் - பாதுகாக்கவும் துணையாக அமையும் என நம்பலாம். எனவே போதைப்பொருளி லிருந்து விடுதலைபெற்ற சமூகமாக ஒட்டுமொத்த சமூகமும் துலங்க அனைவரும் தயாராவோம், மற்றவர்களையும் தயார்ப்படுத்துவோம்.

*(முற்றும்)*

அமதி, மாங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையின் வழி பொழியும் அமைதி நாடக திருவிழாவில் மிளிர்கிறது

செ.உமாசுதன்



## ஆடலரசுவின் கலையாடலான மடல்

ஆய கலைகள் அறுபத்தி நான்கு. அதன் சிறப்புக்கள் என்றும் ஈடு இணையற்ற மாண்பு. நல் இயல்புகளை மொழிவதிலும் மனிதனை பிறழ்வு நிலையின் ஆட்படுத்தல்களில் இருந்தும் காத்து இரட்சிப்பதில் பணிவானது. அந்த வகையிலே பார்வையாளர்களோடு நேர்முகமாக ஊடாடிக் கதையாடும் நாடகக் கலை என்பது விடுதலைக்கான தென்றல்கள் இதமாகவும், துன்பமாகவும், சோகமாகவும், நகைச்சுவையாகவும், சுதந்திரக் கோசமாகவும் சமூக முரண் நீட்டங்களை கதைகளுடு சொல்லி விடுகின்றன.

அந்த வகையிலே செயல்திறன் அரங்க இயக்கம் நல்லூர் நாடகத்திருவிழா 2016 நிகழ்வுகளை சிறப்பான முறையிலே நடத்திவருகின்றது. இம்முறையும் மீள்தலின்றி, மாற்றமின்றி, விடுதலை மோட்சமின்றி கிளர்ந்தெழுகின்ற தமிழ்ச் சமூகத்தின் அவலச் சுவைகளும் கிராமியக் கலைகள் தந்துவிடுகின்ற இன்பச்சுவையும் சமஸ்தானம் பெறுகின்றன. பார்வையாளர்களிடையேயும், சமூகத்திடையேயும் பல கதைகளை செய்தியாக ஊடாடச் செய்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முற்றம் கலைக்குழு செயல்திறன் அரங்க இயக்கத்துடன் ஊடாடி கலை மகிழ்தலின் ஊடான இயங்கு நிலை தந்துள்ள தென்னிந்திய கிராமியக் கலைகளின் ஆற்றுகையும் உன்னதம் பெறுகின்றன. இந்த ஆற்றுகை நெறியாடலை ஆடரசு நிகழ்த்திவருகிறார். இந்த நிலையிலே அவரை நாடகங்கள் கோ(ஓ)லமிட்ட, மகிழ்வை இடையிடை தூவிவிட்ட பஞ்சபூத அரங்கின் எல்லையிடல்களிடை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அற்புதமான தருணம். அவர் தந்துவிட்ட கலையாடலான மடலை ஆடலரசுவின் கருத்து விழித்தலாக உங்கள் முன் தருகிறோம். உதய வாசகராய் நீங்களும் உணர்வாய் நேசித்து வாசித்து ஓர் ஆடல் புரியுங்கள்.

அற்புதமான நாடகங்கள் தினமும் மேடையேறுகின்றன. நல்லை நாயகன் ஆலய வீதி தாண்டி நாடக மொழிவாடை நறுமணம் கமழும் செயல்திறனரங்க நாடகத் திருவிழா அலையிலும் கலந்து கொண்டு நல் வடிவம் பெறுங்கள்.



### அறிமுக மதிமுகம்

என்பெயர்வந்துவேணுகோபால். அப்பிடிங்கிறது தாய் தந்தையர் வைச்ச பெயரு. ஆட்டத்துக்கு வர்றதுக்கு இந்த மாதிரி கலைத்துறையில வரனுமுண்ணு அவங்க முடிவு பண்ணி எதுவும் இல்ல. ஒரு விசயம் இருந்திச்சு. அது வந்து பாரம்பரியம். தாத்தா வந்து கூத்துக் கலைஞர். அவர் முடிஞ்சதுக்கு அப்புறமா தனக்கான ஒரு தளத்தைத் தேடுறதுக்கு ஓர் அமைப்பா இருந்து செயற்பட்ட அமைப்பில செயற்பட்டோம். செயற்படுறோம். அந்த அமைப்புக்கு பெயர் வந்து ஆதி தமிழர் விடுதலை இயக்கம். அந்த அமைப்புக்கு கீழ அதனுடைய பொதுச் செயலாளர் வினோத். அவர்தான் வந்து முதன்முதல எனக்கு இந்த மாதிரியான கலைகளை அறிமுகப்படுத்தி வைக்கிறதுக்கான பெரிய பணியாய் இருக்கிறாரு. கிராமத்துக்குள்ளையே எல்லாரும் கலைகள் செய்யிறது பறை வாசிக்கிறது எல்லாம் சடங்காய் இருக்கு. இதை எல்லாம் விழாவாய் கொண்டாட ஆரம்பிச்சது எப்பன்னா இந்த அமைப்பு வந்ததுக்கு அப்புறம்தான். அதிலை இணைஞ்சிட்டு அதுக்கு அப்புறம் என்னுடைய மாமா வந்து ஒரு பெரிய உந்துதலாய் இருந்து சொல்லிக்கொடுத்து எல்லாத்தையும் பண்ணி நிகழ்ச்சிகளை பண்ண ஆரம்பிச்சோம். அதுக்கு அப்புறம்தான் அவர் ஆடலரசு எண்ணு எனக்கு பெயர் வைச்சாரு. அந்த பெய ரின் அடிப்படையில தான் என்ன இப்ப கூப்பிடுறாங்க. இனம்கண்டு கொள்ளுறாங்க.

நான் ஒரு வழக்கறிஞராய் இருக்கிறேன். மெட்ராஸ் யுனிவசிட்டில எம்.ஏ. ஜெர்ணலிசம் படிச்சிருக்கேன். கலைத்துறையில பன்னிரண்டு, பதின்மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்கு. எல்லா இசைக் கருவிகளும் வாசிக்கிறேன். தோலிசைக் கருவிகள். அதே மாதிரி பாரம்பரிய நாட்டார் கலைகளை ஆடுறதுஒண்ணு. இன்னொண்ணு ஒரு நாலு ஆட்ட வகைகளை மீட்டுருவாக்கம் செய்யணும் எண்ணு சொல்லி முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேன். ஆய்வு செய்திட்டு இருக்கேன். என்னுடைய செயல்பாடு இந்த மாதிரி ஆடுறது பாடுறதுன்னு. இந்தமாதிரி விசயங்களையெல்லாம் பாத்த பிறகுதான் ஆடலரசு எண்ணு பெயர் வைச்சாங்க. ஆடலரசு எண்ணா சிவன்.

அவர் உடுக்கையோடை ஆடுற வேகத்தை பாத்து என்னுடைய பறை அறைஞ்சு ஆடுற ஆட்டத்திலையும் அந்தவேகம் இருக்கணும்னு கருதி இந்த பெயரை வைச்சிருப்பாங்க. முக்கியமாய் தமிழ் பெயராய் இருக்கணும்னும் கருதியிருப்பாங்க. பறை என்கிறதும் முக்கியமான இசைக் கருவி. அது ஓர் அறிவியல் எண்ணு [illegible]யும். நான் வந்து அதை விஞ்ஞான ரீதியிலை தான் பாக்கிறன். கலை என்கிற விசயங்களைத் தாண்டி ஆய்விலை போகும் போது பறை இசையின் தாளங்கள், அதன் அதிர்வுகள், பறை இசைக்கு மட்டுமே இருக்கக்கூடிய தன்மைகள் எல்லாமே வித்தியாசமாய் இருக்கும். ஒரு பத்துநாள் திருவிழா நடக்கிற கோயில்லை பறை இசையை வைச்சு ஊர்வலம் செய்தோம்னா பத்தாவது நாள், எட்டாவது நாள் அல்லது ஏழாவது நாள் மழை வரும். அதுக்கொரு காரணம் இருக்கு. பறை இசையின் அதிர்வு என்கிறது கீழ் மேகத்தை முட்டி ஈரப்பதத்தை தோற்றுவிக்கும். மழை பெய்யும். உண்மைல அந்த அதிர்வின் சக்திதான் இதுக்கு காரணம். அது ஒரு மாற்றத்தை உண்டு பண்ணுது. பறையிலை வந்து நிறையவிதம் இருக்கு சப்பறத் தடி, சாமியடி, ஒற்றையடி. உருட்டடி இப்பிடியிருக்கு. அதிலும் கலியாணத்துக்கு தனி இசை வாசிப்பாங்க. கோயிலுக்கு தனி இசை வாசிப்பாங்க. சாவுவீட்டுக்கு தனியாய் வாசிப்பாங்க. இந்த மாதிரி புரட்சிகரமான நிகழ்த்து கலைகளின் ஆற்றுகை மேடையிலை தனித்துவமான வாசிப்பு இருக்கும். உடுக்கை வாசிச்ச உடன எப்பிடி சாமி ஆடுறாங்களோ அப்பிடித்தான் ஒரு நூறுபோர் உள்ள மேடையிலை பறை இசையை வாசிக்கும் போது அதன் அதிர்விலை எண்பதுபேர் கட்டாயமாய் ஆடுவாங்கள். அப்படியொரு தனித்தன்மை அதில இருக்கு.

### நாட்டார்பாடல்

நாட்டார் பாடல்கள் என்கிறது அவங்க அவங்க மண்ணுக்கு ஏற்ற மாதிரி அவங்க வார்த்தைகளை வைச்சு பாடுவாங்க. பாடல்கள் எப்போதும் ஒண்ணு தமிழ் சம்பந்தமானதாய் இருக்கும் மற்றது உழைப்பாளர்கள் அவர்களுடைய முயற்சி தொடர்பானதாய் இருக்கும். மகிழ்ச்சி சம்பந்தமானதாய் இருக்கும். அவ்வளவுதான்.

செயல் திறன் அரங்க இயக்கத்திற்கும் எனக்குமான தொடர்பு கனதியானது. அதனுடைய ஆரம்பத்தை சென்னை பல்கலைக்கழகம் எனக்கு ஏற்படுத்தி தந்திச்சு. எப்பிடின்னா நான் எம்.ஏ முதலாண்டு படிக்கிறதுக்கு முன்னாடி இங்க இருக்கிற செயல்திறன் அரங்க இயக்கத்தினுடைய பணிப்பாளர் தேவானந் படிச்சிட்டு இருக்கார் அங்க. அப்போ அங்க வந்து முற்றம் என்றொரு குழுவை உருவாக்கிறாரு. உருவாகும் போது அங்க நாடகங்களை நிகழ்த்திட்டு இருக்காரு. அந்த சமயம் நாட்டுப்புற கலைகளை நிகழ்த்துறதுக்காக நானும் அங்க போயிருந்தேன். அதுதான் முதல் சந்திப்பு. அதுக்கப்புறம் நான் கல்வியைத் தொடர்ந்திட்டு இருக்கும்போது தேவானந் படிப்பை முடிச்சிட்டு சொந்த மண்ணுக்க வந்திட்டார். இதன் தொடர்ச்சி என்பது நாட்டுப்புற கலைகளை யாழ்ப்பாணத்திலையும் செய்யணும் எண்டுற அவருடைய நோக்கம் என்னை இங்க வரவழைச்சுது. அதன்படி 2011 ஆம் ஆண்டில யாழ்ப்பாணம் முதல் தடவையா வந்திருக்கேன். அந்த சந்தர்ப்பத்திலை ஒயிலாட்டம் சாட்டைக்குச்சியாட்டம், பறை, ஆதிவாசி நடனம் ஆகியவற்றை மாணவர்களுக்கு பழக்கி மேடையேற்றினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழோடு இசை, பாடல் மறந்தறியாத தர்மபூபதியாக எமக்கு வாய்த்த பெருமாட்டி

கே.எஸ்.சிவஞானராஜா

கல்விச்சமூகத்தின் இருப்பிடமாகவும், கலைகளின் உறைவிடமாகவும் விளங்குவது கட்டுவன் என்ற கிரா மம். இதனாலன்றோ ஏனைய கிராமத்தவர்கள் கட்டுவனில் வாழும் இளையவர்களைக் கட்டுவோம் என்று கங்கணம் கட்டி நிற்பார்களோ என்னவோ, கட்டுவன் ஊரில் பிறந்தவர்கள் மிகவும் பண்பானவர்களேயாவர், பயபக்தியானவர்கள். அத்தகு ஊரிலே பிறந்த இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் இலக்கணப்புலி என வர்ணிக்கப்பட்டவர். இலக்கணத்தில் எவருமே விஞ்சமுடியாத அளவுக்கு நிபுணத்துப் புலமை கொண்டவர். அத்தகைய பெருந்தகையைப் போற்றிய குடும்பமே முத்துவேலு குடும்பம். முத்துவேலு பொன்னம்மா தம்பதியினருக்குப் பிறந்தவரே தர்மபூபதியாவார். மார்ச் 21ஆம் திகதியில் பிறந்த இவர் இசைத் துறையில் அதீத நாட்டம் இருப்பதை உணர்ந்த தந்தையார், உரிய காலத்தில் இந்தியாவுக்கு அனுப்பி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூசணம், இசைக்கலைமாணி (B.Music) இரண்டிலும் உயர்தகுதி பெற வழிசமைத்தார். ஏறக்குறைய (1957 தொடக்கம் 1963) ஆறு வருடங்கள் கர்நாடக சங்கீதம், வாய்ப்பாட்டு, வயலின், தமிழ், தமிழ் இலக்கியம், ஆங்கிலக் கல்வி போன்ற துறைகளில் விசேட பாண்டித்தியம் பெற்றார்.

### கடமை

இசை ஆசிரியராக நியமனம் பெற்று இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் (1974 தொடக்கம் 1975) வரை விசேட பயிற்சி பெற்று . மன் னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் எனப் பல வலயப்பாடசாலைகளில் மூத்த இசை ஆசிரியராகப் பணிபுரிந்து, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சாதனை புரிந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இசை விரிவுரையாளராக நியமனம் பெற்றார். மேலும் யாழ். பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலை பீடத்தில் இடைவரவு விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

பற்பல மாணவச் செல்வங்களுக்குத் தாயாக விளங்கி, பலருக்கு வாழ்வளித்தவர். வட இலங்கைச் சங்கீத சபை, அரச பாடத்திட்டக் குழுவில் பெரும் பணியாற்றி பரீட்சகராகவும் விளங்கிய பேறுடையவர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இல்ல மாணவிகளுக்குப் பன்னிரண்டு ஆண்டு காலம் இசையதை ஊட்டியவர். மேலும், இசை நிகழ்வுகளுக்கு வயலின் வாசித்து அரும் பணியாற்றியவர். தற்பொழுதும் அதனை தொடருகின்றார்.

### உளமருத்துவம்

வயது வித்தியாசமின்றி சகலருக்கும் எழக்கூடிய சிக்கல்களுக்கு நோகாதவாறு தீர்வு காணக் கூடியவர். ஆங்கிலப் புலமையுடைய ஆன்மிக, இலக்கிய, இசைப் பெண்மணியாக தற்பொழுதும் பழம் வீதி, கந்தர்மடத்தில் வாழ்வதனால் எவருக்கும் சுகமளிக்கவல்ல போதனைகளை எழுபத்தேழு வயதிலும் வழங்கி வருகின்றார்.

இவருடைய கணவரும் ஒரு வைத்தியர் என்ற காரணத்தினால், திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் சௌபாக்கியம் மிளிரும் ஒரு தாயாக இலங்கையில் திகழ்கின்றார். கலாபூசணம், சங்கீத பூசணம், இசைத்தாய், இசைக்கலை மாணி, முதலமைச்சர் விருது, சிவத்தமிழ் விருது ஆகிய பட்டங்களைச் சொந்தமாக்கியுள்ளார். இவரது சேவை நாட்டுக்குத் தேவையே.



பற்பல மாணவச் செல்வங்களுக்குத் தாயாக விளங்கி, பலருக்கு வாழ்வளித்தவர். வட இலங் கைச் சங்கீத சபை, அரச பாடத்திட்டக் குழுவில் பெரும் பணியாற்றி பரீட்சகராகவும் விளங்கிய பேறுடையவர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இல்ல மாணவிகளுக்குப் பன்னிரண்டு ஆண்டு காலம் இசையதை ஊட்டியவர். மேலும், இசை நிகழ்வுகளுக்கு வயலின் வாசித்து அரும்பணியாற்றியவர் தற்பொழுதும் அதனை தொடருகின்றார்.

# கலையின் வழி...

இந்தத் தடவை 2016 இல் இப்ப நடந்திட்டு இருக்கிற நல்லூர் நாடகத் திருவிழாவில சுளகாட்டம், பறையிசை, கும்மியாட்டம் எண்ணு சொல்லி ஒரு ஆறுவகையான ஆட்டங்களைக் கலைஞர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கேன்.

செயற்றிறன் இயக்க, அரங்க இயக்கமும் அப்பிடித் தான் தங்களுக்கென்று ஒரு தளத்தை உருவாக்கியிருக்கிறாங்க.அதிலை உறுதியாய் இருந்து கொண்டு சமூகத்திற்கு நல்ல செய்திகளைச் சொல்லுறாங்கள். அதிலை மிகத் தெளிவாய் இருக்கிறாங்கள்.அழிவின் வழி உளவியல் ரீதியலை பாதிக்கப்பட்டிருக்கிற குழந்தை களுக்கு சமூகத்துக்கு ஆற்றுப்படுத்தலாய் இருக்கு.இந்தப் பாரம்பரிய கலைகள் அவங்களுக்கு மகிழ்வூட் டுது.அதேமாதிரி நவீன நாடகங்கள் தனக்கு அல்லது தன் சமூகத்திற்கு நேர்ந்த பாதிப்புக்களை இந்த கலையின் மூலமாக சமூகத்திற்கு. வெளிப்படுத்திறாங்க.இவ்வளவு விசயங்கள் நடந்திருக்கு விழிப்பாய் இருக்க வேணும் எண்டு ஆழமாய் சொல்லுறாங்க. அந்தவகையிலை இதுவொரு கலையின் காத்திரமான செயற்பாடு.

### கலைஞர்கள்

கலைஞர்களை எடுத்து பார்த்தோம்னா அவங்க துறை சார்ந்து தனித்துவமானவங்களாய் இருப்பாங்க. இப்போ தவில், நாதஸ்வரம் வாசிக்கிற கலைஞர்கள் அதன் தனித்துவத்தை உள்வாங்கி நடப்பாங்க.கூத்து ஆடுறவங்க அந்த பாணியை கருத்திலை கொண்டிருப்பாங்க.பரதம் ஆடுறவங்க அதற்குரிய பாணியிலை காணப்படுவாங்க. ஆனாலும் தமிழகத்திலை பரதம் ஆடுறவங்க இந்த நாட்டுப்புறக் கலைகளைக் கற்றுக் கொள்ளுறதிலை காட்டுற ஆர்வம் குறைவு.இங்க யாழ்ப்பாணத்திலை பார்த்தா பரதம் கத்துகிற மாணவர்களிட்டை நாட்டுப்புறக் கலைகளைக் கத்துக்கணுமெண்ட ஆர்வம் அதிகம் இருக்கு.அதை நான் பார்த்திருக்கேன்.

பேராசிரியர்களாக இருக்கட்டும் ஆசிரியர்களாக இருக்கட்டும் செயற்றிறன் இயக்க அரங்கம் வந்து கலைகளை ஆர்வத்தோடை கத்துகிறது மிகப்பெரிய வெற்றி.கலையின் ஆத்மார்த்த வெற்றின்னு சொல்லலாம்.

ஒரு நிகழ்த்து கலைன்னு சொன்னால், அது தன்னுடைய பாரம்பரியத்தை தொட்டு இருக்கும்னா அது தன்னுடைய சமூகத்திற்கு ஒரு சேதியை சொல்லும். கலைகள் சமூக கனதியான ஊடாட்டம் பெறும் எண்டு சொல்லலாம்.

### நல்லூர்த் திருவிழா

நல்லூர் முருகனைப்பற்றி நான் ஊரிலை இருக்கும் போதே கேள்விப்பட்டிருக்கேன்.பக்தியான கோயில். அடிப்படையிலை என் வீட்டிலை கூட என் தாத்தவோடை படமும், முருகனோடை படமும் தான் வைச்சிருக்கேன்.நினைவாய் இருக்கு.எங்க ஊரைச் சுற்றியே ஆண்டார் குப்பம்,பெரும்பேடு,சிறுவார் குடி,திருத்தணி இப்பிடின்னு ஆறு முருகன் கோயில் இருக்கு. முருகன் தமிழ்க் கடவுள்.போன மாசத்துக்கு முதல் மாசம் மலேசியா பத்துமலை முருகனை தரிசிச்சேன்.அங்க உள்ள மக்கள் எப்பிடி வழிபடுறாங்க என்றதே ஒரு உணர்வாய் இருந்தது.அதே மாதிரி இப்ப நல்லூர் முருகனைச் சந்திச்சிருக்கிறேன்.வணங்கியிருக்கிறேன். இங்க இருந்தது இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குப் போனாலும், திருவிழாக் காலத்திலை எல்லாரும் வந்து ஒன்றுகூடி வழிபடுறாங்க.நான் இதை பக்தியின் கூடுதலாகத்தான் பார்க்கிறேன்.முருகனைப் பார்க்கிற போது யாழ்ப்பாண தமிழ் சமூகத்தின் காவல் தெய்வமாய்த் தோற்றம் தர்றாரு.

நல்லூர்க் கந்தன் திருவிழா என்கிறது பக்தி சார்ந்து, மொழி சார்ந்து, மதம் சார்ந்து நடக்கக்கூடிய ஒரு விழாவாய் இருக்கு.ஆனால் செயற்றிறன் அரங்கம் ஏற்பாடு செய்திருக்கிற நாடகத்திருவிழா என்கிறதிலை மதமில்லை,மொழியில்லை எல்லாரும் கலையின் வழி இணைந்து ஊடாடுகின்ற செயல்நிலையாய் இருக்கு.நல்ல விடயம்.பொருளாதார நிலையிலை அழிவடைஞ்ச ஒரு சமூகத்தின் கதையை கூத்து வடிவாகவும் சொல்லியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.நவீனம் என்கிறதூடாக கூத்திலை ஒரு மாற்றத்தை ஆரோக்கியமான வழியிலை கொண்டு வரலாம் என்பதுதான் என்னுடைய ஆதங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்களை இணைப்பதே நல்லை ஆதீனத்தின் கடமையாக வேண்டும்

பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் ஏற்படுத்திய சமய எழுச்சி மாபெரும் சைவத்தமிழ்ப்புரட்சியாக மாறி பௌத்த, சமணர் மதத்துக்கு மாறிய எமது மக்களையும் மன்னர்களையும் எமது தாய் மதத்துக்குத் திரும்ப வைத்த பெருமை ஆங்காங்கு காணப்படுகிறது. ஞான சம்பந்தப் பெருமான் சமணர்களை வாதில் வென்றதும் அவர்களைக் கழுவில் ஏற்றியதும் சைவத்தமிழ் ஆன்மிகத் தலைவர்களுக்கு முன்னுதாரணமாக உள்ளது. இதேபோல் நாவுக்கரசரும் நாமார்க்கும் குடியல்லோம் என்று பாடி மகேந்திர பல்லவ அரசனை எதிர்த்து துணிந்து நின்றமை ஆன்மிகத்தின் உண்மைத் துடிப்பை எடுத்துக்காட்டுகிறது. இவ்விதம் எமது அருளாளர்கள் ஆட்சியாளர்களின் பின் சீரிய முறையில் நெறிப்படுத்தியதோடு மக்களையும் ஆற்றுப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. நாயன்மார்களின் பின் சைவாதீனங்களே தமிழையும் தமிழரையும் காப்பாற்றி வந்தன.

**தமிழ் என்றால் சைவம்**

தமிழ் என்றால் சைவம், சைவம் என்றால் தமிழ் என்று கூறுமளவில் தமிழ் பொதிகையில் சிவபிரானால் தேற்றுவிக்கவும்பட்டது. ஆதலால் அன்றே சிவபிரானே அருளாளர் முன்தோன்றி அவர்கள் பாடிய பாடல்களுக்கு அடி எடுத்துக் கொடுத்தமையை அந்த அருளாளர்களைப் பாடு எனப் பணித்தமையும் அவர்கள் வரலாற்றில் காண்கின்றோம். எமது நாட்டை பொறுத்தவரையில் சங்ககாலத்தில் ஈழத்தில் பூதந்தேவனார் போன்ற புலவர்கள் இடம் பெற்றமை கவனிக்கப்பாலது. அதன்பின் அந்நியர் ஆட்சியில் அகப்பட்ட எமது நாட்டை சுவாமி ஞானப்பிரகாசர் திருநெல்வேலி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்றோர் ஆற்றிய பணிகள் அநேகம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமிழ் மக்களுக்கு சிறந்த அரசியல் தலைமைப் வேண்டும் எனும் நோக்கில் சேர்.பொன் இராமநாதனை சட்ட சபைக்கு முன்மொழிந்தமையை ஒரு கணம் சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் ஆதீனங்கள் அந்த நேரத்தில் இத்தகைய பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றியமை காணக்கூடியதாகவுள்ளது. எமது நாட்டைப் பொறுத்தவரை ஆதீனங்கள் இல்லாதிருந்தமை பலரின்

> நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாவில் 25 நாள்களும் தம்பிரான் சுவாமி களின் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழும், ஏனைய பல ஆலயங்களுக்கும் சென்று இந்தப் பணியை சிறப்புற நிகழ்த்தி வந் தார். மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் உற்சவ காலத் தில் தற்காலிக ஆச்சிரமம் ஒன்றை அமைத்து அங்கு பல் வேறு தொண்டுகளை நிறைவேற் றியமை குறிப்பிடத்தக்கது.

உள்ளங்களையும் நெருடியது. சைவத்தமிழ் அறிஞர்கள் தோன்றி தனிமனிதராக நின்ற பலர் அருள் தொண்டாற்றியுள்ள போதும் நிறுவனமாக சைவத் துறவிகள் செயற்படவில்லை என்பதை ஏற் றேயாக வேண்டும். இந்தக்குறை தொடராதிருக்க வேண்டும்



எனும் நோக்கில் மணிபாகவதராகச் சைவத் தமிழ்ப் பரப்புரைகள் செய்து வந்த பிரம்மஸ்ரீ. சிவசுப்பிரமணியசர்மா நல்லை ஆதீனத்தை நிறுவி அழியாப்புகழைப் பெற்றுவிட்டார்.

**மணிபாகவதர் யார்**

யாழ்.வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு அருகில் சொல்லையாக்குருக்கள் எனும் அந்தணர் ஒருவர் வசித்து வந்தார். அவர் மனைவி கனகாம்பிகை அம்மா. இவர்கள் வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் மீது அளவற்ற அன்பு பூண்டவர்கள். அப்பெருமான் அருளால் 1918ஆம் ஆண்டு மாசிமாதம் 17 ஆம் திகதி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். இவருக்கு சிவசுப்பிரமணியன் என்ற பெயர் சூட்டினர். இந்தக் குழந்தை கலையிலே திருவமைந்திருந்ததால் யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் யாழ்.இந்துக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்று ஆங்கில ஆசிரியராக அநேக கல்லூரியில் தொழில் பெற்று சங்கீதத்திலும், நாட்டியத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் அதீத ஈடுபாடுடையவராக இருந்தமையால் அவர் தனது ஆசிரியத் தொழிலுக்குப் புறம்பாக நாடகம், கதாப்பிரசங்கம், நாட்டியம் போன்றவற்றில் பெரும் ஈடுபாடு கொண்டவராக விளங்கி மக்கள் மத்தியில் பெருஞ் செல்வாக்குப் பெற்று மணிபாகவதர் என்னும் பெயருடன் புகழ் பெற்றுத் திகழ்ந்தார்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டு அங்குள்ள சைவத் தமிழ் அறிஞர்களுடன் இணைபிரியாத தொடர்பைப் பெற்றார். சைவாதீனங்களில் மதுரை திரு ஞானசம்பந்தர் ஆதீன பரமாசாரியாருடன் ஏற்பட்ட தொடர்பால் இவர் அங்கு பல முறை பிரசங்கம் செய்யும் வாய்ப்பைப் பெற்றதோடு, தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் தனது பிரசங்க ஆற்றலை வெளிப்படுத்தினார். திருமுருக கிருபானந்த வாரியாரே இவரைப் பலமுறை பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. இந்தச் ஆற்றலையே மதுரை ஆதீனம் மணிபாகவதரை தமது ஆதீன தம்பிரா னாக நியமித்து இலங்கையில் பணியாற்று மாறு பணித்தது. அதற்கமைய சுவாமி நாதத் தம்பிரானாக ஈழத்திற்கு வந்து சேர்ந்தார். நல்லூர் வீதியில் தனியார் காணி யொன் றில் நல்லை ஆதீனத்தை நிறுவி தமது சமயப் பணியைத் தொடங்கினார்.

**25 நாள்களும் கதாபிரசங்கம்**

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திரு விழாவில் 25 நாள்களும் தம்பிரான் சுவாமிகளின் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழும், ஏனைய பல ஆலயங்களுக்கும் சென்று இந்தப் பணியை சிறப்புற நிகழ்த்தி வந்தார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் உற்சவ காலத்தில் தற்காலிக ஆச்சிரமம் ஒன்றை அமைத்து அங்கு பல்வேறு தொண்டுகளை நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு பல அரசியல் நிர்வாக அறிஞர் தொடர்பு நிரம்பிக் கிடைக்க வாய்ப்பேற்பட்டது. சுவாமி தனிநாயகம் அடிகளார் இவருடன் மிகுந்த நட்புப் பூண்டவராகக் காணப்பட்டார். இலங்கையில் சைவத்தமிழ் விழாக்களில் எல்லாம் சுவாமிநாதத் தம்பிரானின் ஆசியுரை இடம்பெறவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில், சிவாச்சாரியார் கிரியா சிரோன்மணி, சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள் (மொடேண்), நாயன்மார்கட்டு மந்திரீக பூஷணம் சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ குருக்கள், நயினை பரமேஸ்வரக் குருக்கள், நயினை கையிலாசநாதக் குருக்கள், நீர் வேலி, சுவாமி இராஜேந்திரக் குருக்கள், போன்றோர் இவ்வாதீனத்துடன் மிகுந்த தொடர்புடையவர்களாகக் காணப்பட்டனர். மதுரை ஆதீனத்திடம், சமய, விசேட தீட்சைகளைப் பெற்றிருந்த இவருக்கு மேற்குறித்த சிவாச்சாரியார்களுடைய அனுசரணையில் நிர்வாக, ஆச்சார்ய அபிகோங்கள் இடம்பெற்று ஞானசம்பந்த தேசிக சுவாமிநாத பரமா சாரிய சுவாமிகளாகப் பீடா ரோகணித்தார். இவருக்கு அரச அமைச்சர்கள், பிரதமர்கள், ஏனைய உயர் அதிகாரிகள் அனைவரும் பெருமதிப்பு வழங்கினர். எங்கு எழுந்தருளுகின்ற போதும் கொடி, குடை, ஆலவட்ட சகிதம் ஆதீன சம்பிரதாய மரபுக்கேற்ப அவை இடம்பெற்று ஆதீனத்தில் சைவ சித்தாந்த வகுப்புகள், பண் ணிசை வகுப்புகள், சமய தீட்சை வழங் கல், மாநாடு கள் அருளமுதம், சஞ்சிகை வெளியீடு கள், இலக் கிய விழாக்கள், அரசியல் தலைவர்கள் சந்திப்புக்கள், ஜோதிட மாநாடுகள் போன்ற இன்னோ ரன்ன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்தியாவிலுள்ள ஆதீனங்களுக்கு சொத்துக்களும், வளங்களும் இருப்பதுபோல் இங்கில்லை. சுவாமிகளே தனது பிரசங்கத்தால் பணம் சேர்த்து சகல நிகழ்வை யும் நடத்த வேண்டியிருந்தது. இவரது ஆன்மார்த்த பூஜை பெரும் கும்பாபிஷேகம் போல் நிகழ்வதை இதைக் கண்டனுபவித் தோர்க்கு மட்டுமே புலனாகும். இத்தகைய சுவாமிகள் தனது பணியைத் தொடர்வதற்கு பல இளம் சைவத் துறவிகளை தன் னுடன் இணைத்துக் கொண்டார். இவர்களில் மிகுந்த பக்குவமான ஒருவராகத் தற்போதைய சன்னிதான மாகத் திகழும் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரப் பரமாசாரிய சுவாமிகளை தனது ஆதீனத் தம்பிரானாகக் ஆதீன இளவரசாக நியமித்துக் கொண்டார். இதன் பின்னர் 1981ஆம் ஆண்டு சித்திரை மாதம் 9 ஆம் நாள் முதலாவது சன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் சமாதியடைந்தார் .

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப்பருவம் பயன்மிக்கது

பளையூர் பா.பாலாஜினி,

குடும்பத்தினரின் அரவணைப்பில் செல்லமாய் வளர்ந்த பிள்ளை அடுத்தபடியாக பாடசாலை எனும் கட்டமைப்புக்குள் காலடி எடுத்து வைக்கின்றான். சதா நேரமும் குடும்பத்தின் கவனிப்பிலேயே வாழ்ந்து வந்தவனுடைய வாழ்க்கைமுறை இங்கு சற்று மாறுபடுகின்றது. அதிபர், ஆசிரியர், சக மாணவர்கள் என பல புதிய முகங்கள் அவனுக்கு அறிமுகமாகின்றன. தனக்கென ஒரு நண்பன் அல்லது நண்பியையோ அல்லது நண்பர் கூட்டங்களையோ தெரிவு செய்து கொள்கின்ற உரிமை அவனுக்கு வழங்கப்படுகின்றது.

குறிப்பாக பதின்மூன்று வருடங்கள் பள்ளிப்படிப்பை அவன் தொடர வேண்டியுள்ளது. இக்காலத்திலே எதிர்கால உலகில் அவன் வெற்றிகரமாக வாழ்வதற்குரிய வழிவகைகளைப் பள்ளிப்பருவம் அவனுக்கு வழங்கிவிடுகின்றது. பாடசாலையிலேயே அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் உடன் சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக எதிர்கால உலகில் வாழ்வதற்கான சிறந்த தொடர்பாடல் திறனை விருத்தி செய்து கொள்கின்றான்.



பல சந்தர்ப்பங்களில் சக மாணவர்களுடன் சண்டையிட்டு அதன் காரணமாக பாடசாலை சமூகத்தினரின் தண்டனைக்கும் வெறுப்புக்கும் ஆளாகின்றான். ஆனாலும், அவற்றிலிருந்து மீண்டு வழமைபோல தன் செயற்பாடுகளைச் செய்வதற்கான மனோபலத்தை ஆசிரியர்களும், ஏனையவர்களும் அவனுக்கு அளிக்கின்றனர். இது அவன் எதிர்கால உலகின் சவால்களை எதிர்த்து வாழ்வதற்கான மனஉறுதியையும் சீரிய புத்தியையும் அவனுக்கு வழங்கி விடுகின்றன.

அத்தோடு பள்ளிநாள்களில் பல்வேறு போட்டிகளிலும் விவாதங்களிலும் பங்குபற்றுவதற்கு பாடசாலை அவனுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதனால் அதில் வெற்றி ஏற்பட்டாலும், தோல்வி ஏற்பட்டாலும் வெற்றி தோல்விகளை சமமாக நோக்குகின்ற சந்தர்ப்பத்தை பள்ளிப்பருவம் அவனுக்கு வழங்குகின்றது. இது எதிர்கால உலகின் ஏற்ற, இறக்கங்களைக் கண்டு துவண்டு போய்விடாது நம்பிக்கையுடன் மீண்டும், மீண்டும் போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது.

மேலும் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தல், தன் உரிமையை பெற்றுக் கொள்ளல் விட்டுக் கொடுத்தல், முதலிய மனப்பாங்குகள் பள்ளிப்பருவத்திலேயே அவனுக்கு கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஆனாலும், ஒரு சில மாணவர்களது கல்வி வாழ்க்கை பல கவனயீனங்களினால் சீரழிந்து போவதுமுண்டு. அதற்காக எல்லா மாணவர்களது வாழ்கையும் அபாயத்தினுள் தள்ளப் படுகின்றன என நாம் எண்ணுவது தவறு.

> **மரம் செடிகளிலே பூக்கள் எல்லாம் பூத்துக் குலுங்குகின்ற வசந்த காலத்துக்கு ஒப்பானதே பள்ளிப்பருவம். கவலைகள் எதுவுமே அற்று பறந்து திரிகின்ற பொற்காலம். ஆனால், இன்று பள்ளிப்பருவமோ கேள்விக்குறியாகி நிற்கின்றது பாடசாலை சமூகத்திலே ஆசிரி யத்தோல் போர்த்தபடி அலைகின்ற கொடிய மிருகங்களால் மாணவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றார்கள்.**

சிறந்த ஒரு ஆசிரியரின் வழிகாட்ட லின் கீழ் செயற்படுகின்ற மாணவன் ஒருபோதும் தவறான வழியில் செல்லத் துணியமாட்டான். ஆனால், ஒருசிறந்த மனிதனை உருவாக்குவதில் பாடசாலை மட்டுமல்ல அவனது குடும்பச் சூழலும் பங்களிப்புச் செய்கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது . இப்படியாக என்ன தான் கூறினாலும் பள்ளிப்பருவம் என்பது பயன் தரக் கூடியதேயாகும். பள்ளிப் பருவத்து நினைவுகளையும், அனுபவங்களையும் எவராலும் தட்டிக்கழித்து விட முடியாது.

மாணவன் ஒருவனை மனிதனாக்கி சமூகத்துக்கு ஒப்படைப்பதே பாடசாலை தான். சமூகத்தின் இன்றைய பெரிய மனிதர்கள் யாவரும் பாடசாலை உருவாக்கி விட்டவர்கள்தான். எந்த ஒரு மாணவன் பாடசாலைக்காலத்தைத் தவிர்க்கின்றானோ அல்லது தவிர்க்க நினைக்கின்றானோ அவனது எதிர்காலம் நிச்சயம் இருள்படிந்ததாகவே இருக்கும் என்பதில் எவ்வித ஐயத்துக்கும் இடமில்லை.

இதனால் தானோ என்னவோ இன்றைய எம்நாட்டு அரசு பாடசாலை செல்லாது வீதி வழி நிற்கும் சிறுவர்களுக்கு தண்டனை அளித்து வருகின்றது.

மாணவர்களே! பள்ளிப் பருவம் என்பது ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் அனுபவிக்க வேண்டிய முக்கிய பருவமாகும். அதைத் தவற விட்டால்மீண்டும்ஒருபோதும் அதனை அனுபவிக்கவே முடியாது. வயது முதிர்ந்த காலத்தில் கூட நினைத்து நினைத்து இன்பம் அடையக் கூடியது பள்ளிக்காலம் மட்டுமேயாகும்.

மரம் செடிகளிலே பூக்கள் எல்லாம் பூத்துக் குலுங்குகின்ற வசந்த காலத்துக்கு ஒப்பானதே பள்ளிப் பருவம். கவலைகள் எதுவுமே அற்று, பறந்து திரிகின்ற பொற்காலம். ஆனால், இன்று பள்ளிப்பருவமோ கேள்விக்குறியாகி நிற்கின்றது. பாடசாலை சமூகத்திலே ஆசிரியத்தோல் போர்த்தபடி அலைகின்ற கொடிய மிருகங்களால் மாணவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். அவர்களை இனம் கண்டு விலகிச் செல்வதால் மட்டுமே மாணவர்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். எனவே ஒவ்வொரு மாணவனும் அல்லது மாணவியும் தன்னுடைய சுயபாதுகாப்பு தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். தம்மைப்பாதுகாத்து கொள்வது தொடர்பான உத்தி முறைகளை பெற்றோர்களும், பாதுகாவலர்களும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

கொடியவர்களுக்கு அஞ்சி மாணவர்கள் ஒருபோதும் தமது பள்ளிப்படிப்பை இடையிலேயே முடித்து விடக் கூடாது. எனவே பெற்றோர்களே! உங்கள் பிள்ளையின் பாடசாலைக்காலத்தைத் தவறவிட்டுவிடாது அவர்களைத் தினமும் பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள்.

---

# தமிழ்த் தலைவர்களை இணைப்பதே ...

(20 பக்கத் தொடர்ச்சி)

**2ஆவது சந்நிதானம்**

சுவாமிகள் பரிபூரணமடைந்தபின் ஆதீன இளவரசாக வீற்றிருந்த தற்போதைய ஆதீன மகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பராமாச்சாரிய சுவாமிகள் ஆன்மிகப் பொறுப்பை பல பிரமுகர்கள் முன் னிலையிலும் ஆதீன சம்பிரதாய மரபுகளுக்கேற்பவும் பெற்றுக் கொண்டார். முன்னைய சுவாமிகளின் பணிகளை மிகத்துல்லியமாக நிறைவேற்றி வரும் தற்போதைய சுவாமிகள், ஆதீனத்தை புதுப்பொலிவுடன் மிளிரச் செய்வதற்கு ஏற்ற பொருத்தமான செயற்பாடுகளை மேற் கொண்ட போதும் ஆதீனத்தின் தனித்துவத்தைத் தொடர்ந்து பேணிவருவது பாராட்டுக்குரியது.

தற்போதைய சுவாமிகள் போர்க் காலத்தையே தனது வாழ்நாளில் பெரும்பகுதியாகச் சந்தித்ததால் பெருஞ் சோதனையுடன், சாதனைகளையும் சந்தித்து முன்னைய சுவாமிகளைக்காட்டிலும் பல பெரும்பணிகளை நிறைவேற்றியுள்ளார் என்றால் மிகையில்லை.

போர்ச் சூழ்நிலையில் இந்துக்களின் நலனைப் பேண இந்துசமயப் பேரவையை நிறுவ முன்னின்று உழைத்த பெருமை தற்போதைய சுவாமிகளையே சாரும்.

இன்று சுவாமிகளின் பிரசன்னம் உலக அரங்கில் தமிழ்நாட்டிலுள்ள ஆதீனங்களை விட மிக முக்கியத்துவமுடையதென்று கூறும் அளவுக்கு வலுப் பெற்று வந்துள்ளது.

இன்று சுவாமிகள் முன்னுள்ள பொறுப்புக்களில் தமிழ்த் தலைவர்களை ஓர் அணியில் திரளவைக்கும் பொறுப்பே மிக முக்கியமானதாயிற்று.

எத்தனையோ அழிவுகளையும் சோதனைகளையும் கண்டு ஆழ்ந்திடாது துன்பக்கடலில் இன்றும் மிதந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழ்மக்களின் நலனுக்காக நல்லை ஆதீனசுவாமிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டளை.

தமிழரசியல் தலைவர்கள் தம்மிடையே உள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக சிறிது குழப்பநிலையில் இருப்பது போன்ற சூழ்நிலை ஒன்றைச் சந்திக்க வேண்டியுள்ளது.

சிங்கள அரசியல்தலைவர்கள் இடையே எவ்விதம் அஸ்கிரிய மல்வத்தை மாநாயக்க தேரர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியல் ஸ்திரத்தைப் பேண முற்படுகின்றார்களோ, அதே போன்ற தனித்துவத்தை நல்லை ஆதீனசுவாமிகள் பெறவேண்டும் என்பதே பலரின் பெருவிருப்பமாகும். நல்லை ஆதீன சுவாமிகள் நடு நிலையான மனப்பாங்குடன் செயற்படுவார் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இருக்கின்ற போதும் காலத்தின் கட்டாயத்தை ஏற்று தமிழ்த் தலைவர்களைப் பிரிய விடாது இணைத்து தமிழ் மக்கள் பெறவேண்டிய நலனைப் பெற ஆவன செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற முத்தமிழ்ச் சங்கமம்

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் முத்தமிழ் சங்கமம் நிகழ்வு வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத் திருமண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பிரித்தானியாவின் லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச இந்து இளைஞர் பேரவை பல நாடுகளில் தனது கிளைகளை நிறுவிச் சமய, கலை, கலசார தமிழர் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதுடன், தாயகத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் கட்டியெழுப்பும் வகையிலான பொருளாதார உதவிகளையும் செய்து வருகின்றது.

இந்த நிலையில் இந்த அமைப்பின் இலங்கைக் கிளையின் மூன்றாவது முத்தமிழ் சங்கமம் நிகழ்வு தமிழர் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் பல கலைநிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு கூனம்பட்டி ஆதீன 57 வது குருபீடம் ராஜ சரவண சுவாமிகள் பேரவையினரால் சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகள் இடம் பெற்ற பின்னர் சிறப்பான உபசாரங்களுடன் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. நந்திக் கொடியினை யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பேரவையின் தலைவர் சிவ .கஜேந்திரகுமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. மங்கல விளக்கேற்றல், பஞ்சபுராண பாராயணம், தமிழ் மொழி வாழ்த்து, என்பவற்றை தொடர்ந்து ஆதிவிநாயகர் நடனப் பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. வரவேற்புரையைப் பேரவையின் உப செயலாளர் கி.வசந்தரூபன் வழங்க, ஆசியுரையை ரவீந்திர. உமாசுதக் குருக்கள், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியச் செயலாளர் பிரபாகரக் குருக்கள் ஆகியோர் வழங்கி யிருந்தனர், அதனைத் தொடர்ந்து தொடக்கவுரையினை சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் உப தலைவர் வீ.பிரதீபனும், வாழ்த்துரையினை தமிழ்மணி மேழிக் குமரனும் வழங்கினர்.

நாம் தொலைத்து விட்ட பண்பாட்டு விழுமியங்கள் எனும் தலைப்பில் மருத்துவர் செ.மதுரகனின் சிறப்புரையும், வாத்திய கலாலய மாணவர்களின் வாத்திய கானாமிருதம் நிகழ்வும், கீர்த்தனாலயா இசைக் கூட மாணவர்களின் தமிழிசை நிகழ்வும் இடம்பெற்றன. நுண்கலைமாணி திருமதி. புவனரூபி குகதீசனின் மாணவிகளின் கலச நடனம் மற்றும் அவரது மாணவியான பைரவி இராஜேந்திரம் அவர்களின் ருத்ரதாண்டவம் நடன நிகழ்வும், ஆய்வாளர் அருணா செல்லத்துரையின் வன்னியின் சிவலிங்க வழிபாடு பற்றிய ஆய்வுப் பார்வை, தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் காலவோட்டத்தில் இன்று தமிழர் பண்பாடு தளர்ந்து விட்டதா? வளர்ந்து நிற்கிறதா? எனும் தலைப்பில் சிறப்புப்பட்டி மன்றம் நடைபெற்றது. தளர்ந்து விட்டது எனும் தலைப்பில் ஜெ. மயூர சர்மா; ஜெ.கோபிநாத், ஆ.ஜெசிதா ஆகியோரும் வளர்ந்து நிற்கிறது எனும் தலைப்பில் எஸ்.எஸ்.வாசன், ஜெ. திருவரங்கன், ந. ஜெனன் ஆகியோரும் வாதிட்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீ.யோகேஸ்வரன், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத் தலைவர் தி. இராசநாயகம், தொல்லியல்துறை ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான அருணா.செல்லத்துரை, யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ந.பரந்தாமன் ஆகியோர் சிறப்பு விருது வழங்கி சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தமிழ் நாடு கூனம்பட்டி ஆதின 57 ஆவது குருபீடம் ராஜ சரவண சுவாமிகள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, வவுனியா மாவட்ட போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், பேரவையின் அமைப்பாளர் சி.கணேஸ்குமார் உட்படப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









# பரத நாட்டிய அரங்கேற்றம்



வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் நடன ஆசிரியர் நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கத்தின் மாணவியும் திருமதி பாஸ்கரன் அருள்மொழி தம்பதியினரின் புதல்வியுமான திருமகள் பாஸ்கரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அளங் கன் தலைமையில் வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் சிவஸ்ரீ நா.பிரபாகரக்குருக்களின் பூசையுடனும், ஆசியுடனும் ஆரம்பிக்கபட்டு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், நுவரெலியா கல்வி வலயத்தின் முன்னாள் ஆசிரியர் ஆலோசகர் குகாநந்தினி இராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். விசேட விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அ.ந.சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டார். அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் உடுவை சி. தில்லை நடராஜா உட்பட கௌரவ விருந்தினர்களும், சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் அமைச்சரினால் புத்தக வெளியீடும் மாணவி திருமகள் பாஸ்கரன், நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் நடன ஆசிரியர் நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் ஆகியோருக்கான கௌரவிப்பும், நினைவுச் சின்னம் வழங்கலும் இடம்பெற்றன. தொடர்ந்து அதிதிகள் கௌரவிப்பும், நினைவுச் சின்னம் வழங்கலும் இடம்பெற்றன.













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







## வவுனியாவில் மு.திருநாவுக்கரசுவின் நூல் வெளியீடு

மு.திருநாவுக்கரசுவின் 'இலங்கை அரசியல் யாப்பு' எனும் நூல் வெளியீடு வவுனியா தமிழ்ச்சங்கத்தினால், அதன் ஸ்தாபகர் தமிழருவி சிவகுமாரன் தலைமையில் வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. சங்கத்தின் முக்கிய உறுப்பினரும் எழுத்தாளருமாகிய மேழிக்குமரன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், அரசியல் ஆய்வாளர்களாகிய நிலாந்தன். ஜோதிலிங்கம் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், மாகாணசபை உறுப்பினர்களாகிய தியாகராஜா, இந்திரராஜா, ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் எஸ்.கஜேந்திரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




## கவிதை நூல் வெளியீடு

கம்பிகளின் மொழி பிறேமின் 'மறந்திடுமோ மனதைவிட்டு' என்ற கவிதை நூல் அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. வல்வெட்டித்துறை மானாங்கனை ஒன்றியத்தின் அனுசரணையுடன் முத்தையன்கட்டு வலது கரை மகா வித்தியாலய அதிபர் தலைமையில் வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை திருமதி சிறிதரன் ஜெமாலா பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை சமரபாகு சீனா உதயகுமாரும் நூலின் அறிமுகவுரையை செல்லமுத்துவெளியீட்டகத்தின் உரிமையாளர் யோ.புரட்சியும் மதிப்பீட்டுரையை பொலிகை சிந்துதாஸனும், வாழ்த்துரையை வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனும், ஏற்புரையை நூலாசிரியர் கம்பிகள் மொழி பிறேமும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் சு.சுகிர்தன், க.தர்மலிங்கம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.(108)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஆண்களுக்கான வேட்டி ஷேட்கள் அறிமுகமாகியுள்ளன. பட்டுத் துணியில் பிரத்தியேகமாக வேட்டிகளுக்காகவே இவை உருவாக்கப்பட்டுள்ளன. பல வர்ண நிறங்களில், பல வித தரங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இவை, 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# தேங்காய்ப்பால் முறுக்கு

### தேவையான பொருள்கள்

அரிசி மா – 4 கப்
வறுத்து அரைத்த உளுத்தம் பருப்பு மா – 1கப்
வெண்ணெய் – 1 மேசைக்கரண்டி
தேங்காய் – 1
சீரகம் – சிறிதளவு
மிளகு – சிறிதளவு
உப்பு – தேவையான அளவு



### செய்முறை


தேங்காயைத் துருவி சிறிது தண்ணீர் சேர்த்து அரைத்து வடிகட்டி கெட்டியான தேங்காய்பால் எடுக்கவும். மிளகு, சீரகம் ஆகியவற்றை கரகரப்பாக பொடித்துக் கொள்ளவும். இதனுடன் அரிசி மா, வறுத்து அரைத்த உளுத்தம் பருப்பு மா, உப்பு ஆகியவை சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.பின்னர் வெண்ணெயைச் சேர்த்து மாவை நன்கு பிசையவும். மாவுடன் தேங்காய்ப் பால் சேர்த்து பதமாகப் பிசைந்து கொள்ளவும்.

பொலித்தீன் உறை அல்லது ஈரமான துணியின் மேல் சிறிய முறுக்காக பிழிந்து அதை எண்ணெயில் எடுத்து போடவும். அல்லது வடிகட்டி கரண்டியை திருப்பி அதன்மீது சின்ன வட்டமாக பிழிந்து, பின்னர் அதை அப்படியே திருப்பி எண்ணெயில் விழுமாறும் செய்யலாம். இரண்டு பக்கமும் திருப்பி விட்டு முறுக்கை பொன் நிறமாகப் பொரிக்கவும். தேங்காய்ப்பால் முறுக்குத் தயார்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | – | 600 |
| நண்டு | 250 | 400 | -200 | 400 | 300 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 600 | 600 | – |
| சுறா | 500 | 700 | 500 | 800 | 1000 | – | – |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 500 | 450 |
| விளை | 650 | 600 | 500 | 600 | 500 | – | 450 |
| முரல் | 300 | 450 | 300 | 500 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 450 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 200 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 500 | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 400 | – | 300 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 200 | 300 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 250 | 300 | 400 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 200 | 200 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 100 | 400 | 400 | 200 | – |



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 60 | 80 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 50 | 60 | 80 | 40–50 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 140 | 120 | 120 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 70 | 20 | 80 | 80 | 60 | 40 | 100 | 60 |
| பாகல் | 140 | 100 | 120 | 120 | 100 | 80 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 160 | 120 | 140 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 80 | 100 | 90 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 80 | 90 | 80 | 80 | 90 | 60 |
| பூசணி | 80 | 50 | 50 | 80 | 40 | 80 | 70 | 40 |
| தக்காளி | 50 | 60 | 60 | 50 | 40–50 | 60 | 120 | 40 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 80–100 | 40 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 120 | 120 | 120 | 80–90 | 200 | 200 | 140 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 40–60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 | 100–120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 60 | 60 | 60–80 | 80 | 70 | 20 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 180 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 120–160 | 120 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 25–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 350 | 240 | 300 | 140 | 120 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 120 | 160 | 160 | 140 | 240 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 70 | 100 | 60 | 50–60 | 80 | 120 | 120 | 50 |

# தொலைக்காட்சியை பராமரிக்கும் முறைகள்



தொலைக்காட்சியை நிறுத்தும்போது முதலில் தொலைக்காட்சியில்உள்ள சுவிட்சை அணைத்து விட்டுப் பிறகு மின் இணைப்பைத் துண்டிக்கும் சுவிட்சை அணைக்க வேண்டும். தொலைக்காட்சியை இயக்க விரும்பும்போது முதலில் மின் சப்ளை சுவிட்சைப் போட்டு விட்டுப் பிறகு தொலைக்காட்சி சுவிட்சைப் போட வேண்டும்.

அதிக வெளிச்சம் உள்ள இடத்திலும், வெளிச்சம் மிகவும் குறைவாக உள்ள இடத்திலும் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது. அறையிலுள்ள விளக்கு 40 முதல் 60 வாட் மின்குமிழுக்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது.

சுவற்றை ஒட்டினாற் போல் தொலைக்காட்சியை வைக்கக் கூடாது. அரை அடி இடைவெளியாவது அவசியம். அப்போதுதான்செட்டுக்குள்காற்றோட்டம் இருக்கும். அழகான காபினட்களில் சிலர் தொலைக்காட்சியை வைத்திருப்பார்கள். அதன் பின்புறம் திறந்தபடி இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும்.

தண்ணீர் டம்ளர் போன்றவற்றை தொலைக்காட்சி மேல் வைக்கக் கூடாது.

ரேடியோவை கலர் ரீ,வி மீது வைக்கக் கூடாது. ஸ்பீக்கரின் காந்தம் தொலைக்காட்சியில் கலர்ப் புள்ளிகள் தோன்றச் செய்யும்.

இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தொலைக்காட்சியை நகர்த்தக்கூடாது.

## நாளை

ஆவணி-09
வியாழக்கிழமை
-25.08.2016
திதி: அட்டமி மு.இ.11.13
நட்சத்திரம்: கார்த்திகை
பி.ப. 3.45
ராகுகாலம்:
01.35-03.05 வரை
...நேரம்:
07.35-09.05 வரை
ஸ்ரீகிருஸ்ணஜெயந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கமலுக்கு


## உயரிய கௌரவம் வழங்கிய பிரான்ஸ்

தென்னிந்திய நடிகர் கமல்ஹாசனுக்கு உயரிய விருதான செவாலியே விருது வழங்கப்படுவதாக பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 1960ஆம் ஆண்டு வெளிவந்த 'களத்தூர் கண்ணம்மா' திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் கமல்ஹாசன். முதல் படத்திலேயே சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதை அவர் பெற்றார். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, மலையாளம் எனப் பல மொழிகளில் நடிப்பு ஆற்றலை வெளிப்படுத்தி வரும் கமல்ஹாசன், இதுவரை 200க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

1975ஆம் ஆண்டு வெளியான 'அபூர்வ ராகங்கள்' திரைப் படத்தில் கதாநாயகனாக அறிமுகமான அவரது திரை வாழ்க்கையில், '16 வயதினிலே', 'சிகப்பு ரோஜாக்கள்', 'நீயா?', 'வறுமையின் நிறம் சிகப்பு', 'வாழ்வே மாயம்', 'மூன்றாம் பிறை', 'நாயகன்', 'தேவர் மகன்', 'அவ்வை சண்முகி', 'இந்தியன்', 'தசாவதாரம்', 'பாபநாசம்' உள்ளிட்ட படங்கள் முக்கிய மைல் கல்லாக அமைந்தன.

ஒரு நடிகராக மட்டுமல்லாமல் இயக்குநர், திரைக்கதை ஆசிரியர், தயாரிப்பாளர், பின்னணி பாடகர், பாடலாசிரியர் எனப் பன்முக திறமைகளைக் கமல்ஹாசன் வெளிப்படுத்தி இருக்கிறார்.

50 ஆண்டுகளாக திரைத்துறையில் காலடி பதித்துள்ள அவருக்கு, சிறந்த நடிப்புக்காக இந்திய மத்திய அரசின் பத்மஸ்ரீ, பத்மபூஷண், மாநில அரசின் கலைமாமணி போன்ற பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன. இதுதவிர, தேசிய விருதை 4 முறையும், 19 முறை பிலிம்பேர் விருது களையும் அவர் பெற்றுள்ளார். தற்போது இவருக்கு பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான செவாலியே விருது வழங்கப்படுவதாக அந்த நாட்டின் கலாசாரத் துறை அறிவித்துள்ளது. சிறந்த நடிப்பு ஆற்றலுக்காக அவ ருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனம், செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** மனதில் தெய்வீக சிந்தனை நிறைந்திருக்கும். நற்செயல்களில் ஈடுபட்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமான உயர்வால் வாழ்க்கைத் தரம் உயரும்.

**மிதுனம்:** மனதில் இரக்க குணம் மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். சராசரி அளவை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**கடகம்:** செயல்களில் அக்கறை நிறைந்திருக்கும். நண்பரிடம் பெற்ற உதவிக்கு நன்றி சொல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உண்டாகும். கூடுதல் சொத்துச் சேர்க்கை கிடைக்கும்.

**சிங்கம்:** முக்கியமான விடயம் மறந்து போகலாம். தொழில், வியாபாரத்தில் நிதானம் பின்பற்றுவது நல்லது. இலாபம் சுமார். பெண்களுக்கு வீட்டுச்செலவு அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கன்னி:** எதிலும் விழிப்புடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். குடும்பத்தில் பணத் தேவை அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் சோம்பல் குணம் நிறைந்திருக்கும். முக்கிய பணியை தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். வெளியூர்ப் பயணத்தில் மாறுதல் உண்டாகும்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் வசீகரம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை வந்து சேரும்.

**தனுசு:** திட்டமிட்ட செயல் இலகுவாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியைக் கண்டு மற்றவர் வியப்படைவர். ஆதாயம் பன்மடங்கு உயரும். அரசியல்வாதிகளுக்கு விவகாரத்தில் அனுகூலத் தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** பயன் தராத விடயுங்களைப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**கும்பம்:** எதிரியால் இருந்த தொல்லை மறையும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். வாகனப் பாதுகாப்பில் கவனம் தேவை.




அவன்: ராத்திரி என் மனைவியை கைநீட்டி அடிச்சுட்டேன்
இவன் : ஐயோ அப்புறம்



அவன்: அதுக்குள்ள எட்டி உதைச்சு வேலைக்குப் போக நேரமாச்சு எழுந்திருங்க எண்டு கனவைக் கலைச்சுட்டா...!

முதல் வாங்கில உட்காந்தவன் வேலைக்குப் போய் குடும்பத்தை முன்னேத்திட்டான்.



கடைசி வாங்குக்காரன் சமூக வலைத்தளத்தில உட்காந்து நாட்டையே முன்னேத்துறான்...




## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | 9 | | 4 | | |
| 9 | 7 | | | | | | | |
| | | 2 | | | 8 | 1 | | |
| | 1 | | | 7 | 4 | 2 | | |
| | 6 | | | | | | 4 | |
| | | 5 | 6 | 3 | | | 9 | |
| | | 1 | 5 | | | 3 | | 4 |
| | | | | | | | 2 | 8 |
| | | 4 | | 6 | 3 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 3 | 9 | 1 | 7 | 6 | 8 | 4 |
| 4 | 1 | 6 | 3 | 8 | 5 | 7 | 9 | 2 |
| 9 | 8 | 7 | 6 | 2 | 4 | 1 | 3 | 5 |
| 1 | 2 | 5 | 7 | 9 | 6 | 3 | 4 | 8 |
| 6 | 3 | 9 | 1 | 4 | 8 | 5 | 2 | 7 |
| 8 | 7 | 4 | 2 | 5 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 6 | 2 | 4 | 7 | 1 | 8 | 5 | 9 |
| 5 | 4 | 1 | 8 | 6 | 9 | 2 | 7 | 3 |
| 7 | 9 | 8 | 5 | 3 | 2 | 4 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானிய சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



ஒருவன் அறியாமல் தவறிழைக்கும்போது, அவனுக்கு வழிகாட்டாமல் அவனைப் பார்த்து சிரிப்பார்களாயின் உங்களுக்கும் அவனுக்கும் பெரிதாக வித்தியாசம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலை...

மாணவர்கள் சிலர் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்வம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்த தாவது: கடந்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் சிங்கள மாணவர்களிடையே சிறு கைகலப்பு ஏற்பட்டது. இந்தச் சமபவம் இலங்கை முழுவதும் மீண்டுமோர் இன மோதலுக்கான அச்சத்தைத் தோற்றுவித்தது. இதனை இனவாதத்துடன் கையாள்வதற்கும் சிலர் முற்பட்டனர்.

ஆனால் அரசு, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை மோசமான விளைவுகளுக்கு செல்லாத வகையில் திறம்படக் கையாளப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உட்பட இந்த விடயத்தில் அதீத கரிசனை வெளிப்படுத்தப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் கொழும்பிலிருந்து சென்று விசாரணைகள் கூட நடத்தினர். அதே நேரத்தில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகமும் சுயாதீன விசாரணைக்குழுவை இது தொடர்பில் நியமித்தது.

பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் அதேபோன்று சம்பவம் இடம்பெற்றுள்ளது. தமிழ் –முஸ்லிம் மாணவர்கள் சிலர். சிங்கள மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்ட போது, இது போன்ற கரிசனைகளைக் காணமுடியாதது கவலையளிக்கிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னணி எதுவாக இருந்தபோதும், யாழ். பல்கலைக்கழகச் சம்பவம் மீது வெளிக்காட்டப்பட்ட கரிசனை இங்கும் வெளிப் படுத்தப்படவேண்டும். இது ஒரு சிறு சம்பவம் என்பதாக புறம் ஒதுக்கி விடமாமல் அரசு, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதுவே இலங்கையில் மீண்டும் இனப் பூசலுக்கான வாய்ப்புக்களை உருவாக்கும் அச்சத்தை நீக்கும். பேராதனைச் சம்பவம் புறக்கணிக்கப்படுமாக இருந்தால், அது மீண்டும் சிறுபான்மை இனங்கள் மாற்றாந்தாய் மனப்பாங்கில் கையாளப்படுவதான எண்ணத்தை ஏற்படுத்தும்.

எனவே, யாழ். பல்கலைக்கழகச் சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் பேராதனைப் பல்கலைக்கழக சம்பவத்துக்கும் எடுக்கப்படவேண்டியது அவசியம். அதுவே இலங்கையின் எதிர்கால நலன்களுக்கு முக்கியமானது - என்று அவர் தெரிவித்தார். (உ)

## ரணில்...

நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தச் சந்திப்பு இறுதியில் ஒத்திவைக்கப்பட்டதாக வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். இராணுவத்தினரால் புனர்வாழ்வு முகாம்களில் வைத்து ஊசி ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் முன்னாள் போராளிகளின் நிலமைகள் தொடர்பில் பிரதமருடன் வடக்கு மாகாண முதலமைச்சர் அலரிமாளிகையில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடவிருந்தார். (வ-4)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கிருஷ்ணபவான்

துன்னாலை வடக்கு, சோழியவத்தையைப் பிறப்பிடமாகவும் துன்னாலை கிழக்கு, கலிகைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கிருஷ்ணபவான் 22.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற வன்னியசிங்கம் சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும் நவநீதன் (பிரபு UK), சூரியா (ஆயுள்வேத வைத்தியர் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், வனிதாவின் (பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.08.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலிகைச்சந்தி, துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.


தகவல்:
குடும்பத்தினர்.

077 491 1795

(C/25023)
(11,17)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சந்திரசேகரம்



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் 22.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நல்லரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலானந்தன் - இரங்கநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், பரமசாமி - புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, சதாசிவம் மற்றும் பரமேஸ்வரி - ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தாதேவி - காலஞ்சென்ற ஜெகதாஸ் மற்றும் சிவானந்தன் - ரதிதேவி, சச்சிதானந்தன், காலஞ்சென்ற பரமானந்தன் மற்றும் ரஞ்சிதமலர், சதானந்தன் - சிவமணி, சகுந்தலாதேவி - சிவஞானம், நித்தியானந்தன் - சாந்தினி தேவி, லலிதாதேவி - ரவீந்திரன், சசிகலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சிவறூபன் - ஜெகதர்சினி, சோபனா - பிரபாகரன், சதீஸ், யாழினி, ரஞ்சித், டனீஷா, பிரணவி ஆகியோரின் மாமனாரும், தர்சனின் பெரியப்பாவும், சிவதாஸ் - மரியா, பானுமதி - தெய்வேந்திரராஜா, ராம்தாஸ் - துசி, வளர்மதி - மொரிஸ், மேருபரன், தேனுஜா, பிரதீபன் - வாசுகி, பிரதீபா - அசோக்குமார் ஆகியோரின் சித்தப்பாவும், சிந்தியா - சஜீவ், வனுசியா, சில்வியா, சோன், றயன், மொறின், மொறிசன், அஸ்வின், அர்ஜீன், துஜீவ், அட்சிதா, கவிநயா, டிவேதிகா, விதுஷ், அனிக்கா, அபிராம், அபிசேக், அபிராமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் தெற்கில் உள்ள வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.ரி.எஸ்.லேன் ( V.T.S Lane)
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 618 4693

(J/4012)
(11,17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் கந்தையா

பிறப்பு
06 . 04 . 1940



இறப்பு
20 . 08 . 2016

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கந்தையா 20.08.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகர் - சிவப்பாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் யோகேஸ்வரி, இராசேந்திரம் (கனடா), காந்தம், பெறாமகன்- சாமி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசமணி காலஞ்சென்றவர்களான முருகேசு, சின்னம்மா, செல்லையா, அரியகுட்டி, கந்தையா, இரத்தினம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலா, கணேஸ், கனி ஆகியோரின் மாமியாரும் பவானி, பிரபா, தயா, பாமினி, தாரணி, நிறோசன், தனுசன், ஐஸ்வரி, ஜெனித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (24.08.2016) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யுவ சக்தி லேன்,
சுதுமலை தெற்கு.

தகவல்
குடும்பத்தினர்.

### திருமதி சின்னப்பிள்ளை கந்தர்



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை கந்தர் 22.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பொடிச்சி தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னர் - பாறிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னர் கந்தரின் அன்பு மனைவியும், கமலாதேவி, பத்மநாதன் (சுவீடன்), கருணகலா (ஜேர்மனி), மனோரஞ்சன் (லண்டன்), பாஸ்கரன் (ஸ்பெயின்), கலாரஞ்சினி (சுவீடன்), ஜெயந்தா, தம்சா ஆகியோரின் அன்புத் தாயாரும், கோவிந்தபிள்ளை மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னர், சிதம்பரம்பிள்ளை, வேலுப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும், கந்தசாமி, யோகராணி, ஜெயறதன், கோமதி, தனுசியா, தீபதாசன், மதனகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபேசன், சிந்துஷா, தினோஷா, நிவேதிகன், மாதங்கன், மஞ்சரி, யவிந்தன், தூயவன், துகிலன், பைங்கவி, நிதுர்ஷன், சனுஷ்ஹா, லவிஷா, திருஷன், சஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2016) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி, இயற்றாலை,
வரணி.

(N/120)
(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- மதன் (மருமகன்) - 077 328 4415

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

### மனிதாபிமான புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தில் (NAHRO) உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. செயற்திட்ட மேலாளர் (Programme Manager)**

**தேவையான தகுதிகள்**

- இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துல், மேற்பார்வை செய்தல், அவற்றின் வளர்ச்சியைக் கண்காணித்தல், ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கையாளுதல், பிரச்சினைகள் தோன்றாதவாறு மாற்றங்களை ஏற்படுத்தல், வரவு, செலவுத் திட்டப்பட்டியல் உருவாக்குதல் (பட்ஜெட்டிங்) ஆகியவற்றுக்குப் பொறுப்பானவராக இருத்தல். அத்துடன் இத்திட்டங்களில் பங்குபெறும் மற்றைய சமூக அமைப்புக்களுடனும் தனியாருடனும் இணைந்து செயலாற்றும் திறமை.
- சமூக முன்னேற்றச் செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்வதுடன், குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழுகின்ற இடர்களை எதிர்நோக்கும் மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களின் நலன்களுக்காகச் செயற்படக் கூடிய அறிவும் ஆற்றலும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- தலைமை தாங்கும் ஆற்றல், மக்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகள் ஏற்படாதவாறு செயற்படல் அல்லது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஆற்றல்.
- இப்பதவி முதலில் 6 மாத கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். அதன் முடிவில் நிரந்தர பதவி நீடிப்பு பற்றித் தீர்மானிக்கப்படும்.

**ஊதியம் மாதம் ரூபா 30,000/=**

**02) செயற்திட்ட இணைப்பாளர் - NAHRO உடல் இயக்கமற்றோருக்கான செயற்றிட்டம் (Project Co-ordinator - NAHRO Paralysis Project)**

NAHRO வினுடைய உடல் இயக்கமற்றோர்களுக்கான திட்டத்தின் நடத்துநர் குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏற்ற ஒருவரைத் தேடுகின்றனர். இது ஒரு வெளிக்களப் பணியாகும். அத்துடன் இப்பணி மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அனுபவம் உள்ள ஒருவருக்கு ஏற்றதொன்றாகும்.

**தேவையான தகுதிகள்**

- செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்வதிலும், கொண்டு நடத்துவதிலும், ஒருங்கிணைப்பதிலும், பிறருடன் கலந்தாலோசிப்பதிலும், கருத்துப்பரிமாற்றலிலும் பரிச்சயம் இருத்தல்.
- இப்பதவி முதலில் 6 மாதகால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். அதன் முடிவில் நிரந்தர பதவி நீடிப்பு பற்றித் தீர்மானிக்கப்படும்.

**ஊதியம் மாதம் ரூபா 15,000/=**

**கல்வித் தகுதி, அனுபவம், திறமை ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.**

**விண்ணப்ப முடிவு நாள்:- 31.08.2016**

விலாசம்: **NAHRO**
இல.203, கண்டி வீதி, கிளிநொச்சி.

## P.P.T Express இன் மற்றுமோர் விரிவாக்கசேவை




எதிர்வரும் வெள்ளிக்கிழமை 26.08.2016 தொடக்கம் தனது சேவையை விஸ்தரிக்கின்றது. இதன் ஊடாக காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.30 மணிக்கு கொழும்பு நோக்கி தனது சேவையை தொடர்கின்றது. அதே போன்று கொழும்பு வெள்ளவத்தையில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணிகள் சேவையை விஸ்தரித்துள்ளது. அதன் வழமையான இரவு சேவைகள் வழமை போல் நடைபெறுகின்றது.

மேலும்இலங்கையின் முதற்தர துரித பொதிகள் சேவை ஊடாக வெளிநாட்டு(அனைத்து நாடுகளுக்கும்) பொதிகள் உடனுக்கு உடன் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் துரித பொதிகள் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையில் சுற்றுலா பயணத்துக்கு உரிய பஸ் சேவைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்: 077 573 1318
பருத்தித்துறை: 077 573 6003
கொழும்பு: 077 575 5175 / கொழும்பு: 011 232 0336

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், சித்த மத்திய மருந்தகம், பருத்தித்துறை மருத்துவர் செல்வி கி.சூரியா அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை கிருஷ்ணபவான்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை**

## துயர்



எமது பாடசாலையின் வருடாந்த

திருமதி
**இராசலட்சுமி சண்முகலிங்கம்**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி

யா/ சுருவில் றோ. க. த.க.

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 05.12.1981 — உதிர்வு 25.07.2016



அமரர் **பேரம்பலம் ஜெயராஜ்**
(காந்தி)
(காந்தி கராஜ் ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.)

நீயும் நானும் ஒன்றாக இருந்த
ஒவ்வொரு நிமிடங்களையும்
நினைத்து பார்த்து கொண்டிருந்தேன்
நீ என்னுடன் இல்லாத அந்த
நேரங்களில் கண்கள் ஓரம் கண்ணீர் துளிகள்
அன்பே சொல்லாமல் என்னைவிட்டு
சென்றது ஏனோ....
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கும்.

நுணாவில் கிழக்கு,
கல்வயல் வீதி, சாவகச்சேரி.

அன்பு மனைவி
ஜெ.சஞ்சியா

## இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்., ஓக. 24

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதான 4 இந்திய மீனவருக்கும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. எழுவை தீவுக்கு மேற்கே 4 கிலோ மீற்றர் கடல் மைல் தூரத்தில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் கடந்த 9 ஆம் திகதி இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து உரிய அறிவுறுத்தல் கிடைக்கவில்லை எனக் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் மன்றில் தெரிவித்தனர். இதனையடுத்து அவர்களுக்கு மறியல் நீடிக்கப்பட்டது. (த-107)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 18.08.2016 அன்று சிவபதமடைந்த

திருமதி

**இராசலட்சுமி சண்முகலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் இந்துக்கல்லூரி நண்பர்கள் (1984)**
**Jaffna Hindu College**
**1976 - 1984**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவாத...

சிங்கள மாணவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. "பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இனவாத சம்பவமாக இதனைப் பார்க்க வேண்டாம். திடீரென ஏற்பட்ட சிறிய மோதல் சம்பவம்" என்று பேராதனைப் பொலிஸார் தெரிவித்ததாகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர். (வ-5)

## தமிழ்...

தமிழ் மக்கள் மற் றும் தமிழ்க் கட்சியினர் விரக்தியடைந்துள்ளனர். போர் முடிவடைந்து 7 வருடங்கள் முடிவடைந்துள்ளபோதும், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பல தடவைகள் தமது விடுதலையை வலியுறுத்தி போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர். அவர்கள் பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதுடன், அவர்களுக்கான நீதியும் மறுக்கப்பட்டுள்ளது. இது அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு சாதகமாக அமையாது.

இது நீண்டகாலமாக கிடப்பில் உள்ள விடயம். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசியிருக்கின்றோம். பிரதமருடனும் கலந்துரையாடல்களை நடத்தினோம். சட்டமா அதிபர் திணைக்களத்தில் முன்னர் சில சிக்கல்கள் காணப்பட்டபோதும், அது தற்போது மாறியுள்ளது. மூன்றாவது கட்டளையிடும் நபரான நீதி அமைச்சருடன் அடிக்கடி பேச்சுக்களை நடத்தியுள்ளோம். அவர் இந்தவிடயத்தில் எதிர்மறையாக இல்லாதபோதும், அவரால் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை சாதகமாக அமையவில்லை. ஜனாதிபதி தன்னைக் கொல்ல வந்தவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கி அவரை சுதந்திரமாக நடமாட அனுமதித்தார். அது அவருடைய சிந்தனை. ஏன் மற்றவர்கள் வித்தியாசமாக நடத்தப்படுகின்றனர். போர் முடிந்து 7 வருடங்கள் முடிவடைந்துள்ளன. அவர்களின் விடுதலைக்கான நியாப்படுத்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இது தொடர்பான தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என அரசு ஜெனிவாவில் உறுதிமொழி வழங்கியது. இயற்கையான நீதியை வழங்க முடியாது.

கடந்த ஜனவரி மாதம் 117 பேருடைய வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்காக சிறப்பு நீதிமன்றமொன்று அமைக்கப்பட்டது. மார்ச் மாதத்துக்குள் தீர்மானமொன்றை எடுப்பதாக அரசும், சட்டமா அதிபர் திணைக்களமும் உறுதிமொழி வழங்கியபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தச் சட்டம் நீதியை வழங்காது என உங்கள் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்ன தராதரத்தில் இருந்தாலும் விடுவிக்கப்படவேண்டும். அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்காவிட்டாலும் அல்லது தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும் விடுவிக்கப்பட வேண்டும்.

மோசமான விடயம் என்னவெனில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக பார்க்கப்படுகின்றனர். கே.பியை ஏன் கைது செய்யவில்லை எனக் கைதிகள் கேட்கின்றனர். அவர் இந்த அரசுக்கு சாதகமாக நடந்துகொள்வதாலா?

அதேபோல கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தவர் மற்றும் அமைச்சுப் பதவியை வகித்தவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இவர்களைவிட தாம் மோசமான குற்றம் இழைத்தோமா என்பதை அறியவேண்டியிருப்பதாக தமிழ் அரசியல் கைதிகள் கூறுகின்றனர். அரசு பலவீன மானவர்களை கைதுசெய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்துள்ளது. இது தொடர முடியாது. 1970 மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் கிளர்ச்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். மகிந்த அரசின் காலத்தில் 11 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். எனினும், இந்த அரசு ஆட்சிக்கு வந்து 18 மாதங்கள் கடந்துள்ளபோதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் இன்று (நேற்று) நானும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம். இதில் நீதி அமைச்சரும் கலந்து கொண்டிருந்தார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதி அமைச்சருடன் சந்திப்பொன்று உள்ளது. இதில் சட்டமா அதிபரும் கலந்து கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராய இருக்கின்றார் – என்றார் சம்பந்தன்.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகளுள் பெரும்பாலனவர்களுக்கு எதிராக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளே இருக்கின்றன. வழக்குத் தாக்கல் செய்து கிடைக்கும் தண்டனைக்கும் அதிக காலம் அவர்கள் தண்டனை அனுபவித்துவிட்டனர். இனியும் இந்த நாட்டுக்கு பயங்கரவா தடைச் சட்டம் பொருந்தாது. ஆகவே, அதை நீக்கிவிட்டு, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்" என்று ஜே.வி.பியின் நாடா ளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க கோரிக்கை விடுத்தார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜும் இதனையே வலியுறுத்தினார். எதிர்வரும் வெள்ளியன்று சம்பந்தன் நீதி அமைச்சர் விஜயதாஸராஜபக்ஸவைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி சுந்தரம்



தோற்றம் 1926.09.15 — மறைவு 2016.08.23

நாரந்தனையைப்பிறப்பிடமாகவும், 82/22 செட்டித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சுந்தரம் நேற்று (23.08.2016) செவ்வாய்க் கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நாகம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளைசுந்தரம் (முன்னாள் கங்கா ஸ்ரோர்ஸ் தெகிவளை உரிமையாளர்) அவர்களின் அன்புமனைவியும் வசந்திமாலா (முன்னாள் ஆசிரியர் சென்.மேரிஸ் வித்தியாலயம் OLR) இன் பாசமிகு தாயும் சத்தியகுமாரன் இன்அன்பு மாமியும் சுகஸ்தன், பிறேமஜா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிவானி, சிவோன் ஆகியோரின் பூட்டியும் பொன்மணி, சண்முகராசன், பராசக்தி ,சொக்கலிங்கம், சகுந்தலாதேவி, சண்முகராயன் காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை சண்முகம் ,திருச்செல்வம் ,தங்கலெட்சுமி, சபாரெட்ணம், சிந்தாமணி, தம்பையா, மங்கையர்க்கரசி, கிருஸ்ணபாலா ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவகாமன், . குமாரசாமி, ரூபாவதி, ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, நல்லையா, சதாசிவம், அப்புச்சாமி ஆகியோரின் மச்சாளும் சாந்தாதேவி, ஜெயா, றசனா, ஜெயந்தா,ஜீவா, சாந்தன், தீபன், சக்தி, அகிம்ஷா, ரஞ்சினி காலஞ்சென்ற சிறீஸ்காந்தன் மற்றும் தாசன், தயாளன், ராகினி, சகிலா, அகிலன், சுமங்கலா, அனுசலா, கபிலன், செல்வன் காலஞ்சென்ற குமரன் மற்றும் கவிதா, அமுதா, வவா ஆகியோரின் பெரியம்மாவும் சுகி, சுகிர்தா, ரஜி, மயூரன், ரூபன், கீதா, ஜாயினி ஆகியோரின் அத்தையும் தவமணிதேவி, மகேஸ்வரி, பத்மநாதன், தங்கவேல், நடேஸ்வரி காலஞ்சென்றவர்களான வசந்தன், கணேஷ், சிவம் மற்றும் தனம், நாகேஸ், விக்கினேஸ், ஜெயம், மல்லிகா, சாந்தா, ஜெகன் ஆகியோரின் சீனிஅம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

82/22 செட்டித்தெரு, நல்லூர்.
021 221 9648

தகவல்:
சத்தியகுமாரன் (மருமகன்),
மாலா (மகள்)

## மரண அறிவித்தல்

### மேரி அன்னரெத்தினம் புவனேந்திரன்



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிஅன்னரெத்தினம் புவனேந்திரன் 22.08.2016 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நீக்கிலாப்பிள்ளை - றோசம்மாதம்பதியரின் மூத்த புதல்வியும் புவனேந்திரத்தின் அன்பு மனைவியும் திருமதி ஜெனற் றொஷானி (ஆசிரியை யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.) திருமதி ஜெனற்டிலானி (பிரான்ஸ்) காலஞ்சென்ற சாள்ஸ் அமிர்தராஜ் ஆகியோரின் பாசமிகு தாயும் யூட்தயாவதி. வாசு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமியும் நிறோஜன், ஹர்சனா, சஹானன், புகழன், அக்ஷயா (டலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிலோமினா ராஜசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.08.2016) வியாழக் கிழமை காலை 9 மணியளவில் 270 /1 அடப்பன் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து இரங்கல்திருப்பலிக்காக ஒட்டகப்புலம் புனிதஅமலஉற்பவ ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் அமலஉற்பவ ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

270/1 அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.
(மடத்தடி தண்ணீர்தாங்கி அருகில்)

தகவல் :
யூட் தயாபதி (மருமகன்)
தயா - 077 8908180
ஜெனற் றொஷானி -
077 5914096

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா வெள்ளையன்



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா வெள்ளையன் அவர்கள் 23.08. 2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மினாசி வெள்ளையனின் அன்பு மனைவியும், சோதிமலர், காலஞ்சென்ற சோதிதாஸ் மற்றும் முரளிதாஸ் (லண்டன்), கோகிலாமலர், கமலதாஸ் (வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநேசன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், த.தே. கூ), விஜி (லண்டன்), மனோகரன் (முன்னாள் ப.நோ. கூ. சங்கக்கிளை முகாமையாளர், சாவகச் சேரி), சுசிகலா (ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி வலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், திருக்குமார், கோபாலகுமார், தாட்சா யினி, தருக்ஷனி, சாதுரியா, தூயவன், கர்ணிகா, அருட்சயா, விகாஸ், ஆர்ணியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யார்க்கரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (25.08.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யார்க்கரு,
[illegible]

தகவல்:
[illegible] (மகன்)
077 899 0131, 077 235 3064

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இராமச்சந்திரன்

(ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபை ஜனாதிபதி விருது பெற்ற சாரதி, கோண்டாவில் டிப்போ)

பிறப்பு 1942 . 12 . 29



இறப்பு 2016 . 08 . 23

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராமச்சந்திரன் நேற்று (23.08.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற மீனாம்பாள் மற்றும் மங்களேஸ்வரி ஆகியோரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற மீரா மற்றும் இரமணன் (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காயத்திரிதேவி, சாவித்திரிதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகலக்ஷ்மி இன் அன்பு மாமனும் காருண்யனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மீசாலை வடக்கு, மீசாலை.
077 3126443, 077 1517901

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயின்ஸ் பார்க் மீது கடும் விமர்சனங்கள்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் நான்காவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்ற குயின்ஸ் பார்க் ஓவல் மைதானத்தின் மீது கடுமையான விமர்சனங்கள் பன்னாட்டு ஊடகங்களால் முன்வைக்கப்பட்டன.

முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் முதலாவதிலும், மூன்றாவதிலும் இந்திய அணி வெற்றிபெற்றது. இரண்டாவது, நான்காவது ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன. ரிடினிடாட் அன்ட் ரொபாக்கோவிலுள்ள குயின்ஸ் அபார்க் ஓவல் மைதானத்தில் நான்காவது டெஸ்ட் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் மொத்தம் 22 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டன. முதல் நாளின் முதல் செசனில் பலத்த மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது நாள்களில் மழை பெய்யாவிட்டாலும் ஈரப்பதம் காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. நான்காவது நாளில் மீண்டும் மழை. இறுதி நாளில் ஈரப்பதம் என ஆட்டம் சமநிலை கண்டது. மைதானத்தில் சிறந்த வடிகால் அமைப்பு இல்லாதமையும், ஈரப்பதத்தை உலர்த்தும் உபகரணமும் இல்லாதமையே ஆட்டம் கைவிடப்பட பிரதான காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையிலேயே இந்த மைதானத்தின் கட்டுமானங்கள் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும், பன்னாட்டு ஊடகங்களும் அதிருப்தி தெரிவித்துள்ளன. (ம)

# அஸ்வின் சாதனை

இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வின் அதிக தொடராட்ட நாயகன் விருதுகளைக் கைப்பற்றியதன் அடிப்படையில் புதிய சாதனையைப் படைத்தார்.

இந்திய வீரரொருவர் டெஸ்ட் தொடரில் 5 தொடராட்ட நாயகன் விருதுகளைக் கைப்பற்றியமையே இதுவரை சாதனையாக இருந்தது. இதை சச்சினும், சேவாக்கும் படைத்திருந்தனர். சச்சின் 74 தொடர்களிலும், சேவாக் 39 தொடர்களிலும் இந்த மைல்கல்லை அடைந்திருந்தனர். தற்போது இந்தச் சாதனை அஸ்வினால் தகர்க்கப்பட்டது.

நடைபெற்றுமுடிந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் வென்ற தொடராட்ட நாயகன் விருதுடன் மொத்தம் 6 விருதுகளை அஸ்வின் அள்ளியுள்ளார். இதற்காக அஸ்வினுக்கு வெறும் 13 தொடர்களே தேவைப்பட்டன. (ம)





# வெளியானது டெஸ்ட் தரப்படுத்தல்; முதலிடத்தை பிடித்தது பாகிஸ்தான்

பன்னாட்டு ஆட்டங்களுக்கான புதிய டெஸ்ட் தரப்படுத்தல் நேற்று வெளியானது. டெஸ்ட் வரலாற்றில் முதல்முறையாக முதலிடம் பிடித்து பாகிஸ்தான் தனது ஆகச்சிறந்த அடைவை நிலைநாட்டியது. இலங்கைக்கு ஆறாம் இடம் கிடைத்தது.

தரப்படுத்தலில் நேற்றுமுன்தினம் வரை இந்தியாவே முதலிடத்தில் நீடித்தது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றிருந்தால் தொடர்ந்தும் அந்த இடத்தைத் தக்கவைத்திருக்கலாம். ஆட்டம் சமநிலையில் முடித்தால் இந்தியா இரண்டாவது இடத்துக்கு பின்தள்ளப்படும் என்ற நிலை இருந்தது. ஆட்டத்தின் முதல் நாளின் முதல் செசனில் இருந்து மழை குறுக்கிட இறுதி டெஸ்ட் சமநிலை கண்டது. இதனையடுத்தே பாகிஸ்தான் முதலிடம் பிடித்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பாகிஸ்தான் முதலிடத்துக்கு முன்னேறியது இதுவே முதல் தடவை. இதன்படி அந்த அணி 111 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 110 புள்ளிகளுடன் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

108 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்திலும், 108 புள்ளிகளுடன் இங்கிலாந்து நான்காவது இடத்திலும் உள்ளன. இந்த இரு அணிகளும் ஒரே புள்ளியைப் பெற்றிருந்தாலும் சராசரியின் அடிப்படையிலேயே ஆஸிக்கு மூன்றாம் இடம் கிடைத்தது. 99 புள்ளிகளுடன் நியூசிலாந்து ஐந்தாம் இடத்தில் உள்ளது.

ஆறு முதல் பத்து வரையான இடங்களுக்குள் முறையே இலங்கை, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய அணிகள் உள்ளன. (ம)



# இலங்கை - ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டம் இன்று

இலங்கை – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. எனவே தொடரைக் கைப்பற்ற எஞ்சியுள்ள நான்கு ஆட்டங்களில் மூன்று ஆட்டங்களில் வெற்றிபெறவேண்டிய கட்டாயம் இலங்கைக்கு உள்ளது. இன்று ஆரம்பமாகும் ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றால் இலங்கைக்கு நெருக்கடி அதிகமாகும். எனவே இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் இலங்கைக்கு உள்ளது. (ம)

# ஹிங்கிஸை வீழ்த்தினார் மிர்சா

அமெரிக்காவில் இடம்பெற்ற சின்சினாட்டி பகிரங்க ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் ஆட்டத்தில் தனது புதிய இணையான செக் குடியரசின் பார்போராவுடன் களமிறங்கிய இந்தியாவின் சானியா மிர்ஸா, தனது முன்னாள் இணையான சுவிற்சர்லாந்தின் ஹிங்கிஸ், அமெரிக்காவின் கொகோ இணையை வீழ்த்தினார்.

மிர்சா, ஹிங்கிஸ் இணை பிரிந்த பின்னர் அவர்கள் இருவரும் எதிர்கொள்ளும் முதலாவது தொடராக சின்சினாட்டி அமைந்துள்ளது. எனவே மிர்சா, ஹிங்கிஸ் இருவருக்கும் இடையிலான ஒரு போட்டியாகவும் இந்த ஆட்டம் கணிக்கப்பட்டது. ஆட்டத்தின் முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய மிர்சா, பார்போரா இணை, தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது. மொத்தத்தில் ஹிங்கிஸை வெளியேற்றி விட்டார் மிர்சா. (ம)



# சிந்துவுக்கு சொகுசுக் கார் வழங்கினார் சச்சின்

ரியோ ஒலிம்பிக் தொடரில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி.சிந்துவுக்கு சச்சின் ரென்டுல்கர் பி.எம்.டபிள்யூ காரைப் பரிசளித்துள்ளார்.

ஒலிம்பிக் தொடரில் இந்திய வீராங்கனைகளின் ஆகச்சிறந்த அடைவுமட்டமாக வெண்கலப் பதக்கமே இருந்தது. ஆனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாற்றை மாற்றினார் பி.வி.சிந்து. இதனையடுத்து இவரது சாதனையைக் கௌரவிக்கும் முகமாக மத்திய, மாநில அரசுகள் பல விருதுகளை வழங்கிக் கௌரவித்தன. இதுவரை 12 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) இரண்டு வீடுகள், கார்கள், அரச வேலைகள் என்பன பரிசாக வழங்கப்பட்டன. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவானான சச்சின் பி.எம்.டபிள்யு. ரக சொகுசுக்கார் ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளார். (ம)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org